இலங்கை அரசாட்சி "கசெற்" பத்திரிகை.

CEYLON GOVERNMENT GAZETTE, No. 6,081, October 27, 1905.

# TAMIL TRANSLATIONS OF NOTIFICATIONS.

[Proclamation bringing into operation By-Laws of the Municipality of Colombo.]

பெரிய பிரித்தானியாவின் ஐக்கிய இராச்சியத்துக்கும், ஐர்லந்து தேசத்துக்கும் சமுத்திரத்துக்கப்பாலுள்ள பிரித்தானியா இராச்சியங்களுக்கும் அரசரும் சமயபாதுகாவலருமாகிய மகத்துவம்பொருந்திய ஏழாவது எட்டுவேர்ட் மன்னர் அவர்கள்பேரால்.

இலங்கைக்கும் அதற்குக் கீழ்ப்பட்ட தேசங்களுக்கும் உபதேசாதிபதியும் சென்ஸ் மைகேல் சென் ஜோஜ் என்னும்
அதிபிரசித்திபெற்ற ஒடரைச்சார்ந்த பட்டவர்த்தனரும் பிரவுமாகிய மாட்சிமைபொருந்திய
அலக்ஸ்சாண்டர் மறை ஆஸ்மோர், சீ.எம்.ஜி., அவர்களால் பிரசித்தஞ்செய்யப்படும்

## மகா விக்கியாபனம்.

அலக்சாண்டர் மறை ஆஸ்மோர்.

1901 ம் ஆண்டின் 8 ம் இலக்கச்சட்டத்தில் 4 ம் பிரிவிலே நகரசங்கத்தார் 1887 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தின் ஒழுங்குகளை நடத்துவதற்கு அவசியமானவையென்று அல்லது தகுதியானவையென்று காணும் துணைப்பிரமாணங்களை காலத்துக்குக்காலம் செய்யவும், செய்ததை அழிக்கவும், திருத்தவும், மாற்றவும், விகற்பிக்கவும், அவைகளை மறுத்து நடக்கும் குற்றங்களுக்கு 20 ரூபாய்க்கு மேற்படாத அபராதம் விதிக்கவும் கூடும் என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது; அதனாலும்,

மேற்சொன்ன 1901 ம் ஆு 8 ம் இலக்கச்சட்டத்து 6 ம் பிரிவின் 1 ம் 2 ம் கீழ்ப் பிரிவுகளினாலே எந்தத் துணைப்பிரமாணத்தையாவது அவைகளை நீக்குதலாவது, திருத்தலாவது, மாற்றுதலாவது, அல்லது விகற்பித்தலாவது மந்திராலோசனைச் சபையாருடைய யோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்படும் வரைக்கும் பெலனுடையவைகளாகா. அப்படி உறுதிப்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்கள் அரசினருடைய "கசெற்" பத்திரிகையில் இங்கிலீசு, தமிழ், சிங்களம் என்னும் முப்பாஷைகளிலும் இருமுறை அடுத்து பிரசுரஞ்செய்யப்பட்டு, அப்பொழுது நடைபெற்றுவரும் சட்டநிருபணச் சபையில் அப்பொழுது அச்சபை நடைபெறுவிட்டால், அதற்கு அடுத்தமுறை கூடும் சட்டநிருபணச் சபையில் வைக்கப்படும், அங்ஙனம் வைக்கப்பட்டு நாற்பது நாட்களுள் அச்சொல்லிய சட்டநிருபணச் சங்கத்தார் அத்துணைப்பிரமாணங்களுளேதைக் குறித்தாவது ஆட்சேபனைசெய்து அவைகளைத் திருத்தி அல்லது மாற்றினால் அப்படி அச்சொல்லிய சட்டநிருபணச் சங்கத்தாரால் திருத்தப்பட்ட துணைப்பிரமாணங்களும் திருத்தப்படாத அல்லது மாற்றப்படாத துணைப்பிரமாணங்களும் அரசாங்க "கசெற்" பத்திரிகையில் இங்கிலீசு, சிங்களம், தமிழ் என்னும் முப்பாஷைகளிலும் இருமுறையடுத்துப் பிரசித்தஞ்செய்யப்பட்டுப் பெலனுடையனவாய் குறித்த சட்டத்தில் விதிக்கப்பட்டபடி கட்டுப்பாடும் பெலப்பும் உடையனவாய் நியாயப்பிரமாணமெனக் கவனிக்கப்படும் என்று நிருபிக்கப்பட்டிருக்கிறது; அதனாலும்,

2. இவ்வாறே இவ்வட்டவணையிற் காணப்படும் துணைப்பிரமாணங்கள் குறித்த 1901 ம் ஆு-த்து 8 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்திற் முற்கூறிய 4 ம் பிரிவின்படி ஒழுங்குகளுக்கிணங்க கொழும்பு நகரசங்கத்தாரால் உண்டாக்கப்பட்டு 6 ம் பிரிவின்படி இவை மந்திராலோசனை சபையாரது யோசனையோடு தேசாதிபதியவர்களால் உறுதிப்படுத்தப்பட்டன, மேலும் 1905 ம் வருஷம் பெப்ரவரிமாசம் 17 ந் 24 ந் திகதிகளில் அரசாங்க "கசெற்" பத்திரிகையில் இங்கிலீசு, சிங்களம், தமிழ் என்னும் முப்பாஷைகளிலும் அடுத்து இருமுறை பிரசித்தஞ்செய்யப்பட்டு அப்பொழுது நடைபெற்றுவந்த சட்டநிருபணச் சபையில் வைக்கப்பட்டன; அதனாலும்,

இவ்வாறு சட்டநிருபணச் சபையில் வைக்கப்பட்டபின் நாற்பது நாட்களுள் குறித்த துணைப்பிரமாணங்களை அச்சட்டநிருபணச் சபையார் திருத்தவும் இல்லை, அழிக்கவும் இல்லை; அதனாலும்,

இப்பொழுது கீழே காணப்படும் அட்டவணையில் குறிக்கப்பட்டிருக்கும் துணைப்பிரமாணங்களை உபதேசாதிபதியாகிய யாம் மேற்சொல்லிய நமக்குக் கிடைத்த தத்துவத்தைச் செலுத்தி பிரசித்தஞ்செய்வதை யாவரும் அறிந்துகொள்ளக்கடவது.

இலங்கைத்தீவில் எங்கள் கர்த்தருடைய 1905 ம் வருஷம் ஐப்பசிமாதம் 12 ந் தேதி நுவரெலியாவில் கொடுக்கப்பட்டது.

மகோத்தமரவர்களினது கட்டளைப்படி,

ஜி. எம். பௌலர்,
அக்டிங் கலோனியல் சக்கிரெத்தார்.

பட்டிராலோசனைச் சபையினது ஆலோசனையுடன் தேசாதிபதியாரால் உறுதிப்படுத்தப்பட்ட கொழும்பு நகரசங்கத்தாரால ஏற்படுத்தப்பட்ட துணைப்பிரமாணங்களாவன :—

௧௮௬௫ ம் ௵ ௧௭ ம் இலக்கச்சட்டத்து ௩—௬ அதிகாரங்களும், ௮—௧௧ அதிகாரங்களும், ௧௩—௧௯ அதிகாரங்களும், ௨௮, ௩௦—௨௫ அதிகாரங்களும் உட்பட.

௧௮௬௭ ம் ௵ ௬ ம் இலக்கச்சட்டம் ௬, ௭ ம் அதிகாரங்கள் உட்பட.

௧௮௮௦ ம் ௵ ௨௫ ம் இலக்கச்சட்டம் ௫ ம் அதிகாரம் உட்பட.

௧௮௮௬ ம் ௵ ௬ ம் இலக்கச்சட்டம் ௧௨ ம் அதிகாரம் உட்பட.

௧௮௯௯ ம் ௵ ௬ ம் இலக்கச்சட்டம் ௧௭ ம் அதிகாரம் உட்பட.

௧௮௯௭ ம் ௵ ௧௫ ம் இலக்கச்சட்டம் ௧௬ ம் அதிகாரம் உட்பட.

---

## 1 ம் அதிகாரம்.

### உத்தியோக நியமனம்.

*உத்தியோகமும் சம்பளமும்.*

1. காலத்திற்குக்காலம் (நகரசங்கத்தின் அங்கத்தவர்கள்) தீர்மானஞ்செய்து, உத்தியோக இடங்கள் (புதிதாய்) உண்டுபண்ணவும், அப்படி உண்டுபண்ணிய இடத்திற்கு சங்கத்தார் சரியென்று நினைக்கிற சம்பளம் நியமிக்கவும் நகரசங்கத்தாருக்குத் தத்துவமுண்டு.

இதிற் சொல்லிய ஏதாவது நகரசங்கத்தலைவர், வருமானத்திற்கும் வரிக்கும் ஏற்பட்ட காரிய சங்கத்தாரின் சம்மதத்தோடு அவசரம் வேணுமென்று காணும்போது வேறு உத்தியோகஸ்தரை, வருமானத்திற்கும் வரிக்கும் ஏற்பட்ட காரியசங்கத்தார் சரியென்று நினைக்கிற சம்பளம் கொடுத்து நியமிக்காதபடி தடைபண்ணமாட்டாது.

*உத்தியோகஸ்தரின் கடமைகள்.*

2. நகரசங்கத்தின் சக்கிரெத்தார், மற்றைய உத்தியோகஸ்தர் வேலைக்காரர் முதலிய சகலரும் நகரசங்கத்தலைவர் காலத்திற்கு காலம் விதிக்கிற கடமைகளை அவர் விதிக்கிற மணித்தியாலங்களிலே செய்தல் வேண்டும்.

*உத்தியோக நியமனங்கள்.*

3. பின்வரும் உத்தியோக இடங்கள் இப்போது ஏற்பட்டிருக்கின்றன :—

நகரசங்க சக்கிரெத்தாருடைய இடம்.
நகரசங்க இன்ஜினீரினிடம்.
நகரசங்க இன்ஜினீரின் உதவிக்காரருடைய இடம்.
நகரசங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற வயித்தியருடைய இடம்.
நகரசங்கத்திற்கு ஏற்பட்டிருக்கிற வயித்தியருடைய உதவிக்காரருடைய இடம்.
நகர வெளிச்சத்தின் மேல்விசாரணைக்காரருடைய இடம்.
நகர கூறுபாடு செய்கிறவருடைய இடம்.
மிருக வயித்தியரினிடம்.
காந்த சம்பந்தமான வேலைகளுக்கு யோசினை சொல்லுகிறவருடைய இடம்.
புறக் கட்டடங்கள் மேல்விசாரணை செய்கிறவருடைய இடம்.

பின்வரும் உத்தியோக இடங்கள் இத்தால் புதிதாய் உண்டாக்கப்பட்டிருக்கின்றன :—

வேலைகள் பார்க்கும் இன்ஜினீரின் இடம்.
சூஸ்த்திர வேலைகள் பார்க்கும் இன்ஜினீரின் இடம்.
பொதுவாய் சுற்றுஞ்சாற்றுதலின் மேல்விசாரணைக்காரரினிடம்.
வருமான உத்தியோகஸ்தரினிடம்.
நகரசங்க வரி ஏற்படுத்துகிறதற்கு நிலமளப்போரினிடம்.
நெருப்பு நிருத்துகிற வேலைகளுக்கு அதிகாரியினிடம்.

---

## 2 ம் அதிகாரம்.

### (நகரசங்கத்தார்) காரியம்பார்க்கு மிடம்.

*சங்கத்தவரின் முதன்மை முறை.*

1. நகரசங்கத்தைச்சேர்ந்த கருமங்களிலெல்லாம் அங்கத்தவரின் முதன்மை முறை, சிரேஷ்டம், பின்வரும் முறைப்படி வனிததல வேண்டும் :—

முதல், நகரசங்கத்தலைவர், அதன்பின் முன்னிய மமைம் அல்லது தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர், அவருக்குப்பின் நியமனம் அல்லது தெரிவுசெய்யப்பட்டவரிலும் முதன்மை சிரேஷ்டம் உடையவராவார். முன்னமே சங்கத்தில அங்கத்தவராயிருப்பவர் மறுபடியும் நியமனம் அல்லது தெரிவுசெய்யப்படும் காலத்தில் அவருக்கு முதன்மை சிரேஷ்டம் முதன் முதல் அவர் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட காலந்துவங்கி எண்ணப்படும்.

*சங்கத்தவரின் கடமை.*

2. (சங்கம கூடியிருக்கும்போது) காரியங்களை முறையே நடப்பிப்பதும் ஒழுங்குமுறையில் தர்க்கம்வரும்போது அத்தர்க்கத்தை முடிவாக்குவதும் சங்கத்தலைவர் கடமை.

*தவணை போடப்படும் கூட்டங்கள்.*

3. சங்கத்தின் யாதாமொரு கூட்டம் இன்னொரு நாளைக்குக் கூடுவதாகத் தவணைப்போட்டால், அப்படி கூடுந் தேதி, நேரம், இடத்தைக்குறித்து எழுத்து மூலமாய் ஒவ்வொரு அங்கத்தவர்க்கும் அக்கூட்டம் கூட 24 மணித்தியாலத்திற்குமுன் நகரசங்கச் சக்கிரெத்தார் அறிவித்தல் செய்ய வேண்டும், அல்லது அவருடைய வாசஸ்தானத்தில் அவ்வறிவித்தலைக் கொடுத்துவிடல் வேண்டும். ஆனால் அடுத்த நாளைக்குத் தவணைபோடும்போது அப்படி அறிவித்தல் வேண்டியதில்லை.

*நகரசங்கத்தாருடைய கந்தோர்.*

4. நகர சங்கத்தார் கந்தோர், நகரசங்கத்தார் சாதாரணமாய்க் கூட்டம் கூடும் இடத்திலேயே இருத்தல் வேண்டும். தினந்தோறும் 10 மணிக்கும், 5 மணிக்கும் இடையிலேயே நகரசங்கம் கூடிப்பார்க்கிற வேலை நடைபெறல் வேண்டும். (ஆனால், விடுதலை நாள்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மேற்சொல்லிய வேலை நிறுத்தல் வேண்டும்). சனிக்கிழமைதோறும் 10 மணி முதல் 2 மணி வரையில் வேலை நடைபெறல் வேண்டும்.

*முறை முறையே நடக்கவேண்டிய க்ருமங்கள்.*

5. நகரசங்கத்தார் கூட்டங்களில் வேலை பின்வரும் முறையே நடத்தல் வேண்டும் :—

*முற்கூட்ட ஞாபகக் குறிப்பு.*

(a) முன் நடந்த கூட்டத்தின் ஞாபகக் குறிப்புகளை வாசித்து அவசரமென்று கண்டால் திருத்தி உறுதிப்பண்ணல் வேண்டும் ;

*விண்ணப்பம் பெட்டிஷன் முதலியவை.*

(b) சங்கத்தின் விலாசத்திற்கு அனுப்பப்பட்டு, சங்கத்தின் ஒரு அங்கத்தவரால் கிரமப்படி அறிவித்தல் கொடுக்கப்பட்ட விண்ணப்பங்கள், பெட்டிஷன்கள், முறைப்பாடுகள், கடிதங்கள் முதலியவை சங்கத்தார் முன்பாக வாசிக்கப்பட்டு கவனிக்கப்படவேண்டும் ;

*வினாக்கள்.*

(c) இதற்குமுன் கொடுக்கப்பட்ட அறிவித்தலைப்பற்றி வினாக்கள் ;

*மோஷன்.*

(d) மோஷன் ;

*கொமிட்டியாரின் றிப்போர்ட்டுகள்.*

(e) கொமிட்டியாரின் றிப்போர்ட்டுகள் ;

*கூட்டத்தில் நடக்கும் வேறு வேலைகள்.*

(f) (அதன்பின்) கூட்டங் கூடுதலைப்பற்றிய அறிவித்தலில் சொல்லப்பட்ட வேறெந்தக் காரியமும் கவனிக்கப்படும். ஆனால் அவசரமென்று கண்டால் இங்கே சொல்லிய முறை தவிர வேறுமுறைப்படி காரியங்கள் நடத்துகிறதானாலும் நகரசங்கம் நடத்தலாம் ;

*கணக்கு முதலியவைகள்.*

(g) வருமானம் செலவு முதலியவற்றைக்குறித்த மாதாந்தக் கணக்கும் சேர்க்கப்பட்ட வரிப்பணம் எவ்வளவென்றும், மற்றும் வேண்டிய சாதனங்களும் சங்கத்தார் ஆலோசனைக்குக் கொடுபடல் வேண்டும்.

*நகரசங்கம் கொமிட்டியாகுதல்.*

6. நகரசங்கமானது எந்த நேரத்திலும் எல்லா அங்கத்தவரும் சேர்ந்த ஒரு கொமிட்டியாக மாறிக்கொள்ளலாம். திரும்பவும் அக்கொமிட்டியில் நடந்த யோசனை முடிவுகளைப்பற்றி நகரசங்கமாய்ப் பேசிக்கொள்ளலாம்.

*பெட்டிஷன் முதலியவற்றில் எழுதப்பட்டிருப்பவைகள்.*

7. யாதாமொரு விண்ணப்பம் பெட்டிஷன் முதலியவற்றைக் கொண்டுவருகிற அங்கத்தவர், அவ்விண்ணப்பம் பெட்டிஷன் முதலியவற்றில் எழுதப்பட்டிருப்பது முழுவதும் தகுந்த மரியாதைக் காட்டி யெழுதப்பட்டிருக்கு மென்பதற்கு உத்திரவாதியாவார்.

*பெட்டிஷன் முதலியவைகள் கொடுத்தல்.*

8. விண்ணப்பம் பெட்டிஷன் முதலியவை நகரசங்கத்திற்குக் கொடுபடும்போது, அப்படிக் கொடுக்கிற அங்கத்தவர் அவைகளி லெழுதியிருப்பதைச் சுருக்கமாய்ச் சொல்லல் வேண்டும். ஒரு அங்கத்தவர் கேள்விப்படி இன்னொரு அங்கத்தவர் சம்மதித்து, ஆம் சொன்னபின் அந்தச்சாதனம் வாசிக்கப்படவேணுமோ வென்பது தீர்மானித்தல் வேண்டும்.

*பெட்டிஷன் முதலியவை கொடுப்போர் சொல்லுகிறதைக் கேட்டு விசாரணை செய்தல்.*

9. எங்கேயாவது நகரசங்கத்தாருடைய செய்கை, கட்டளை, நடப்புகள், ஒருவருடைய சுதந்தரம், உரித்து முதலியவைகளைத் தாக்கினால், அவர்கள் தாமாக அல்லது நியாயத்துரந்தரர் மூலமாய் விண்ணப்பம்செய்து சொல்லுவதைச் சங்கத்தார் கொமிட்டியாரிருக்கும்போது கேள்கலாம்.

*சாட்சிக்காரர்.*

10. சாட்சிகள் கேட்கவேண்டியிருந்தால், அப்படிச் சாட்சிகள் கேட்க வேண்டுமென்று விரும்புகிற விண்ணப்பக்காரர் அல்லது அங்கத்தவர் குறைந்த கணக்கு சாட்சி கேட்க மூன்று நாளைக்குமுன் அச்சாட்சிகளுடைய பெயர், வாசஸ்தானம் தொழில் இவைகளைக் காட்டுகிற ஓர் அட்டவணையைச் சக்கிடுத்தாருக்குக் கொடுக்கவேண்டும்.

*சாட்சிக்காரரை அழைத்தல்.*

11. இக்கட்டளைச்சட்டத்தின் அனுபந்தத்திலிருக்கும் A. என்கிற மாதிரியாய் ஒவ்வொரு சாட்சிக்கும், சக்கிடுத்தார் நகரசங்கத்தலைவருடைய அனுமதியுடன் சமன்ஸ் அனுப்பவேண்டும். நகர சங்கத்தலைவர் ஒரு ஆளை அந்தச் சமனை சாட்சிக்கு கொடுத்தல் வேண்டும் ; அல்லது அந்தச் சாட்சி வசிக்குமிடத்தில் வைத்துவிட்டு வரவேண்டும் ; அப்படி சமன்ஸ் கொடுக்கிறது அச்சாட்சி வரவேண்டிய நேரத்திற்குக் குறைந்த பக்ஷம் 48 மணித்தியாலத்திற்குமுன் கொடுக்கவேண்டும்.

*பெற்றிஷன் முதலியவற்றைக் குறித்த சாட்சி.*

12. ஒவ்வொரு சாட்சியும் சத்தியம்செய்து அல்லது உறுதிபண்ணியே சாட்சிசொல்லவேண்டும், அப்படிச் சொல்லும் சாட்சியை சக்கிடுத்தார் யெழுதி சாட்சிக்கு வாசித்துக்காட்டல் வேண்டும். சாட்சி சொன்னவர் வேண்டுமாகில் அதைத் திருத்திக்கொள்ளலாம், அல்லது கூட்டிச் சொல்லி யெழுதுவிக்கலாம். அப்படி திருத்தல் கூட்டுதல் செய்யாதிருந்தால், அச்சாட்சி (சக்கிடுதாரால) எழுதப்பட்டபடியே இருத்தல் வேண்டும், மாறுதலிருக்கப்படாது. நகரசங்கத்தலைவருக்குச் சத்தியம் அல்லது உறுதிப்பண்ணுதல் செய்விக்கத் தத்துவமுண்டு.

*கேள்வி கேட்டல்.*

13. யாதாமொரு கேள்வி உண்டாகும்போது, அக்கேள்வியை விளங்கப்படுத்த அவசரமென்று காண்கிற அளவுக்கு மேற்பட யாதாமொரு உத்தரிப்பு, அபிப்பிராயஞ் சொல்லுதல், சம்பவத்தைக் குறித்துச்சொல்லுதல் முதலியவை நடக்கப்படாது. யாதாமொரு அங்கத்தவரும், அந்தக் கேள்வியைக் குறித்த சங்கதி அல்லது காரியத்தைத் தர்க்கித்துப்பேசுதலாகாது.

*கேள்வியைப்பற்றித் தீர்மானித்தல்*

14. யாதாமொரு மோஷன் ஒரு அங்கத்தவர் கேள்விப்படி இன்னொரு அங்கத்தவர் சம்மதஞ்சொல்லி (யெல்லா அங்கத்தவரும்) தர்க்கித்தப்பின் சங்கத்தலைவரால் அங்கத்தவரின் மிகுதியானபேருடைய தீர்மானத்திற்கு விடப்படல் வேண்டும்.

*இன்னுமோர் சங்கத்தவர் சம்மதியாத மோஷன்.*

15. இன்னுமோர் சங்கத்தவர் சம்மதஞ்சொல்லாத மோஷன் ஒன்றுந் தர்க்கத்தில் வரப்படாது. ஞாபகக் குறிப்புகளோடு யெழுதவும்படாது.

*மோஷனை வேண்டாமென்று விடல்.*

16. யாதாமொரு அங்கத்தவர் தாம்செய்த மோஷனை சங்கத்தாருத்திரவுடன் வேண்டாமென்று விடலாம்.

*தர்க்கம் நடத்தும் விதம்.*

17. ஒவ்வொரு அங்கத்தவரும் பேசும்பொழுது, யெழுந்துநின்று அக்கிராசனரை நோக்கி பேசல் வேண்டும்.

*இரண்டு பேர் ஒரேமுறையில் பேச எழும்புதல்.*

18. முதல் எழும்புகிற அங்கத்தவருக்கே பேச உரித்துண்டு, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர் ஒரே முறையில் பேச யெழுந்துநின்றால், அக்கிராசனர் தன்னெண்ணத்தில் யாருக்கு முதல்பேச உரித்திருக்கிற தென்பதைத் தீர்த்து அவரைப் பேசும்படி சொல்லல் வேண்டும்.

*அங்கத்தவர் ஒவ்வொருவரும் ஒரே மோஷனைப்பற்றி ஒரேதரம் மாத்திரம் பேசலாம்.*

19. எதுமொரு மோஷனைக் குறித்து வாக்குவாதம் செய்யும்போது ஒவ்வொரு அங்கத்தவரும் ஒரு முறைக்கு மேலே பேச இடமில்லை; ஆனால் தாம் சொன்னதை விளங்கப்படுத்தலாம். கொமிட்டியாரிருந்து பேசும்பொழுதும் ஒருமுறைக்கு மேற்பட பேசலாம். மோஷன் கொண்டுவருகிற ஒவ்வொரு அங்கத்தவரும் (கற்றில்) மறுமொழியாகப் பேசலாம், ஆனால் திருத்தல் மோஷன் கொண்டுவருபவர் அப்படிப் பேசல் கூடாது.

*தகாத நோக்கங்களைப்பற்றி சொல்லுதல்.*

20. (யாதாமொரு அங்கத்தவரிடத்தில்) தகாத நோக்கமுண்டென்று (இன்னொரு அங்கத்தவர் சொன்னால்) அது மிகவும் ஒழுங்கீனமான நடத்தையென்று கவனிக்கப்படும். சங்கத்தில் மிகுதியானபேர் வேண்டுமென்று நினைத்தால் அப்படிப்பட்ட நடத்தையைச் சங்கத்தாரின் ஞாபகக் குறிப்புகளில் எழுதி வைக்கவேண்டும்.

*தர்க்கத்தவணை போடல்.*

21. எந்த விஷயத்தைக் குறித்தாவது தர்க்கம் நடக்கும்போது எந்த நேரத்திலாவது ஒரு அங்கத்தவர் அதைத் தவணைபோட்டு வைக்கும்படி கேட்க இன்னொரு அங்கத்தவரும் சம்மதம் சொன்னால் உடனே சங்கத்தின் மிகுதியான பேருடைய தீர்மானத்திற்கு அக்கேள்வியை விடல் வேண்டும்.

*மோஸன் எழுத்திலிருக்கவேண்டும்.*

22. ஒவ்வொரு அங்கத்தவரும் தாம் கொண்டுபோகிற மோஸனை அல்லது திருத்தல் மோஸனை சக்கிடுத்தாருக்கு எழுத்தில் கொடுக்கவேண்டும்.

*திருத்தல் மோஸன்.*

23. ஏதாவதொரு திருத்தல் மோஸன் தர்க்கப்படும்போது அதைத் திருத்த இன்னொரு திருத்தல் மோஸன் வரப்படாது. ஆனால் அந்தத் திருத்தல் மோஸன் முதல் மோஸனுடன் பின்னொரு திருத்தல் மோஸன் உண்டாக்கி தர்க்கிக்கப்படலாம்.

*அங்கத்தவர் சம்மதம் சம்மதவீனஞ் சொல்லவே வேண்டும்.*

24. யாதாமொரு விஷயத்தைப்பற்றி சம்மதம் சம்மதவீனம் கேட்கும்போது சமுகமாயிருக்கிற ஒவ்வொரு அங்கத்தவரும் தமது சம்மதம் சம்மதவீனஞ் சொல்லல்வேண்டும். எப்படியெனில் கடைசியாய்த் தெரிவுசெய்யப்பட்டவர் முதல்முறை முறையே ஒவ்வொருவரும் சம்மதம் சம்மதவீனஞ் சொல்லல் வேண்டும். அப்படிச் சொல்லுவதை சக்கிடுத்தார் எழுதிக்கொள்ளல் வேண்டும். ஈற்றில் அக்கிராசனர் எத்தனைபேர் சம்மதம் எத்தனைபேர் சம்மதமில்லையென்று சொல்லல் வேண்டும்.

*சம்மதமில்லாத ஒரு அங்கத்தவர் தமது சம்மதவீனத்தை எழுதி வைக்கலாம்.*

25. யாதாமொரு நிருணயத்திற்குச் சம்மதங்கொடாத ஓர் அங்கத்தவர் மிகுதியான அங்கத்தவருடைய அபிப்பிராயத்திற்குத் தாமிணங்காததற்கு நியாய மெழுதிவைக்கத் தத்துவமுண்டு. அப்படி யெழுதிவைப்பிக்கில் ஒரு கிழமைக்குள் சக்கிடுத்தாருக்கு யெழுதி அனுப்பவேண்டும். சக்கிடுத்தாரதை அக்கூட்டத்தின் ஞாபகக் குறிப்புகளின் ஈற்றில் எழுதிவைக்கவேண்டும்.

---

## 3 ம் அதிகாரம்.

### கொம்மிற்றிகள்.

*கொம்மிற்றியில் இத்தனைபேருக்குக் குறையாம லிருக்கவேண்டும்.*

1. விசேஷமாய் நியமிக்கும் ஒவ்வொரு கொம்மிற்றியும் கூடும்போது மூன்று பேருக்குக் குறையாம லிருக்கவேண்டும். விசேஷமாய் அதினுங் குறைய இருக்கலாமென்று நியமித்திருந்தால் அப்படி யிருக்கலாம்.

*கொம்மிற்றிகளின் கூட்டம்.*

2. ஒரு விசேஷக் கொம்மிற்றி கூடும்போது, நகரசங்கத் தலைவரில்லாதிருந்தால், அல்லது அக்கொம்மிற்றியில் அவர் ஒரு அங்கத்தவரா யில்லாதிருந்தால், கூட்டத்தில் வந்திருக்கும் அங்கத்தவர்கள் தங்களி லொருவரை அக்கிராசனராக்க வேண்டும். அந்தக் கூட்டத்தில் அவ்வக்கிராசனருக்கு நகரசங்கத் தலைவருடைய அதிகாரங்களெல்லாமுண்டு.

*கொம்மிற்றியில் நடந்த சம்பவங்கள்.*

3. ஒரு விசேஷ கொம்மிற்றியார் யாதாமொரு றிப்போர்ட்டை யெழுதி யனுப்பச் சம்மதித்த பின் அந்த றிப்போர்ட்டுக்கு அந்தக் கொம்மிற்றியின் ஒவ்வொரு அங்கத்தவரும் கையொப்பம் வைத்து கொம்மிற்றியில் நடந்த சம்பவங்க ளெழுதிய ஞாபகக் குறிப்புகளோடு நகரசங்கத்திற்கு ஒப்புவித்தல் வேண்டும்.

*கொம்மிற்றியாரில் சிலர் சம்மதமில்லாதபோது.*

4. கொம்மிற்றியில் (ஒரு றிப்போர்ட்டுக்கு) சிலர் சம்மதங்கொடாதபோது அக்கொம்மிற்றியின் ஞாபகக்குறிப்புகளில் அச்சம்மதவின்மையும் எழுதப்பட்டு, கொம்மிற்றியார் றிப்போர்ட்டுடன் எழுதப்பட்டு நகரசங்கத்திற்கு ஒப்புவித்தல் வேண்டும். அத்தோடு மோஸனும் அல்லது நிர்ணயமும் அந்த மோஸன் கொண்டுவந்தவர் பெயரும் அந்த மோஸனுக்குச் சமுகமாயிருந்தவரில் இத்தனைபேர் சம்மதங்கொடுத்தது இத்தனைபேர் சம்மதங் கொடுக்கவில்லை யென்பது எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

*சாட்சிக்காரரைக் குறித்து கொம்மிற்றியாருக்கிருக்கு மதிகாரம்.*

5. நிலையாயுள்ள காரியம் நடத்தும் கொம்மிற்றியாருக்கும் விசேஷமாய் நியமிக்கப்படும் கொம்மிற்றியாருக்கும் இதன்முன் 2 ம் அதிகாரம் 11 ம் 12 ம் பிரிவுகளில் சொல்லப்பட்ட கீழ்ப் பிரமாணங்களின்படி நகரசங்கத்தார் கொம்மிற்றியிலிருக்கும்பொழுது அவர்களுக்குள்ள அதிகாரமெல்லா முண்டு.

---

## 4 ம் அதிகாரம்.

### வரிப்பணக் கணக்கு.

*நகரசங்கச் சட்டத்தின் 138 ம் பிரிவின் கீழ் கொடுக்க வேண்டிய கணக்கு.*

1. 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின், நகரசங்கச்சட்டத்தின் 138 ம் பிரிவின் கீழ்சொல்லியபடி வீடுகள், தோட்டங்கள், கட்டிடங்கள் உடையவர், அல்லது அதில் வசிப்பவர் ஒப்புவிக்க வேண்டிய கணக்கு விபரம் நகரசங்கத்தார் கொடுக்கிற மாதிரிக் கடிதாசிகளிலே எழுதப்பட வேண்டும். அம்மாதிரி கடிதாசி யாருக்குக் கொடுபட்டதோ அவர் அதில் எழுதவேண்டியவைகளை யெழுதியனுப்பவேண்டும்.

*எழுதிக்கொடுத்த பின் கரத்தை முதலியவை வாங்கினால் விசேஷ அறிவித்தல் கொடுக்கவேண்டும்.*

2. மேற்படி கட்டளைச்சட்டத்தின் 146 ம் பிரிவின் பிரகாரம் எழுதவேண்டிய செடூல் யாதாமொருவர் யெழுதியனுப்பிய பின் யாதாமொரு கரத்தை, குதிரை, போனி, கோவேறுகழுதை, எருமை, அல்லது கழுதை வாங்கிவைத்திருந்து, அதைப்பற்றி முன்னெழுதிய செடூலில் சொல்லப்படாதிருந்தால் அப்படி வாங்கிவைக்கப்பட்ட கரத்தை யல்லது மிருகத்தைக்குறித்து ஒரு மாதத்திற்குள் உண்மையான சரியான அறிவித்தல் சக்கிடுத்தாருக்கு யெழுதிக்கொடுப்பது கரத்தை அல்லது மிருகம் வாங்கிவைத்திருப்பவரது கடமை. இப்பிரிவில் சொல்லியபடி உண்மையான சரியான அறிவித்தல் சக்கிடுத்தாருக்கு அனுப்பத் தவறுகிற அல்லது அசட்டைபண்ணுகிற யெவரும் அல்லது அப்படி வாங்கப்பட்ட கரத்தை மிருகங்களைக்குறித்து நகரசங்கத்தலைவரின் உத்தரவின்படி சக்கிடுத்தார் அறிவிக்கும்படி கேட்கும்போது ஒரு வாரத்திற்குள் அப்படி அறிவித்தல் யெழுதிக்கொடுக்கத் தவறுகிற அல்லது அசட்டைபண்ணுகிற யெவரும் இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்திற்கு ஆளாவார்.

*கரத்தைமுதலியவற்றின்பேரில் கொடுக்கவேண்டியவரி.*

3. செடூல் எழுதிக்கொடுத்தவர்கள் வேறு அறிவித்தல் குறிக்காமல் செடூலில் குறிக்கப்பட்ட கரத்தை மிருகங்களுக்காகச் சேரவேண்டிய மேல் வருஷத்திய வரியை செலுத்திப்போட வேண்டும். மேல் வருஷத்திற்குள் குறிக்கப்பட்ட கரத்தை மிருகங்களை விற்க அல்லது தன் சொந்தத்தைவிட்டு நீக்கிப்போடுகிறதாயிருந்தால், தான் விற்கிறதற்கு அல்லது நீக்குகிறதற்குப் பதினைந்து நாளைக்குள்ளாக நகரசங்கத் தலைவருக்கு எழுத்தினால் அறிவித்தல் செய்யவேண்டும். அப்போது நகரசங்கத்தலைவர் சொல்லப்பட்ட சட்டத்தின் 143 ம் பிரிவின்படி அவர்களை வரிகட்டுதலினின்று நீக்கிவிடலாம். 1887 ம் ஆண்டின் 7 ம் சட்டத்தின் 128 ம் பிரிவின் பிரகாரம் யேற்படுத்திய வரித்தொகையை யாரொருவர் சொல்லப்பட்ட சட்டத்தின் 149 ம் பிரிவில் சொல்லியிருக்கிற காலத்திற்குள் செலுத்தாவிட்டால் அவர்களை குற்றத்திற்குச் சாட்டப்படும்.

*ஆட்சேபங்கள்.*

4. வரியிறுப்போர் அட்டவணையைக் குறித்த ஆட்சேபங்களெல்லாம் சக்கிடுத்தாரிடம் எழுத்தில் கொடுத்துவிடல் வேண்டும். அதன்பின் வருமானத்திற்கும் வரிக்கும் நிலையாய்க் காரியம் நடத்தும் கொம்மிற்றியார் அவைகளைக் கவனித்துத் தீர்க்கவேண்டியது.

*நொத்தாரிஸ்மார் கொடுக்கவேண்டிய விபரம்.*

5. காலத்திற்குக்காலம் நகரசங்கத்தலைவர் கற்பிக்கிறபோதெல்லாம், சக்கிடுத்தார் இச்சட்டத்தின் அநுபந்தத்தில் D என்னும் மாதிரியான ஒரு கொப்பியை நகரசங்க எல்லைக்குள் ளிருக்கும் ஒவ்வொரு அத்வக்காத்து, பிறக்கிறாசிமாருக்குக் கொடுத்தனுப்பல் வேண்டும். அதன் நோக்கமென்னவெனில் : அந்தந்த வருஷத்திற்கு அல்லது அதற்குமுன் நகரசங்கம் ஸதாபிக்கப்பட்டதின்பின் எந்த வருஷத்திலாவது அவர்களிடத்தில் கிளாக்குமாரிருந்தாரோவென்றும் அப்படியாகில் எத்தனைபேர் அவர்களிடத்தில் உடன்படிக்கையெழுதிக் கிளாக்காக விருந்தார்களென்றும் அப்படி உடன்படிக்கைபண்ணிய தேதி யெதுவென்றும் அக்கிளாக்குமார் வேலையாயிருந்தகாலம் இவ்வளவென்றும் அறியும்படிக்கே அம்மாதிரிக் கொப்பி கிடைத்த 15 நாளைக்குள் (அதை யேற்றுக்கொண்டும்) ஒவ்வொரு அத்வக்காத்தும், பிறக்கோறும், நொத்தாரிசும், கொடுக்க வேண்டிய விபரத்தை அக்கொப்பியில் சரியாக எழுதிச் சக்கிடுத்தாரிடம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

---

## 5 ம் அதிகாரம்.

### நாய்களின்பேரில் ரெஜிஸ்டர் பதிவு.

*வீடுகளில் வசிப்பவர் வேண்டியபோது விபரம் கொடுக்கவேண்டியது.*

1. காலத்திற்குக்காலம் ஒவ்வொரு வீட்டிலும் வசிப்பவர்கள் அவ்வவ்வீட்டிலுள்ள நாய்களின் தொகையும் மற்றும் விபரமும், அந்த நாய்களின் சொந்தக்காரருடைய பெயரும் எழுதி ஒவ்வொரு அட்டவணை நகரசங்கத்திற்கு அனுப்பவேண்டுமென்று கேட்க நகரசங்கத்தலைவருக்கு தத்துவமுண்டு. அப்படி வீடுகளில் வசிக்கிற ஒவ்வொருவரும் சொல்லப்பட்ட அட்டவணையில் சரியான விபரங்களெழுதி அதைக் கேட்கப்பட்டு ஒரு வாரத்துக்குள் அனுப்பிவைப்பது அவர்கள் கடமை.

*நாய்களை ரெஜிஸ்டர் பதிவுசெய்கிறதற்கு.*

2. எந்த நாய்களும் காயம்பட்டிருந்தாலும், நோயாயிருந்தாலும், அல்லது அதின் சொந்தக்காரர் அதுகளை அநுசாரம்பண்ணினாலும், அல்லது அதுகளைப் பராமரிக்க அசட்டையாயிருந்தாலும் அப்படிப்பட்ட நாய்களுக்கு ரெஜிஸ்டர் பதிவுசெய்த நிச்சயப்பத்திரிக்கை கொடுக்கப்படாதென்று நகரசங்கத்தலைவர் தடைசெய்யலாம்.

3. எந்த நாய்களையும் ரெஜிஸ்டர்பதிவுசெய்கிறதற்குக் கேட்டால் அதுகளின் பிறப்பிக்கையைக் கேட்கிறதற்கும் அதைக் கொடுக்கும்வரைக்கும் ரெஜிஸ்டர் பதிவுசெய்த நிச்சயப்பத்திரிக்கையைக் கொடுக்காமல் நிறுத்திவைக்கிறதற்கும் நகரசங்கத்தலைவருக்கு தத்துவமுண்டு.

4. கொடுக்கப்படும் ஒவ்வொரு நிச்சயப்பத்திரிக்கைகளுக்கும் 75 சதம் இலவு அறவிடப்படும்.

5. நாய்களுக்காக நிச்சயப்பத்திரிக்கை கேட்கிற பேர்களுக்கு நிச்சயப்பத்திரிக்கையின் நம்பர் பதித்த ஒவ்வொரு பட்டி கொடுக்கப்படும், அப்படி கொடுக்கப்படும் பட்டிகளுக்கு 10 சதம் அறவிடப்படும்.

*நிச்சயப் பத்திரிக்கைகள்.*

6. நாய்களின் நிச்சயப்பத்திரிக்கைகளில் கீழ் சொல்லப்பட்ட நிபந்தனைகளை அணைக்கவேண்டியது.

சொந்தக்காரனின் மேல்விலாசத்திற்கு அறிவித்த லனுப்பிவிட்டு நிச்சயப்பத்திரிக்கைகளை றத்துசெய்ய நகரசங்கத்தலைவருக்கு தத்துவமுண்டு :—

(a) எந்த நாய்களும் காயப்பட்டு அல்லது நோயாயிருந்து அதை சொஸ்த்தமாக்கக் கூடாதென்றால் அப்படிப்பட்டவைகளை, நகரசங்கத்தலைவர் அல்லது நகரசங்க மிருக வயித்தியருடைய யோசனையின்கீழ் விலக்கப்பட்டால் ;

(b) சொந்தக்காரர்களால் அவைகள் அநுசாரம் அல்லது அசட்டைசெய்யப்பட்டால், அவைகளை நகரசங்கத்தலைவர் திருப்தியாகக் கண்டால் ;

(c) எவர்களும் தங்களுடைய நாய்களுக்குத் தொற்றுநோய் இருக்கிறதென்று தெரிந்தும் மற்றவர்களுடைய நாய்களோடு சேர்க்கப்பண்ணினால்.

*எப்பொழுது நாய்களை கொண்டு வரும்படி தேவைப்படுகிறதோ அவ்வேளை கொண்டுவர வேண்டும்.*

7. உறுதிப்பத்திரத்தில் அணைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறுபாடாயிருந்து உறுதிப்பத்திரம் கொடுக்கக் கூடாதென்று அல்லது றத்துசெய்து, அப்படிப்பட்ட நாய்களைக் கொண்டுவரும்படி அறிவித்தால், அதின் சொந்தக்காரர் அந்த அறிவித்தலில் காண்பித்திருக்கிற நேரத்தில் அதுகளைக் கொண்டுபோய் நகரசங்க நாய்த்தொழுவத்தில் சேர்க்கவேண்டியது.

---

## 6 ம் அதிகாரம்.

### வண்டி முதலானவை நடத்துகிறது.

1. 1901 ம் ஆண்டின் 9 ம் சட்டத்தின் 11 ம் பிரிவின் பிரகாரம் வீல் வைக்கப்பட்டிருக்காத எந்தக் கரத்தைகளிலும் குறிக்கப்பட்டிருக்கிற இலக்கங்கள் எவ்விதத்திலாவது பார்வையினின்று அழிந்து அல்லது மூடப்பட்டு அல்லது மறைந்திருக்கப்படாத அப்படி யெந்த வண்டியிலும் குறிக்கப்பட்டிருக்கிற இலக்கங்கள் பார்வையினின்று அழிந்து அல்லது மூடப்பட்டு அல்லது மறைந்திருந்தால், அவைகளை ஓட்டுகிறவர்களை அல்லது அவைகள் யாருடைய பார்வையிலிருக்கிறதோ, அவர்களை குற்றவாளியென்று சாற்றப்படும்.

*குறிக்கப்பட்ட இலக்கம் மறையாமலிருக்க வேண்டியது.*

2. எந்த வாகனம், வண்டி, றிக்ஷா, கைகரத்தை ஒரு சக்கரவண்டி, பைசிக்கல், டிறைசிக்கல், மோட்டோகார், அல்லது மற்ற யெந்த வண்டிகளை, கொழும்பு நகரசங்கத் தெல்லைக்குள் எந்த தெருவிலாவது, அல்லது றோட்டிலாவது ஓட்டுகிறவர்கள், இழுக்கிறவர்கள், தள்ளுகிறவர்கள், அல்லது குதிரையின்பேரில் அல்லது மற்ற யெந்த மிருகத்தின்பேரிலும் சவாரிசெய்கிறவர்கள் எப்போதும் இடப்பக்கம் அல்லது பாதையின் சமீபமான பக்கத்தில் நடத்தவேண்டும். அச்சமயம் எவர்களும் முன்னதாக வண்டியை அல்லது மிருகத்தை நடத்துகிறதாயிருந்தால், அப்போது வலப்பக்கம் நடத்தி உடனே மறுபடியும் இடப்பக்கமே திருப்பி நடத்தவேண்டும். எப்போதும் நகரசங்கத்தால் ஏற்படுத்தியிருக்கிற அடையாளப்பலகையின் வலப்பக்கம் அல்லது பாதையின தூரமான பக்கத்தில் எவர்களும் செலுத்தப்படாது. குதிரை யல்லது மற்ற மிருகங்களை கையில் பிடித்து நடத்தும்போது பாதையில் வலக்கை பக்கத்தின் ஓரத்தில் நடத்தவேண்டும்.

3. ஒவ்வொரு வாகனம், கரத்தை, றிக்ஷா, அல்லது முன் சொல்லப்பட்ட மற்ற யெந்தக் கரத்தைகளும், மற்ற ஒவ்வொரு குதிரைகளும் அல்லது மற்ற மிருகங்களும் கொழும்பு நகரசங்கத் தெல்லைக்குள் எந்தத் தெருவிலும் அல்லது றோட்டிலும் எவ்வளவு நேரத்திற்கு நிறுத்தத்தேவையாலும் கூடுமான மட்டும் பாதையின் பக்கத்தில் நிறுத்தலாம். ஆனால் வண்டியின்சக்கரமும் பாதையோடு இணையாயிருக்கவேண்டியது. ஆனால் இந்தச்சட்டம், வாகனங்கள், வண்டிகள், றிக்ஷாக்கள் வைக்க அல்லது நிறுத்த நகரசங்கத்தால் ஏற்பட்டிருக்கிற யெந்த இடத்திற்கும் வளங்கப்படாது.

4. விசைவைக்காத ஒவ்வொரு கரத்தைகள் நடத்துகிறவரும் நடத்தும் பாதையின் இடப்புறத்து ஓரத்தில் நடத்தவேண்டியது. நடத்துகிறவர்கள் கால் நடையைப் பார்க்கிலும் அதிக நடையாக மாட்டை அல்லது மாடுகளை நடத்தப்படாது. வண்டி நடத்துகிறபோது அதே பக்கத்தில் முன்னால் போகிற கரத்தை நிறுத்தப்படாத பக்ஷத்தில் தாண்டிக்குமுன்னடத்தவும் அல்லது நடத்த முயலவும்படாது. நடத்துகிறவர்கள் கரத்தையை பாதையின் நேர்கோணமாக நிறுத்தவும்படாது.

5. சாமான் கொண்டுபோகப் பாவிக்கப்படும் மாட்டுக்கரத்தைகளை நடத்துகிறவர் கரத்தையிலாவது நுகத்திலாவது நடத்தும்போது இருக்கப்படாது.

---

## 7 ம் அதிகாரம்.

### ஆட்களேறிப்போகும் கரத்தைகள்.

*ஆட்களேறிப்போகும் கரத்தை முதல் இரண்டாவதெனஇரண்டுவகை நகரசங்கத் தலைவர் பிரயாணிகள் இவ்வளவு பேர் போகவேண்டுமென்றும் இன்ன வகுப்பென்றும் தீர்மானஞ்செய்தல்வேண்டும்.*

1. 1901 ம் ஆண்டின் 9 ம் இலக்கக்கட்டளைச்சட்டத்தின்படி கூலிக்கு ஆளேற்றும் குதிரைக் கரத்தைகள் பொட்டிக் கரத்தைகள் முதலாம் வகுப்பு இரண்டாம் வகுப்பென்று இரு வகைப்படும்.

2. உத்தரவுச்சீட்டு நியாயப்பிரமாணத்தின்படி பெறமுன் இன்ன கரத்தை இன்ன வகுப்புக்குச் சேர்ந்ததென்று தீர்மானிக்கப்படும் (நகரசங்கத்திற்கு) அனுப்பப்பட்ட கரத்தை எந்த வகுப்பைச்சேர்ந்ததென்றும் அதில் எத்தனைபேர் ஏறிப்போகலாமென்றும் நகரசங்கத்தலைவர் அல்லது அவரால் அதிகாரம் கொடுக்கப்பட்ட அச்சங்கத்தின் ஓர் உத்தியோகஸ்தர் தீர்மானஞ்செய்ய வேண்டும். அப்படி தீர்மானஞ்செய்தபின் அவ்வகுப்பும் நம்பரும் கரத்தையில் எல்லாருக்கும் தெரியக்கூடிய ஒரு பக்கத்தில தீந்தையால் எழுதப்பட்டிருத்தல் வேண்டும். இன்ன இடமென்பது நகரசங்கத்தலைவரே தீர்மானித்தல் வேண்டும். அப்படி எழுதிய எழுத்து எந்த நேரமும் பார்வைக்குத் தெளிவாய்த் தோற்றத்தக்கதும் வாசிக்கக்கூடியதுமாயிருத்தல் வேண்டும். இப்பிரிவில் சொல்லிய பிரமாணப்படி சகலதும் நடந்தாலொழிய உத்தரவுச்சீட்டு பிறப்பிக்கப்படாது. மடியில் அல்லது கையில் கொண்டுபோகப்படும் குழந்தை அல்லது 8 வயதுக்குட்பட்ட பிள்ளை (கையில் கொண்டுபோகப்பட்டாலும் கொண்டுபோகப்படாவிட்டாலும்) ஒரு பிரயாணியாகக் கவனிக்கப்படமாட்டாது. 8 வயதுக்குட்பட்ட இரண்டு பிள்ளைகள் வயதுள்ள பிரயாணிக்குச் சரியாய்க் கவனிக்கப்படும். அப்படியே எத்தனை பிள்ளைகளிருந்தாலும் கணக்குப்போடப்படும். இத்தனைபேர் கொண்டுபோகலாமென்று உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையை ஓட்டுகிற ஒருவன் அத்தனைபேரைக் கொண்டுபோக ஏலாதென்று சொல்லப்படாது. அத்தொகைக்கு மேற்படவும் கொண்டுபோகப்படாது.

*உத்தரவு சீட்டுப் பெற்ற கரத்தைகளை தக்க நிலைபரத்தில் வைத்திருக்க வேண்டும்.*

3. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையின் சொந்தக்காரன் கரத்தையைச்சுத்தமாயும், பழுதுபார்த்தும் வைத்திருக்கவேண்டும். கரத்தை யல்லது அதிலொருபாகம் அல்லது அதை யிழுக்கும் குதிரை அல்லது குதிரையின் உடுப்புப் பாவிக்கத்தகாத நிலபரத்திலிருக்கும்போது சொந்தக்காரன் அக்கரத்தையைப் பாவிக்கப்படாது.

*கரத்தைகள் சோதித்துப் பார்க்கக் கொண்டுவர வேண்டும்.*

4. ஒவ்வொரு உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தைகளின் அல்லது றிக்ஷாக்களின் சொந்தக்காரர் அவைகளை நகரசங்கத்தலைவர் உத்தரவுச்சீட்டில் குறிக்கப்பட்ட இடத்திற்கு அதில் குறிக்கப்பட்ட நேரத்தில் சோதனைக்காக கொண்டுவரவேண்டியது அவர்கள் கடமை. நகரசங்கத்தலைவரால் ஏற்படுத்தப்பட்ட கூட்டத்திலிருக்கிற பேர்களால் அதுகளைச் சோதிக்கப்படும். சோதிக்கப்பட்ட ஒவ்வொரு கரத்தைகளின் அல்லது றிக்ஷாக்களின் நிலமையை அக்கூட்டத்தார் நகரசங்கத்தலைவருக்கு அறிவிக்கவேண்டும்.

*குதிரைகளுக்கு குறியிடவேண்டும்.*

5. 1901 ம் ஆண்டின் 9 ம் இலக்கக்கட்டளைச்சட்டத்தின்படி உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தைகளில் கட்டுகிற எந்தக் குதிரைகளுக்கும் நகரசங்கத்தலைவர் தீர்மானஞ்செய்கிற அடையாளத்தை அல்லது இலக்கத்தை அவைகளின் குளம்பில் குறியிடவேண்டுமென்று சொல்ல நகரசங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

*தகாத கரத்தை பாவித்தால் பிடிக்கப்படும்.*

6. நகரசங்கத்தைச்சேர்ந்த ஒரு இன்ஸ்பெக்தர் அல்லது பொலீஸ் உத்தியோகஸ்தர் பாவிக்கத்தகாத நிலையிலுள்ள கரத்தை, குதிரை, அல்லது உடுப்பு பாவிக்கப்படுவதைக்காணும்போது உடனே அக்கரத்தையைப்பிடித்துக்கூடியளவு சீக்கிரம் நகரசங்க மஜிஸ்ரேற் (நீதிவான்) முன் கொண்டுவருகிறதற்கு அவர்களுக்கு தத்துவமுண்டு.

*நகரசங்கத்தலைவர் கரத்தைகள் நிற்க வேண்டிய இடம் நியமித்தல்.*

7. காலத்துக்குக்காலம் நகரசங்கத்தலைவர் உத்தரவுச்சீட்டுப்பெற்ற கூலியமராத கரத்தைகள் நிற்க வேறு பிரசித்த இடங்களையும் உத்தரவுச்சீட்டுப்பெற்ற கூலியமர்ந்த கரத்தைகள் நிற்க வேறு பிரசித்த இடங்களை நியமிக்கவும் அறிவித்தல் கொடுத்து அவ்விடங்களை இல்லாமற்பண்ணவும் மாற்றவும் அதிகாரமுடையவராவார்.

8. கூலியமராத எந்தக்கரத்தைகளை ஓட்டுகிறவனும் கூலியமராத கரத்தைகள் நிற்கயேற்பட்டிருக்கிற பிரசித்த இடம் தவிர மற்ற இடங்களில் கூலிபேசவும் கூலிவாங்கவும்படாது.

*கரத்தைகள் நிற்கவேண்டிய விதம்.*

9. கரத்தைகள் நிற்கிற பிரசித்தமான இடத்தில் ஒரு கரத்தைவரும்போது பின்பக்கமாய்ப் போய் முன்னிற்கிற கரத்தைகள் எல்லாவற்றிற்கும் பின்னிற்றல் வேண்டும். கரத்தைகளெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாய் ஒரேவரிசையில் நிற்றல்வேண்டும்.

*கரத்தையோட்டுகிறவன் கரத்தையைவிட்டுப் பிரியப்படாது.*

10. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையை ஓட்டுகிற ஒவ்வொருவனும் தெருவில் பிரசித்தமான இடத்தில் கரத்தையைவிட்டு விட்டுத் தூரப்போகப்படாது, ஆனால் பிரயாணிகளை ஏற்ற இறக்கமாத்திரம் அப்படிச்செய்யலாம். பிரயாணிகளை ஏற்றும்போது அல்லது இறக்கும்போது இன்னொரு கரத்தை ஓட்டுபவனுக்குத் தடையுண்டுபண்ணப்படாது, அல்லது வேணுமென்று தவறு வலோற்காரமாய் உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தை யோட்டுகிற இன்னொருவனைக் கூலிவாங்காமல் தடைபண்ணப்படாது, தடைபண்ணத் தெண்டிக்கவும்படாது.

*கரத்தையோட்டுகிறவன் கோட்போட்டிருக்கவேண்டும்.*

11. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையை ஓட்டுபவன் சுத்தமான உடை உடுத்து கோற்றும் காற்சட்டையும் போட்டிருத்தல் வேண்டும். ஓட்டுபவன் செய்கிற ஒவ்வொரு செய்கைக்கும் கரத்தையின் சொந்தக்காரனே உத்தரவாதியாயிருப்பான்.

*ஓட்டுபவன் அல்லது சொந்தக்காரன் கூலிக்கு விட வேண்டியது கடமை.*

12. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தை பிரசித்தமாய் கூலியமராத கரத்தைகள் நிற்கிற இடத்தில் நிற்கும்போது யாராவது கூலிக்குவிடும்படி கேட்டால் எந்த நேரத்திலாவது அக்கரத்தையைக் கூலிக்குவிடுவது சொந்தக்காரனுடைய அல்லது ஓட்டுபவனுடைய கடமையாகும், நகரசங்க எல்லைக்குள் கரத்தைபோகக்கூடிய எந்த றோட்டிலிருந்தும் எந்த றோட்டுக்குப் போகவேண்டுமென்றாலும் கொண்டுபோகவேண்டும். கூலிக்குக் கரத்தைகேட்பவர் கூலிகேட்டவுடன் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் கூலியைக் கொடுக்கவேண்டும். கரத்தையைப் பாவிக்கமுன் கேட்டாலும் உடனே கொடுத்தல்வேண்டும். ஆனால் உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தை யொன்றை 12 மணித்தியால நேரத்தில் 10 மைல் தூரத்துக்கு மேற்பட ஆட்களை யேற்றிக்கொண்டு போகும்படி பலோற்காரமாய்க் கேட்கப்படாது.

13. உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையோட்டுகிறவன் கூலிக்கியமர்ந்து அது முடியுமுன், கூலிக்கியமராத கரத்தைகள் நிற்கும் பிரசித்தமான இடத்தில் நிறுத்தப்படாது. அப்படிப்பட்ட கரத்தைகளை கூலிக்குயமர்ந்த கரத்தைகள் நிற்கும் பிரசித்த இடத்தில் நிறுத்தலாம், அல்லது பொலீஸ் உத்தியோகஸ்தர் சொல்லுகிறபடி பாதையின் ஓரத்தில் நிறுத்தல் வேண்டும்.

14. பின்வருமாறு கூலிகொடுத்தல் வேண்டும் :—

### குதிரை கரத்தைகள்.

#### முதல் வகுப்பு.

ஒரு குதிரை இழுக்கும் முதல் வகுப்புக் கரத்தைகள்.

| | ரூ. ச. |
|---|---|
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில் ... | 4 50 |
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்குமிடையில் 6 மணித்தியாலத்துக்கு ... ... ... | 2 50 |
| முதல் அரைமணித்தியாலம் ... ... ... | 0 50 |
| முதல் ஒரு மணித்தியாலம் ... ... ... | 1 0 |
| அதனபின் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதின் பகுதிக்கும் ... ... ... ... | 0 50 |

#### இரண்டாம் வகுப்பு.

ஒரு குதிரை யிழுக்கும் இரண்டாம் வகுப்புக் கரத்தைகள்.

| | ரூ. ச. |
|---|---|
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்குமிடையில் ... | 3 0 |
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில் 6 மணித்தியாலத்துக்கு ... ... ... | 1 50 |
| முதல் அரை மணித்தியாலம் ... ... ... | 0 40 |
| முதல் ஒரு மணித்தியாலம் ... ... ... | 0 75 |
| அதன்பின் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ... ... ... ... | 0 30 |

இரண்டு குதிரை யிழுக்கிற முதலாம் இரண்டாம் வகுப்புக் கரத்தைகளுக்கு மேற்சொல்லிய வீதத்தைவிட அரைப்பங்கு கூட்டிக் கொடுத்தல் வேண்டும்.

### மாட்டுக் கரத்தைகள்.

#### முதலாம் வகுப்பு.

ஒரு மாடு இழுக்கும் முதல் வகுப்புக் கரத்தைகள்.

| | ரூ. ச. |
|---|---|
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில் ... | 2 0 |
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கு மிடையில் 6 மணித்தியாலத்துக்கு ... ... ... | 1 0 |
| முதல் அரை மணித்தியாலத்துக்கு ... ... | 0 25 |
| முதல் ஒரு மணித்தியாலத்துக்கு ... ... | 0 50 |
| அதன்பின் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ... ... ... ... | 0 15 |

#### இரண்டாம் வகுப்பு.

ஒரு மாடு இழுக்கும் இரண்டாம் வகுப்புக் கரத்தைகள்.

| | ரூ. ச. |
|---|---|
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்குமிடையில் ... | 1 50 |
| காலமே 6 மணிக்கும் சாயந்தரம் ஏழு மணிக்குமிடையில் 6 மணித்தியாலத்துக்கு ... ... ... | 0 75 |
| முதல் அரை மணித்தியாலம் ... ... ... | 0 15 |
| முதல் ஒரு மணித்தியாலம் ... ... ... | 0 30 |
| அதின்பின் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அல்லது அதன் பகுதிக்கும் ... ... ... ... | 0 10 |

குதிரைகரத்தைக்கும் மாட்டுக்கரத்தைக்கும் சாயந்தரம் ஏழு மணிக்கும் காலமே 6 மணிக்கு மிடையில் மேற்சொல்லப்பட்ட கூலியைவிட மூன்றிலொருபங்கு கூடக்கொடுக்கவேண்டும்.

### கைக்கரத்தைகள்.

#### பகல் கூலி.

| | ரூ. ச. |
|---|---|
| 10 நிமிஷத்துக்குள்ளாக ... ... ... | 0 10 |
| 10 நிமிஷத்துக்கு மேல் அரை மணிக்குள்ளாக ... ... | 0 25 |
| அரை மணிக்குமேல் ஒரு மணிக்குள்ளாக ... ... | 0 50 |
| பின்வரும் ஒவ்வொரு அரை மணிநேரத்திற்கு ... ... | 0 10 |

#### இராக்கூலி.

சாயந்தரம் ஏழு மணிக்கும் காலமே 6 மணிக்குமிடையில் அரை மணிநேரத்துக்குள் 5 சதமும் ஒரு மணி நேரத்திற்குள் 10 சதம் வீதமாக பகல் கூலியைவிட கூட்டிக் கொடுத்தல் வேண்டும்.

*கரத்தைகள் உட்புரத்தில் கூலி அட்டவணை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.*

15. அந்தந்தக் காலத்தில் நடைபெறுகிற கூலி அட்டவணை தடிப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டு அல்லது தகட்டில் வரையப்பட்டு கூலிக்குத் திரியும் ஒவ்வொரு கரத்தையிலும் அல்லது கைக்கரத்தையிலும் நன்றாகத் தெரியப்படக்கூடிய ஓர் பாகத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்படி வைக்கப்பட்ட காட் அல்லது தகடு அக்கரத்தைகள் கூலிக்கு விடப்பட்டிருக்கும் நேரத்தலெல்லாம் அப்படி வைக்கப்பட்டும் எழிதில் வாசிக்கக்கூடியதாயும் அழிபடாமலு மிருத்தல் வேண்டும்.

*கரத்தையில் காணப்படுஞ் சாமான்கள்.*

16. கூலிக்குப்பிடித்த கரத்தையில் யாதாமொருவர் யாதொரு சாமானை (மறந்து) விட்டுப் போயிருந்தால் அதைக் கண்ட 6 மணித்தியாலத்துக்குள் சொந்தக்காரனுவது கரத்தை ஓட்டுகிறவனுவது அச்சாமானை இருந்த மாதிரியே எடுத்துக்கொண்டு நகரசங்கத்தார் சக்கிடுத்தாரிடம் அல்லது பொலீஸ் ஸ்டேசன் பொறுப்புவைத்திருக்கும் ஆளிடம் ஒப்புவித்தல் வேண்டும். அப்படி சாமான் கொணடுபோய் ஒப்புவிக்கும் சொந்தக்காரனுக்கு அல்லது ஓட்டுபவனுக்கு நகரசங்கத் தலைவர் கற்பிக்கிற பிரகாரம் உபகாரம்பெற உரித்துண்டு. அவ்வுபகாரம் அப்பொருளுடையவனே சாமானை யெடுக்குமுன் கொடுத்தல் வேண்டும். அப்படிக் கரத்தையில் காணப்பட்ட பொருளை உண்மையான சொந்தக்காரன் ஒரு மாசத்துக்குள் கேட்டு வாங்கிக்கொண்டு போகாதிருந்தால் அப்பொருள் அறிவித்தல் கொடுத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். அப்படி விட்டுவந்த பணம் விற்பனைக்குரிய செலவும் பொருள் கொண்டுவந்தவருக்குக் கொடுத்த உபகாரமும் கழித்து மிகுதியை நகரசங்கப் பணத்துடன் சேர்க்கப்படும்.

கருத்து (பயன்).

17. இந்த அதிகாரத்தில் எந்தெந்த விடத்தில் கீழ்க்குறிக்கப்பட்ட வார்த்தைகள் வருகின்றதோ, அவ்வார்த்தைகளுக்குப் பின்வருமாறு பயன் பிரித்துக்கொள்ள வேண்டியது.

"உத்தரவுச்சீட்டுப்" பெற்றதென்றால் 1901 ம் ஆண்டின் கரத்தைச்சட்டத்தின் பிரகாரம் உத்தரவுச்சீட்டளிக்கப்பட்டதென்று பயன்கொள்ளவும்.

"கரத்தை" யென்றால் தபால் வண்டியும், டிறம் வண்டியுந் தவிர 1901 ம் ஆண்டின் கரத்தைச் சட்டத்தில் சொல்லியிருக்கப்பட்ட கரத்தைகளெல்லாம் உட்படவென்று பயன்கொள்ளவும்.

"ஓட்டுகிறவன்" என்றால் கரத்தையோட்டுகிறவன் அல்லது பாரமேற்றியிருக்கிறவனென்று பயன்கொள்ளவும் (இத்துடன் கைக்கரத்தை யிழுக்கிறவனும் உட்பட).

கைக்கரத்தை யிழுக்கிறவன் உத்தரவுச்சீட்டு பெறவேண்டியது.

18. நகரசங்கத்தலைவரால் உத்தரவுச்சீட்டுப் பெறுமல் யெவர்களும் கைக்கரத்தை கூலிக்கு யிழுக்கப்படாது. உத்தரவுச்சீட்டு அளிக்கப்பட்ட தேதியிலிருந்து அடுத்த டிசம்பர்மாதம் 31 ந் தேதிவரைக்கும் அதைப் பாவிக்கலாம். அதில் உத்தரவுச்சீட்டுப் பெறுகிறவனுடைய முழுப்பெயர், உத்தரவுச்சீட்டின் இலக்கம், அவனுடைய ஜாதி, அவனுடைய இடது பெருவிரல், 2 ஆட்காட்டிவிரல்களின் அச்சு, மற்ற அவனை யறியும்படி வேண்டிய எல்லாக் காரணங்களும் அடங்கியிருக்கின்றன. உத்தரவுச்சீட்டுப்பெற்றவர் நகரசங்கத்தால் இலவசமாகக் கொடுக்கப்படும் தன்னுடைய பொட்டகிராப் படத்தில் நகரசங்க சக்கிரேத்தாரின் கையொப்பத்துடன் உத்தரவுச்சீட்டின் இலக்கத்தையும் அதில் குறுக்கில் யெழுதி அல்லது முத்திரித்து அதை உத்தரவுச்சீட்டுடன் அணைக்கப்பட்டு எப்போதும் வைத்திருக்கவேண்டியது அவர்கள் கடமை. ஒவ்வொருவரும் நகரசங்கத்தால் கொடுக்கப்படும் உத்தரவுச்சீட்டின் இலக்கத்தை தகட்டிலெழுதி இடது கையில் கட்டியிருக்கவேண்டியது.

உத்தரவுச்சீட்டை யழிக்க நகரசங்கத்தலைவருக்குள்ள அதிகாரம்.

19. உத்தரவுச்சீட்டு கொடுக்குமுன் நகரசங்கத்தலைவர் தேவையென்று நினைத்தால், உத்தரவுச்சீட்டு பெறப்போகிறவர்களின் நன்னடத்தையைப்பற்றி விசாரிக்கவும், கரத்தையிழுக்கிறதற்கு தகுந்த பெலசாலியாவென்று பார்க்கவும், ரோட்டின் கட்டளைகளைப்பற்றி அவனை பரிட்சைபண்ணவும் அல்லது பண்ணுவிக்கவும் நகரசங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு. மேலும் நகரசங்கத்தலைவர் தகுமென்று கண்டால் உத்தரவுச்சீட்டு கொடுக்கக் கூடாதென்று மறுக்கவும், கொடுத்த உத்தரவுச்சீட்டை அழிக்கவும் அவருக்குத் தத்துவமுண்டு.

கைக்கரத்தை கூலிக்கு இழுக்கிறவர்களை எந்த இடத்திலாவது எந்த பொலீஸ் உத்தியோகஸ்தர் (இன்ஸ்பெக்டருக்குக் கீழ்படாதவர்கள்) வந்து உத்தரவுச்சீட்டையும் பொட்டகிராப்பையும் கேட்டாலும் தடையிலலாமல் காண்பிக்க வேண்டும், அவர்களுக்குத் தேவையானால் விரல்களிலிருக்கும் அடையாளத்தைக் கேட்டாலும் கொடுக்க வேண்டும்.

கைக்கரத்தை கூலிக்கு இழுக்கிறவர்களை கூலிக்கு யேறுகிறவர்கள் அவர்களுடைய பொட்டகிராப்பையும், உத்தரவுச்சீட்டையும் பார்க்கிறதற்குக் கேட்டால் உடனே காண்பிக்க வேண்டியது அவர்கள் கடமை.

எழுதப்பட்டிருக்கிற இலக்கங்கள் அழியாமல் அல்லது மறையாமலிருக்க வேண்டும்.

20. எந்த வண்டியிலும் 1901 ம் ஆண்டின் 9 ம் சட்டத்தின் 11 ம் பிரிவின் பிரகாரம் எழுதப்பட்டு அல்லது குறிக்கப்பட்டு அல்லது முத்திரிக்கப்பட்டு அல்லது வெட்டப்பட்டிருக்கும் இலக்கங்கள் எவ்விதத்திலாவது பார்வையினின்று அழிந்து அல்லது மூடப்பட்டு அல்லது மறைந்திருக்கப்படாது. அப்படி யெழுதப்பட்ட இலக்கங்கள் பார்வையினின்றும் மூடப்பட்டு அல்லது மறையப்பட்டிருந்தால் அப்படிப்பட்ட கரத்தையுடையவனை அல்லது ஓட்டுகிறவனைக் குற்றவாளியென்று சாட்டப்படும்.

21. நகரசங்கத்தலைவரிடமிருந்த உத்தரவுச்சீட்டுப் பெறுதவர்கள் ஒரு குதிரை அல்லது குதிரைகள் கட்டின உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தையை யோட்டுகிறதற்கு யேற்படக் கூடாது.

கரத்தையோட்டுகிறவர்கள் உத்தரவுச்சீட்டுபெறுகிறதற்கு.

22. எவர்களும் உத்தரவுச்சீட்டுபெற்ற கரத்தை யோட்டுகிறதற்கு உத்தரவுச்சீட்டு பெறக் கேட்டால், நகரசங்கத்தலைவர் அவர்கள் நன்னடத்தையுடையவரென்றும், ஓட்டுகிற கடமைகளை நிறைவேற்றக்கூடியவர்களென்றும் கண்டு திருப்தியடைய வேண்டும். அப்படி திருப்தியானால் அவர்களை "உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தை யோட்டுகிறவர்களென்று" ரெஜிஸ்டர் பதிவுசெய்விக்கலாம்.

23. அப்படி ரெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொருவனுக்கும் வருஷந்தோறும் புதுப்பிக்கிற ஒரு உத்தரவுச்சீட்டும் அத்துடன் தகட்டினால் செய்து அதிலே உத்தரவுச்சீட்டின் நம்பர் யெழுதிய ஒரு அடையாளமும் கொடுக்கப்படும். அந்தத் தகட்டை ஓட்டுகிறவர்கள் தங்கள் இடக்கையில் நலலாய்த் தெரியும்படியான இடத்தில் அணிந்துகொள்ள வேண்டியது.

24. கொடுக்கப்பட்ட உத்தரவுச்சீட்டை ஒவ்வொரு வருஷமும் ஜனவரிமாதம் 31 ந் தேதிக்குட் கேட்டு புதுப்பித்துக்கொள்ளவேண்டியது. அதைப் புதுப்பிக்கக் கூடாதென்று ஞாயமான காரணங்களிருந்தால் அந்த உத்தரவுச்சீட்டை அழிக்கவும், எடுத்துப்போடவும், அலலது புதுப்பிக்கக்கூடாதென்று மறுக்கவும் நகரசங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

25. உத்தரவுச்சீட்டில் ஓட்டுகிறவன் முழுப்பெயர், ஜாதி, ஊர், குலம், இருக்குமிடம், அளவு, அவனுடைய இடதுகை பெருவிரலிலும் மற்ற இரண்டு ஆட்காட்டி விரலிலுமுள்ள அச்சுமற்றும் அவனைக் கண்டுபிடிக்கக்கூடிய மற்ற அடையாளம் முழுதும் அடங்கியிருத்தல் வேண்டும். அத்துடன் புதுப்பிக்கப்பட்ட உத்தரவுச்சீட்டின் இலக்கமும் அதிலடங்கியிருத்தல் வேண்டும்.

ஓட்டுகிறவர்கள் நகரசங்கத்தால் இலவசமாகக் கொடுக்கப்படும் தன்னுடைய பொட்டகிராப் படத்தில் நகரசங்க சக்கிரேத்தாரின் கையொப்பத்துடன் உத்தரவுச்சீட்டின் இலக்கத்தையு மதின் குறுக்கில் யெழுதி அல்லது முத்திரித்து அதை உத்தரவுச்சீட்டுடன் அணைக்கப்பட்டு எப்போதும் வைத்திருக்கவேண்டியது அவர்கள் கடமை.

ஓட்டுகிறவர்களை கரத்தை கூலிக்கு யெடுக்கிறவர்கள் உத்தரவுச்சீட்டையும் படத்தையும் பார்க்கும்படிக் கேட்டால் உடனே காண்பிக்க வேண்டியது அவர்கள் கடமை.

26. எந்த பொலீஸ் உத்தியோகஸ்தரும் (இன்ஸ்பெக்டர் உத்தியோகத்திற்குக் கீழ்படாதவர்கள்) அவர்களுக்குத் தேவையாக எந்த இடத்திலாவது உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தை யோட்டுகிறவனை, அவனுடைய அடையாளத்தைக் கேட்டால் உடனே தன்னுடைய விரல்களில் பதித்திருக்கிற அடையாளத்தைக் காண்பிக்கவேண்டியது.

27. உத்தரவுச்சீட்டுபெற்ற கரத்தைகளை உடைய ஒவ்வொருவரும் நகரசங்கத்தலைவரால் உத்தரவுச்சீட்டில் குறிக்கப்பட்டிருக்கிற இடத்திற்கு குறிக்கப்பட்ட நேரத்தில் அக்கரத்தைகளில் பாவிக்கிற குதிரைகளை சோதனைக்குக் கொண்டுபோகவேண்டியது. அச்சோதனை நகரசங்க மிருகவயித்தியரால் அல்லது நகரசங்கத்தலைவரால் அதற்காகக் குறிக்கப்படுகிறவர்களால் சோதிக்கப்படும். அப்படி சோதித்தவுடன், சொலவப்பட்ட மிருக வயித்தியர் அல்லது மற்றவர்கள் அக்குதிரைகள் கூலிக்கரத்தை இருக்கிறதற்குத்தகும் தகாதென்று நகரசங்கத்தலைவருக்கு அறிவிப்பது அவர்களின் கடமை.

28. (1) எவர்களும் உத்தரவுச்சீட்டுப் பெறுமலும் அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்று பின் அச்சீட்டை அனிக்கப்பெற்றவர்கள் உத்தரவுச்சீட்டுப்பெற்ற எந்தக் கரத்தைகளை ஓட்டினாலும் ;

(2) கரத்தை ஓட்டுகிறதற்கு உத்தரவுச்சீட்டுப்பெற்றவர்களும் அல்லது உத்தரவுச்சீட்டுப்பெற்ற கரத்தைகளையுடையவர்களும் மேற்சொலலப்பட்ட கட்டளைச்சட்டத்தைத் தவறி நடந்தாலும் ;

(3) உத்தரவுச்சீட்டுப் பெற்ற காத்தைகளையுடைய எவர்களும் அக்காத்தைகளை உத்தரவுச்சீட்டுப்பெறாத மற்றவர்களைக்கொண்டு ஓட்டினாலும் ;

அப்படிப்பட்டவர்களைக் குற்றவாளியென்று சாட்டப்படும் அக்குற்றங்கள் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் இருபது ரூபாவுக்கு மேற்படாத அபராதத்திற்கு ஆளாவார்.

---

## 8 ம் அதிகாரம்.

### அழுக்கு முதலியவற்றைத் தவிர்த்தல்.

*கக்கூசு துப்பரவு செய்தல்.*

1. நகரசங்கத்தார் எல்லைக்குட்பட்ட கட்டிடம், வீடு, சாலை, அடைப்பு முதலியவைகளின் சொந்தக்காரர் அல்லது வசிப்பவருக்கு அவ்வவ்விடங்களிலுள்ள லெட்ரீன், கக்கூசு, பிரிவு முதலியவற்றை அள்ளித் துப்பரவுபண்ணும்படி நகரசங்கத்தலைவர் அவசரமென்று காணும்போதெல்லாம் கேட்க அவருக்கு அதிகாரமுண்டு. இன்னின்ன நேரத்தில் இன்னின்ன விதமாய் அள்ளித் துப்பரவுசெய்தல் வேணுமென்று எழுத்து மூலமாய் அறிவித்தல் கொடுத்தே அப்படிக் கேட்டல் வேண்டும்.

*குடியிருக்கும் வீடுகளிலிருந்து நூறடிக்குள் கக்கூசுகளிலிருந்து அள்ளிய அழுக்குகள் புதைக்கப்படாது.*

2. யாதாமொரு வீடு, கட்டிடம், சாலை முதலியவற்றிலுள்ளாவது, அல்லது யாதாமொரு குடியிருக்கும் வீடு, கிணறு, குளம், வாவி, வாய்க்கால், நீரோட்டம், அழுக்குப்போகும் வாய்க்கால முதலியவைகளிலிருந்து நூறடி தூரத்துக்குள்ளும் கக்கூசு, லெட்ரீன், பிரிவி முதலியவைகளிலிருந்து அள்ளிய அழுக்கை யாராவது போடவாவது புதைக்கவாவது கூடாது. போடுவிக்கவாவது புதைப்பிக்கவாவது கூடாது. அறிவித்தல் கொடுத்தவுடன் இன்ன இடத்தில் இன்ன நேரத்தில் இன்ன மாதிரி அவ்வழுக்கை அள்ளியகற்ற வேண்டுமென்று நகரசங்கத்தலைவர் கொடுத்தவுடன் அப்படியே அகற்றல் வேண்டும்.

*கக்கூசுகளை மூடி நிறப்புதல்.*

3. யாதாமொருவர் வீடுகளை மாற்றி கட்டும்போது அல்லது அவைகளில் வேறு வேலை செய்யும்போது கக்கூசுக் குழியில்லாமல் பண்ணவேண்டியிருந்தால், அக்குழிகளிலுள்ள அழுக்கு முழுவதையும் வெளியே அள்ளி அகற்றி அக்குழியை சுற்றியிருக்கும் சுவர், தளம், கூரையையும் அகற்றக்கூடிய அளவில் அகற்றி அத்தோடு சேர்ந்த குழாய், அழுக்கு, வாய்க்கால் முதலியவற்றையும் இல்லாமற் செய்து அக்குழியிலுள்ள அழுக்கினால் பழுதுபட்டிருக்கிற மண், மட்டு மெவ்வித சாமானையும் அகற்றிப்போடல் வேண்டும். மேலும் அக்குழியிலிருந்து நாற்றம் வராதபடிக்கு தகுந்த சாமான்களைக் கொண்டு அக்குழியை மூடிவிடவேண்டும்.

4. கக்கூசுகுழி மூடி நிறப்பக்கருத்தாயிருக்குமொருவர் அதைக்குறித்து யாதொரு வேலையும் துவங்குமுன் இன்ன மணித்தியாலத்தில் தான் அவ்வேலையைத் துவங்குகிறதென்பதை யெழுதியொரு அறிவித்தலை நகரசங்கத்தலைவருக்கு விடுதலை நாட்கள் தவிர குறைந்த கணக்கு ஏழு நாளுக்குமுன் கொடுத்தல்வேண்டும். அப்படி அவ்வேலை நடக்கும்போது நகரசங்கத்தில் எந்த உத்தியோகஸ்தராவது உட்பிரவேசித்துச் சோதனைபார்க்க இடங்கொடுத்தல் வேண்டும்.

*சொந்தக்காரன் அல்லது வசிப்பவர்கள் உத்தரவுச்சீட்டு பெற்ற வேலைக்காரரைக்கொண்டு வேலை செய்வித்தல் வேண்டும்.*

5. நகரசங்க எல்லைக்குட்பட்ட வீடு அல்லது நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் வசிப்பவன் கக்கூசு முதலியவற்றின் அழுக்கையள்ளி அகற்றவிரும்பும்போது, அல்லது அப்படிச் செய்யும்படி இச்சட்டத்தின் 1 ம் பிரிவின்படி கட்டளையிடப்பட்டபோது, இன்ன நாளில் இன்ன நேரத்தில் அவ்வேலை துவங்க நினைத்திருக்கிறானென்பதைக் குறித்து நகரசங்கத்தலைவருக் கறிவித்தல் வேண்டும். அப்படி அறிவித்தல்கிடைத்தவுடன் நகரசங்கத்தலைவர் அவ்வேலை செய்வதற்காகச் சொந்தக்காரனுக்கு அல்லது அதில் வசிப்பவனுக்கு உத்தரவு கொடுக்கவேண்டும். நகரசங்க உத்தியோகஸ்தரில் ஒருவருடைய மேற்பார்வையின் கீழ் அவ்வுத்தரவுச்சீட்டில் சொல்லியபடி இதன் கீழ் சொல்லிய பிரகாரம் உத்தரவுச்சீட்டுப்பெற்ற வேலைக்காரனாலேயே அவ்வேலை செய்யப்படல் வேண்டும். நகரசங்கத்தலைவரிடம் உத்தரவுச்சீட்டுப்பெறாத வேலைக்காரரைக்கொண்டு அச்சொந்தக்காரனாவது வசிப்பவனாவது வேலைசெய்விக்கப்படாது.

*உத்தரவுச்சீட்டில்லாமல் கக்கூசு துப்பரவுசெய்யப்படாது.*

6. நகரசங்கத்தலைவரிடமிருந்து உத்தரவுபெற்று நகரசங்கக் கந்தோரில் பெயரும் விலாசமும் பதிவு செய்வியாத எவனும் நகரசங்க எல்லைக்குட்பட்ட நிலம் அல்லது வீட்டிலுள்ள கக்கூசு அள்ளித் துப்பரவுசெய்தல் கூடாது. அவ்வுத்தரவுச்சீட்டு கொடுக்கிறதும் அல்லது அதை கொடுக்கக்கூடாதென்று மறுக்கிறதும் நகரசங்கத்தலைவரின் இஷ்டப்பிரகாரம் செய்தல் வேண்டும்.

*நகரசங்கத்தலைவரது சேவகத்தில்லாத ஆட்கள் கக்கூசு துப்பரவு செய்தல் கூடாது.*

7. நகரசங்கத்தின் கீழ் வேலையாயிருந்து அதன்பின் நகரசங்கத்தலைவர் வேண்டாமென்று விட்ட எந்த உத்தியோகஸ்தனாவது, வேலைக்காரனாவது, நகரசங்கத்தின் எல்லைக்குள்ளிருக்கும் யாதொரு நிலம், வீட்டிலுள்ள கக்கூசை மேற்சொல்லியபடி உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒரு ஆளின் மேற்பார்வைக்குக் கீழாவது, அல்லது நகரசங்கத்தலைவரது எழுத்தனுமதியால் அதிகாரம்பெற்ற நகரசங்க உத்தியோகஸ்தரொருவருடைய மேற்பார்வைக்குக் கீழாவது துப்பரவுசெய்தல் கூடாது.

*உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஆள் உத்தரவுச்சீட்டின்பின் புறத்தி லெழுதியிருக்கிறபடி நடத்தல் வேண்டும்.*

8. மேற்சொல்லியபடி உத்தரவுச்சீட்டுபெறும் ஒவ்வொரு ஆட்களும் அச்சீட்டின் பின்புறத்தி லெழுதப்பட்டிருக்கும் சங்கேதங்கள், பிரமாணங்கள், ஒழுங்குகளின்படி நடத்தல் வேண்டும். அப்படி நடவாதிருந்தால் நகரசங்கத்தலைவர் உத்தரவுச்சீட்டை யதிக்கலாம்.

*உத்தரவுச்சீட்டு எவ்வளவுகாலம் பெறும்.*

9. இக் கீழ்ப்பிரமாணங்கள்படி பிறப்பிக்கும் உத்தரவுச்சீட்டுகளெல்லாம் அவை பிறப்பித்த வருஷத்து முடிவுவரைக்கும் பெலப்புள்ளதாயிருக்கும்.

*உத்தரவுச்சீட்டின் விபரங்கள்.*

10. மேற்சொல்லியபடி உத்தரவுச்சீட்டுபெறும் ஆட்கள் காலத்துக்குக்காலம் நகரசங்கத்தலைவர் கேட்கும்போதெல்லாம் கக்கூசு துப்பரவுசெய்யும் நிலம் வீடுகளைப்பற்றி அல்லது அவ்வேலை என்ன நேரம் என்னமாதிரி நடக்குமென்பதைப்பற்றியு மவர்கேட்கும் விபரங்களெல்லாம் அவருக்குக் கொடுத்தல் வேண்டும்.

*காத்தை வாளிகள் வைத்திருத்தல்.*

11. நகரசங்கத்தலைவர் ஒத்துக்கொண்டு மாதிரியாய்ச் செய்யப்பட்டிருக்கும் காத்தை யல்லது வாளிகளில்லாமல் வேறு யாதொன்றிலும் கக்கூசு துப்பரவுபண்ணி அள்ளிக்கொண்டுபோதல் கூடாது. அப்படிச் செய்யப்பட்ட காத்தை நகரசங்கக் கந்தோரில் கேட்டால் கிடைக்கும். அக்காத்தைகளும் வாளிகளும் எந்த நேரத்திலும் வெடிப்பில்லாமல் முழுவதாயும், பெலமுள்ளதாயும் சலம் ஒழுகக்கூடாததாயும் நல்லாய் மூடியால் மூடப்பட்டிருத்தல் வேண்டும்.

*சோதனைபார்த்தல்.*

12. அப்படிப்பட்ட காத்தைகள் வாளிகள், நகரசங்கத்தலைவர் கட்டளைபண்ணும்போதெல்லாம் சோதித்துப்பார்த்தல் வேண்டும். யாதாமொரு காத்தை யல்லது வாளி ஆகாதென்று சொல்லப்பட்டால் அந்தநேரந்துவங்கி அவ்வாளியை அல்லது காத்தையை மேற்படி உத்தரவுச்சீட்டுப்பெற்றவன் பாவிக்கப்படாது.

*உத்தரவுச்சீட்டுப்பெற்ற காத்தைகளைப்பதிந்த புஸ்தகம்.*

13. கக்கூசு துப்பரவுபண்ணி அள்ளிக்கொண்டுபோக உத்தரவுச்சீட்டு பெற்றுநிற்கும் காத்தைகள் பதிவுசெய்வதற்கு ஒரு ரெஜிஸ்டர் புத்தகமிருக்க வேண்டும். அக்காத்தைகள் ஒன்றின்பின்னொன்றாய் நம்பரெழுதப்பட்டு "இரகசிய கக்கூசுகாத்தை" யென்ற சொற்களும் எழுதப்பட்

டிருத்தல் வேண்டும். ரெஜிஸ்டர் புத்தகத்திலுள்ள நம்பர் அக்கரத்தைகளில் நகரசங்கக் கந்தோரில் சொந்தக்காரன் சிலவில் தீந்தையால் வரையப்பட்டிருத்தல் வேண்டும்.

*நகரசங்கத் தலைவர் உத்தரவுச்சீட்டைத் தடுத்தல்.*

14. எந்த நேரத்திலாவது நகரசங்கத்தலைவர் இச்சட்டத்தின் கீழ்ப் பிரமாணங்களின்படி கொடுபட்ட எந்த உத்தரவுச்சீட்டையாவது தள்ளவும் சில நாட்களுக்கு தடுத்துவைக்கவும் கூடும்.

*கக்கூசு அள்ளிக் கொண்டு செல்லும் காத்தையோட்டுபவன் திரியப்படாது.*

15. றேட்டில் கக்கூசு அள்ளிச்செல்லும் காத்தையை ஒட்டுபவன் காத்தையை விட்டுத்திரிதலும் அல்லது கக்கூசு அழுக்கு நிறைந்திருக்கும் அல்லது அள்ளுவதற்காக வைத்திருக்கும் (வாளி முதலிய) பாத்திரத்தை பிரசித்த றேட்டு அல்லது வீதியின்பக்கத்தில் வைத்துவிடுதலும் கூடாது.

*கக்கூசு அழுக்குக் கொண்டுசெல்லும் காத்தை கண்டபடி நிற்றல் கூடாது.*

16. கக்கூசுக்குழி, அழுக்கு, வாய்க்கால், குளி முதலியவற்றிலிருந்து எடுக்கப்படும் அழுக்குச் சேறு முதலியவைகளை யேற்றிக்கொண்டுபோகப் பாவிக்கப்படும் காத்தை, வண்டி, வாகனம், தன் பொறுப்பில் வைத்திருக்கிறவெவனும் பிரசித்த வீதி, ரோட்டு, பாதை, குருக்குத்தெருக்களில் அவ்வழுக்கை யேற்றுவதற்கு வேண்டிய நேரத்திற்கு மேற்படி அவைகளை நிற்கவிடல் கூடாது

*கக்கூசு துப்பரவு பண்ணிக் கொண்டு போதல்.*

17. காலத்துக்குக்காலம் நகரசங்கத்தலைவர் நியமிக்கிற பாதைவழியாகவே கக்கூசு அழுக்கு கொண்டுபோதல் வேண்டும்.

*அழுக்குப்போடுமிடம்.*

18. நகரசங்கத்தலைவர் நியமித்திருக்கு மிடத்துக்கே கக்கூசு அழுக்கு கொண்டுபோய் புதைத்தல் வேண்டும். அல்லது மேற்படி தலைவர் எவ்விதம் கட்டளைபண்ணியிருக்கிறரோ அவ்விதம் செய்யவேண்டும்.

*வீடுகளிலிருந்து கக்கூசு அழுக்கு கொண்டுபோதல்.*

19. நகரசங்கத்தார் வரிக்குட்பட்டிருக்கிற எந்த வீடு, கட்டடம், நிலம், ஆட்சி முதலியவைகளில் வாளிவைத்து கக்கூசு அழுக்கு யெடுக்கும் ஒழுங்கிருந்தால் அப்படிச் செய்யவேண்டியவன் அவ்வீடு, கட்டடம் முதலியவற்றினின்றும் தினந்தோறும் குறைந்த கணக்கு ஒருமுறை எடுக்க வேண்டும் அல்லது எடுப்பித்தல் வேண்டும். ஆனால் நகரசங்கத்தலைவர் கையால் இந்தப் பிரிவின் கீழ்ப் பிரமாணத்தினின்றும் விலக்கப்பட்டதாய் எழுதப்பட்டிருக்கும் வீடு, நிலம் முதலியவற்றில் அப்படிச் செய்யவேண்டியதில்லை, அப்படிச்செய்யவேண்டியது யாரெனில் ஒரு குடும்பத்துக்கு மேற்படி தனித்தனி வாடகைகொடுத்து அநேக குடும்பங்களிருக்கிற சிருச்சிறு வீடுகளடங்கிய ஒரு வீடு, கட்டடம், முதலியவைகளாயிருந்தால் அவைகளின் சொந்தக்காரனே. சொந்தக்காரனென்பதற்கு அர்த்தம் 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கச்சட்டத்தின் மூன்றும் பிரிவில் விளங்கப்படுத்தியிருக்கிறது. தனிவீடுகளில் அப்படிச் செய்யவேண்டியது யாரெனில் அதில் வசிப்பவரே.

*தர்க்கம் வரும்போது சங்கத்தலைவர் தீர்த்தல்.*

சொந்தக்காரனுக்கும் வசிப்பவனுக்கும் ஆர் (வாளி யெடுப்பிக்கவேண்டிய ஆள்) என்பதைக் குறித்து வாக்குவாதம் வரும்போது நகரசங்கத்தலைவர் தீர்க்கிற தீர்ப்பே முடிவுத்தீர்ப்பாயிருக்கும்.

*கக்கூசு அழுக்கு எடுத்துப்போவதற்கு நகரசங்க வுத்தியோகஸ்தரொருவரை அல்லது உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒரு ஆளை ஏற்படுத்தல் வேண்டும்.*

20. மேற்சொல்லியபடி வீடுகளிலிருந்து கக்கூசு அழுக்கு அகற்றுவது நகரசங்கத் தலைவராலதிகாரம் கொடுபட்ட நகரசங்கத்து ஒரு உத்தியோகஸ்தரால் அல்லது இந்த அதிகாரத்தின் 6 ம் நம்பர் கீழ்ப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் நகரசங்கத்தலைவரிடம் உத்தரவுச்சீட்டுபெற்று வைத்திருக்கு மொருவரால் மேற்சொல்லியபடி கக்கூசு அழுக்கு அகற்றவேண்டியவர் செய்வித்துக்கொள்ளவேண்டும். அதுவுமன்றி அப்படிச் செய்தவுடன் தாமெந்த உத்தியோகஸ்தன் அல்லது உத்தரவுச்சீட்டுப் பெற்றவனைக்கொண்டு வேலைசெய்வித்தாரோ அவனுடைய பெயரும் விலாசமும் தன்னுடைய பெயரும் விலாசமு மெழுதி மேற்படி சங்கத்துக்கு அனுப்பவேண்டும். நகரசங்கத்தலைவர் தீர்மானித்திருக்கிறபடி அவன் தன் வீட்டிலுள்ள ஆட்களுக்கு ஒவ்வொரு பத்து ஆட்களுக்கு ஒரு வாளிக்கு மேற்படாதபடி தன் வீடு, நிலம் முதலியவற்றில் கக்கூசு வசதிகள் செய்துகொள்ள வேண்டும். அப்படி பகலில் அழுக்கு கொண்டுபோகிற வாளிகள் காற்றுப்போகாதபடி நல்லாய் மூடியிருத்தல் வேண்டும்.

21. அப்படி அழுக்கு கொண்டுபோகிறதற்கு நகரசங்கத்தலைவரால் உத்தரவுபெற்ற உத்தியோகஸ்தர் தேவையானால், அவன் எழுத்திலெழுதி தன்னுடைய கையொப்பத்தை வைத்து அதில் ஒவ்வொரு நாளும் அழுக்குயெடுக்க இத்தனை வாளி தேவையென்றும், இத்தனை நாட்களுக்குத் தேவை யென்று அல்லது இத்தனை பிரத்தியேகமான கூலிக்காரர் வேண்டுமென்றும் தான் இன்ன தேதியில் துவக்கம்செய்யப் போகிறேனென்றும் யெழுதியதை நகரசங்கத் தலைவருக்குக் கொடுத்தால், இந்த அதிகாரத்தின் 24 ம் பிரமாணத்தில் சொல்லியபடி கொடுக்கப்படும், அப்படித் தேவையானவர்கள் இந்த அதிகாரத்தின் 23 ம் 24 ம் பிரமாணங்களில் சொல்லியிருக்கிறபடி எல்லாச் சிலவும் கொடுக்கவேண்டும்.

*அளவுவாளியாவது.*

22. அளவுவாளியாவது துத்தநாகம் பூசப்பட்ட இரும்புத்தகட்டினால் செய்யப்பட்டு பத்து இருத்தல் நிறைக்கு மேற்படாததாய் பின்வரும் உள்ளளவுள்ளதாயிருத்தல் வேண்டும். உயரம் 11 அங்குலம் வாயகலம் 12 அங்குலம் அடி யகலம் 9 அங்குலம்.

*ஒவ்வொரு அளவு வாளியு மெடுக்கக் கூலி.*

23. மேற்சொல்லியபடி நகரசங்கத்து உத்தியோகஸ்தரால் கக்கூசுவாளி யெடுப்பிக்க விரும்புகிறவர்கள் இதன்கீழ் சொல்லுகிற பிரகாரம் பணம் செலுத்தல் வேண்டும்:—

(a) 400 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட நகரசங்கத்தார் மதிப்புப்படி வருமானம் வருகிற வீடு, கட்டிடம் முதலியவைகளிலிருந்து மேற்சொல்லியவர்களால் அழுக்கு எடுப்பித்தால் ஒவ்வொரு மாதத்துக்கும் அல்லது மாதத்தின் சொச்ச நாளைக்கும் ஒவ்வொரு அளவு வாளிக்கு ரூபாய் 2 வீதம் செலுத்தல் வேண்டும்.

(b) 400 ரூபாய் அல்லது அதற்குக்குறைய நகரசங்கத்தார் மதிப்புப்படி வருமானம் வருகிற வீடு, கட்டிடம் முதலியவைகளிலிருந்து மேற்சொல்லியவர்களால் அழுக்கு எடுப்பித்தால் ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது மாதத்தின் சொச்ச நாளைக்கும் ஒவ்வொரு அளவு வாளிக்கு ஒரு ரூபாய் வீதம் செலுத்தல் வேண்டும்.

அப்படிச் செலுத்துகிற பணங்களை முற்பணமாகச் செலுத்தல் வேண்டும். பணம் செலுத்துகிறவர்கள் தனக்கு அழுக்கு எடுக்கத் தேவையில்லையென்றும் இன்ன தேதியிலிருந்து அழுக்கு யெடுத்தலை நிறுத்தும்படி நகரசங்கத்தலைவருக்கு எழுத்தினால் அறிவிக்கும் வரைக்கும் இக்கட்டளைச் சட்டத்தில் சொல்லியிருக்கிறபடி மேற்படி பணங்களைச் செலுத்தல் வேண்டும்.

*பணம் மாதத்தின் பத்தாந்தேதி அல்லது அதற்குமுன் செலுத்தல் வேண்டும்.*

இக்கட்டளைச்சட்டத்தின்படி செலுத்தவேண்டிய பணங்களை அல்லது அதின் சொச்சத்தை பத்தாந் தேதிக்கு முன் அல்லது நகரசங்க உத்தியோகஸ்தரால் முதல் வேலை துவக்கப்படும்போது கொடுக்கும் அறிவித்தல் பிரகாரம் செலுத்தப்படாவிட்டால் இதனடியில் சொல்லியிருக்கிற பிரகாரம் அறவிடப்படும்.

24. எவர்களும் நகரசங்க உத்தியோகஸ்தரில் பகல் கூலிக்காரன் அல்லது விசேஷமான கூலிக்காரன் தேவையென்று எழுத்தின் மூலமாகக் கேட்டால் அப்படிக் கொடுப்படும்.

பகல் கூலிக்காரன் செய்யவேண்டியவேலை ஒவ்வொரு நாளும் வீட்டுக்காரனுடைய கட்டிடத்திற்குப்போய் 15 நிமிசம் வரைக்கும் கீழ் சொல்லுகிறபடி தன் வேலையைச் செய்தல் வேண்டும் :—

(a) சின்ன வாளிகளிலும் மற்ற அவடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திர முதலானவைகளிலுமுள்ள அழுக்கை அளவு வாளிகளிலல்லது வீட்டுக்காரரால் கொடுக்கப்படும் அந்த அளவைப் போன்ற வாளிகளில் கொட்டிப்போட வேண்டும் ; (b) அதைத் துப்பரவுசெய்து அதில் மருந்துத்

தூள் தூவவேண்டியது. (மருந்துத் தூள் வீட்டுக்காரரால் கொடுக்தல் வேண்டும்). பின் அது இருந்த பிரகாரம் வைக்கவேண்டும்; (c) அப்படி அழுக்கை அளவு வாளிகளில் நிரைப்பி அதை இராக் கூலிக்காரனுக்கு வசதியாயிருக்குமிடத்தில் வைத்தல் வேண்டும். (அந்த இடம் வீட்டுக்காரரால் குறிக்கப்படவேண்டியது); (d) இராக் கூலிக்காரனால் கொடுக்கப்படும் தும்பை அதை நிரப்பும் ஸ்தானத்தில் நிரப்பல் வேண்டும்; (e) கக்கூசு அல்லது அதின் அளைகளை நன்ருய் சுத்திசெய்தல் வேண்டும்.

விசேஷ கூலிக்காரன் செய்யவேண்டிய வேலைகள் ஒவ்வொரு நாளும் 8 மணித்தியாலத்துக்கு சொந்தக்காரன் ஆதினத்தில் வேலைசெய்ய வேண்டியது. ஆனல் இன்ன நேரத்தில் வேலைசெய்கிறதென்று சொந்தக்காரனுடன் பேசிக்கொள்ளல் வேண்டும்; அதாவது: அந்தத் தோட்டத்திலிருக்கும் கக்கூசு முதலானவைகளைத் துப்பரவுசெய்து சுத்தியாக வைத்திருக்கவேண்டும். அத்துடன் அதைச்சேர்ந்த எல்லா வேலைக்கும் தான் ஆஜராக வேண்டியது.

பகல் கூலிக்காரன் அல்லது விசேஷ கூலிக்காரன் தேள்வையானவர்கள் கீழ் சொல்லப்பட்டிருக்கிற பிரகாரம் நகரசங்கத்துக்குப் பணம் செலுத்தல் வேண்டும் :—

ஒரு பகல் கூலிக்காரனுக்கு ஒரு மாதத்திற்கு அல்லது மாதத்தின் சொச்ச நாளைக்கு ரூபாய் ஒன்று.

ஒரு விசேஷ கூலிக்காரனுக்கு ஒரு மாதத்திற்கு அல்லது மாதத்தின் சொச்ச நாளைக்கு ரூபாய் பதினைந்து.

அப்படிச் செலுத்துகிற பணங்கள் முற்பணமாகச் செலுத்தல் வேண்டும். பணம் செலுத்துகிறவர்கள் தனக்கு பகல் கூலிக்காரன் அல்லது விசேஷக் கூலிக்காரன் தேள்வையில்லையென்றும் இன்ன தேதியிலிருந்து அவர்களை நிருத்தும்படி நகரசங்கத்தலைவருக்கு எழுத்தின் மூலமாய்த் தெரிவிக்கும் வரைக்கும் இக்கட்டளைச்சட்டத்தில் சொல்லியிருக்கிற பிரகாரம் பணம் செலுத்தல் வேண்டும்.

இக்கட்டளைச் சட்டத்தின்படி செலுத்தவேண்டிய பணங்களை அதின் சொச்சத்தை பத்தாந் தேதிக்குமுன் அல்லது பகல் கூலிக்காரனல் அல்லது இராக் கூலிக்காரனல் அவ்வேலை முதலாவது துவங்கப்படும்போது கொடுக்கும் அறிவித்தலின் பிரகாரம் செலுத்தப்படாவிட்டால் இதனடியில் சொல்லியிருக்கிற பிரகாரம் அறவிடப்படும்.

*பணம் கொடாத போது நீதிவானுக் கறிவித்தல்.*

25. மேற்சொல்லிய பிரகாரம் மேற்சொல்லிய சங்கத்திற்குக் கொடுபடவேண்டிய பணம் குறித்த காலத்தில் கொடுபடாதிருந்தால் உடனே பொலீஸ் நீதிவானுக்கு அல்லது நகரசங்க நீதவானுக்கு நிப்பார்ட்டுபண்ணப்படலாம். அதன்பின் நீதவான் சுருக்கமாய் விசாரணைபண்ணி அப்பணம் இறுபடவேண்டியதெனக் கண்டால் இறுக்க வேண்டிய ஆளை இறுக்கும்படி கட்டளை பண்ணவேண்டும். பணம் அறவிடுவது நீதவான் விதிக்கும் அபராதம்போ லறவிடலாம். அப்படிப்பட்ட உத்தரவுடன் அதன் செலவுக்காக ரூபாய் ஐந்து பணம் கொடுக்க வேண்டியவர்களிடம் அறவிடலாம். மேற்படி பணமும் நீதவான் விதிக்கும் அபராதம்போ லறவிடலாம்.

26. இந்தக் கட்டளைச்சட்டத்தின்படி கக்கூசு அழுக்கு எடுக்கும் நகரசங்க உத்தியோகஸ்தருக்கு பணம் செலுத்துகிறவர்கள் மேற்படி கட்டளைச்சட்டத்தில் சொல்லியிருக்கிற தேதியில் மேற்படி பணம் செலுத்தாவிட்டால், அவர்களுடைய வீட்டில் அல்லது தோட்டத்தில் அழுக்கு எடுக்காதபடி நிருத்த நகரசங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

ஆனல் நிருத்தப்பட வேண்டுமென்றல் அப்படி நிருத்த ஏழு நாளைக்கு முன்பதாக நகரசங்கத் தலைவருடைய உத்தரவை அந்த வீட்டில் அல்லது கிரகத்தில் ஒட்ட வேண்டும்.

*நகரசங்கத்துக் கூலியாட்கள் கக்கூசுப் பக்கம் போதல்.*

27. நகரசங்கத்தலைவர் நியமித்த மணித்தியாலங்களுக்குள் கக்கூசு வாளி யெடுக்கும் நோக்கமாய்க் கக்கூசு இருக்குமிடத்துக்குப்போகும் நகரசங்கத்துக் கூலியாட்களை யாதொரு தடையின்றி விடுவது வீடு நிலம் முதலியவற்றில் வசிக்கும் ஒவ்வொருவரதுங் கடமையாகும்.

*கக்கூசு அழுக்குப் போடுமிடம்.*

28. 1887 ம், 1890 ம், 1896 ம், ஆண்டுகளின் நகரசங்கச் சட்டத்தின் 172 ம் பிரிவிற் சொல்லிய பிரகாரம் செய்துவைக்கப்பட்ட இடங்களிலல்லாமல் வேறிடங்களிலும் கக்கூசு அழுக்கு, சாணி, வேறழுக்கு, தூசி, சேறு, சாம்பல், கஞ்சல் முதலியவை யாதொருவரும் போடப்படாது.

*உத்தரவில்லாமல் குழியுண்டாக்குதல்.*

29. நகரசங்கத்தலைவருத்தரவில்லாமல் யாதாமொரு கக்கூசுக் குழி, குளம், கிணறு அல்லது மண்ணெடுப்பதற்குக் குழி அல்லது கஞ்சல் நாற்றமுள்ள சாமான் போடுவதற்குக் குழி முதலியன தோண்டப்படாது.

30. எந்தத் தோட்டத்துச் சொந்தக்காரரல்லது அதில் குடியிருப்பவர் அந்தத் தோட்டத்திலிருந்து நாற்றமான தண்ணீர் முதலானவைகளை எந்தத் தெருவிலல்லது பிரசித்த கானுகளில் வரவிடக்கூடாது.

*வீட்டிலிருப்போர் பெட்டிகளில் ஊத்தை போடவேண்டும்.*

31. நகரசங்கம் நியமித்திருக்கும் குப்பை கஞ்சல் எடுப்போர் யாதாமொருவர் வீட்டில் சாம்பற்கூட்டிய குப்பை முதலியவை யெடுத்துப்போக வேண்டுமென்று வீட்டுக்காரன் விரும்பினல் அச்சாம்பற் முதலியவற்றை மூடிபோட்ட வாளி பெட்டிகளில் பாதையின் பக்கத்தில் வைத்தல் வேண்டும். அவ்வாளிகளின் அல்லது பெட்டிகளினளவு நகரசங்கத்தலைவர் எழுத்தில் ஒத்துக் கொண்ட அளவினதாயிருக்க வேண்டும். அப்பெட்டிகளை அல்லது வாளிகளை வீட்டுக்கு அருகில் பாதையின் பக்கத்தில் நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் அறிவிக்கிற மணித்தியாலங்களிலே தினந்தோறும் வைத்தல் வேண்டும். அக்குப்பைக்கரத்தைக்காரன் அப்பெட்டிகளிலிருந்து ஊத்தையை யெடுத்த அரை மணித்தியாலத்துள் பெட்டிகளை அவ்விடத்திலிருந்து அகற்றிப்போட வேண்டியது. மூடியுள்ள வாளி, பெட்டி முதலியவற்றிலல்லாமல் வேறே யாதொன்றிலும் சாம்பல், குப்பை முதலிய அழுக்குப்போட்டு றோட்டில் யாதொருவரும் வைக்கப்படாது. மேற்சொல்லியபடி குறிக்கப்பட்ட மணித்தியாலங்களிலன்றி மற்ற நேரங்களிலும் வைக்கப்படாது. இப்பிரிவில் சொல்லியவை வியாபாரஞ் செய்யுமிடத்திலிருந்து வரும் குப்பை கஞ்சல் முதலியவைகளைக் குறித்தல்ல.

32. நகரசங்கத்தலைவர் காலத்துக்குக் காலம் நியமிக்கிற இடத்தில் தவிர நகரசங்கத்து எல்லைக்குள் மற்ற இடங்களில் தூசி, சாம்பற்கூட்டிய குப்பை சாணம் முதலானவைகளை யெவராவது போடப்படாது.

33. நகரசங்கத்தலைவரால் (எழுத்தினல்) உத்தரவுபெருமல் நகரசங்கத் தெல்லைக்குள் எந்தத் தெருவிலாவது அல்லது எந்தப் பிரசித்த இடங்களிலாவது தூசி, சாம்பற்கூட்டிய குப்பை, ஊத்தை, சாணம் முதலியவைகளை கூட்டிவைக்கவும் அல்லது போடவும் படாது.

*வியாபாரஞ்செய்யுமிடங்களிலிருந்து வரும் ஊத்தை.*

34. காலத்துக்குச்காலம் நகரசங்கத்தலைவர் நியமிக்கிற விகிதம் கொடுப்பதுடன் நகரசங்கத் தலைவருக்கு விண்ணம்செய்தால்தான் நகரசங்கத்தலைவரால் வியாபாரம் செய்யுமிடங்களிலிருந்து வரும் குப்பை, கஞ்சல் எடுக்கப்படும்.

*சொந்தக்காரன் எப்போது ஊத்தைப்பெட்டி வைப்பது.*

35. ஒரு பெரிய வீட்டிலுள்ள அறைகள் வெவ்வேறு ஆட்களுக்குக் கூலிக்குக் கொடுத்திருந்தால் அவ்வீட்டுச் சொந்தக்காரன் அவ்வறைகளில் வசிக்கிற ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு மூடியுள்ள வாளி யல்லது பெட்டி குப்பை, ஊத்தை முதலியவை போடும்படி கொடுத்தல் வேண்டும்.

*ஆடுமாடு கட்டுதலைத் தடுத்தல்.*

36. நகரசங்கத்தலைவரது உத்தரவின்றி நகரசங்கத் தெல்லைக்குள்ளிருக்கும் பிரசித்த நிலங்களிலும் அல்லது நகரசங்கத்தார் பொறுப்பிலிருக்கும் நிலம் இடங்களில் யாதாமொருவர் யாதாமொரு மிருகங்களைக் கட்டுதலும், காத்தைகளைச் சேர்த்துவைப்பதும் அல்லது கூடாரம்போட்டிருத்தலும் கூடாது.

*பிரசித்தநிலத்தின் பாவிப்பு.*

37. நகரசங்கத்தார் எல்லைக்குள்ளிருக்கும் எந்தப் பிரசித்த இடத்தையாவது அல்லது நகரசங்கத்தார் பொறுப்பிலிருக்கும் எந்த இடத்தையாவது நகரசங்கத்தலைவருத்தரவின்றி நகரசங்கத்தலைவர் செய்யப்படாதென்று பிரசித்தமா யறிவித்த எந்த முகாந்தரத்துக்காவது பாவித்தல் கூடாது.

*குளப்பஞ்செய்தல்.*

38. நகரசங்கத்துக்குச் சொந்தமான அல்லது நகரசங்கத்தாரது பொறுப்பிலுள்ள எந்தப் பிரசித்த இடத்திலாவது, ஆறுதலுக்குப்போய் நிற்குமிடத்திலாவது போய் நிற்கிற எவரும் யாதாமொரு குளப்பமுஞ் செய்யாதிருப்பார்களாக.

*எந்த மணித்தியாலங்களில் பிரசித்த இடங்களில் நிற்கலாம்.*

அல்லது அவ்விடத்தில் நியாயமாய் வந்துநிற்கும் மற்றவர்களுக்கு வசதியீனம் வரும்படி நடத்தலும் கூடாது. மேற்சொல்லிய இடங்கள் பகல் முழுவதும் பிரசித்தமாய்ச் சகலரும் போகக்கூடியதாய்த் திறபட்டிருக்கும். இராத்திரியில் கேற் பூட்டும்வரையும் சகலரும் போகலாம். ஆனால் நகரசங்கமானது விதிக்கும் விதிப்படி நன்னடக்கையாய் நடந்துகொள்ளல் வேண்டும்.

*பிரசித்த இடங்களிலுள்ள குளத்தில் குளித்தலாகாது.*

39. நகரசங்கத்துக்குச் சொந்தமான அல்லது நகரசங்கத்தாரது பொறுப்பிலிருக்கிற எந்தப் பிரசித்த இடத்தையாவது பாவிக்கிற எவரும் அந்நிலத்திலுள்ள குளத்தில் குளிப்பதும் அல்லது தண்ணீர் அசுத்தமாகத்தக்கதாய் வேறு செய்கை செய்தலும், அல்லது வேறுவிதமாக அழுக்குண்டாகும்படி யாதாமொரு செய்கைசெய்தலும் கூடாது. நகரசங்கத்தலைவருத்தரவின்றி பூக்களைப் பறிப்பதுங் கூடாது. அந்நிலத்திலுள்ள செடிகள் பூண்டுகளுக்குத் தீங்குசெய்தலும் கூடாது.

*பூக்கள் பறித்தலுமாகாது.*

40. நகரசங்கத்துக்குச் சொந்தமான அல்லது நகரசங்கத்தாரது பொறுப்பிலிருக்கும் பிரசித்த இடங்களில் வைத்திருக்கும் ஆசனங்களில் எவரும் படுக்கவும் அல்லது கால்களை அதில் வைத்திருக்கவும் கூடாது.

41. நகரசங்கத்துக்குச் சொந்தமான அல்லது நகரசங்கத்தாரது பொறுப்பிலிருக்கும் பிரசித்த இடங்களில் வைத்திருக்கும் ஆசனங்களில் அருவருப்பான அல்லது தொற்றுநோயுடையவர்கள் உட்காரவும் அல்லது பாவிக்கவும் கூடாது.

42. மேற்சொல்லிய இடங்களில் வைத்திருக்கும் ஆசனங்களில் "ஸ்திரீகளுக்கும் பிள்ளைகளுக்கு" மென்று யெழுதியிருந்தால் அதில் பன்னிரண்டு வயதுக்கு மேற்பட்ட ஆண்பிள்ளைகள் உட்காரக் கூடாது. எவர்களையு மிந்தச்சட்டத்தின்படி சாற்றுதல்பண்ணினுல் தாம் பன்னிரண்டு வயதுக் குட்பட்டவனென்று எண்பிக்கவேண்டும்.

*விருந்தைகளில் குதிரைமுதலியவை கட்டுதலைத் தடுத்தல்.*

43. எவராவது குடியிருக்கும் வீட்டு விருந்தையை அல்லது வீட்டுப் பக்கத்தில் வாய்த்துக்குத் தகாத இடத்தை அல்லது நகரசங்கத்துக்குச் சொந்தமான இடத்தை அல்லது றோட்டின் பக்கத்து இஸ்தோப்பை குதிரை ஆடுமாடு முதலிய மிருகங்கள் கட்டும், அல்லது துடைக்கும், அல்லது கழுவும் வாயம் அல்லது சாலையாகவாவது பாவிக்கப்படாது.

*றோட்டில் குதிரைதுடைத்தல் கூடாது.*

44. யாதாமொரு றோட்டில் அல்லது ஸதோப்பில் யாதாமொரு காத்தையை அல்லது மிருகத்தை எவராவது குளிப்பாட்டலும் துடைத்தலு மாகாது.

*செத்த மிருகத்தைப் புதைத்தல்.*

45. யாதாமொரு வீடு சாலைகளில் வசிப்பவர் அவ்வீட்டில் யாதாமொரு மாடு, ஆடு, குதிரை, பன்றி முதலியவை செத்தால் அப்படிச்செத்த நாலு மணித்தியாலத்துள் அல்லது இரவில் செத்தால் விடிந்த நாலு மணித்தியாலத்துள் தனது சொந்தச் சிலவில் நகரசங்கத்தலைவர் நியமித்த இடத்தில் கொண்டுபோய்ப் போடல்வேண்டும். அல்லது அவ்வீடிருக்கிற டிவிஸனைச்சேர்ந்த நகரசங்கத்து இன்ஸபெக்டருக்கு மிருக மிறந்ததைப்பற்றி ரிப்போர்ட்பண்ணல் வேண்டும். அவ்விதம் இன்ஸ்பெக்டருக் கறிவித்தால் இறந்த மிருகத்தை யெடுத்துத் தாழ்க்கிற சிலவை இன்ஸபெக்டருக்குக் கொடுத்தல் வேண்டும். இவ்வளவு சிலவென்பது நகரசங்கத்தலைவர் நியமித்தல் வேண்டும்.

*வீட்டுடையவர் அல்லது வசிப்பவர் வேலிகளைக் குறித்த உயரத்துக்கு விட்டு வெட்டிப் பழுது பார்த்தல் கடமை.*

46. யாதாமொரு வீடு நிலம் உடைய சொந்தக்காரனுக்கு அல்லது அதில் வசிப்பவனுக்கு அந்நிலத்தில் சுவர் அல்லது வேலியில்லாவிட்டால், அதை வேலியால் அல்லது சுவரால் வளைக்கும்படி அல்லது வேலி யல்லது சுவரிருந்தால் அதைத் திருத்திப் பழுதுபார்க்கும்படி நகரசங்கத்தலைவர் எழுத்தினுல் அறிவித்தல் கொடுக்கலாம். நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம அச்சுவர் அல்லது வேலிக்கிப்பக்கத்திலிருக்கும் றோட்டு மட்டத்திலிருந்து இவ்வளவு உயரத்துக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டுமென்று அப்படி அறிவித்தல் கொடுக்கவேண்டும். அதுவுமல்லாமல் அவ்வளவு உயரத்துக்கு மேற்பட்டிருக்கும் வேலிகள் மரங்களையும் பிரசித்த றோட்டு வீதிகளின் மேலதொங்கி வழியை மறைக்கும் அல்லது சேதஞ்செய்யும் மரங்கள் வேலிகளையும் வெட்டி ஒழுங்குபண்ணும்படி அறிவித்தல் கொடுக்கலாம். இச்சட்டத்தின் பிரகாரம் எழுத்தினுல் அறிவித்தல் கொடுக்கவேண்டுமென்றால் சொந்தக்காரர் அல்லது வசிப்பவருக்கு அனுப்பவேண்டியது அல்லது தபால் மூலமாய் அனுப்பவேண்டியது. அப்படியே சொந்தக்காரர் அல்லது வசிப்பவர் அவ்வறிவித்தலில் சொல்லியிருக்கும் காலத்துக்குள் சொல்லியிருக்கிறபடி செய்யவேண்டும். அல்லது நகரசங்கத்தலைவரால் கொடுக்கப்பட்ட காலத்துக்குள் செய்யவேண்டும்.

வீட்டுக்காரர் அல்லது குடியிருப்பவர் அந்நிலத்தில் அல்லது தோட்டத்தில் செடி முதலானவை முளையாமல் சுத்திசெய்து வைத்திருக்கவேண்டியது.

*பழுதுசெய்யக்கூடிய நிலைபரத்திலிருக்கு மரங்களை யகற்றுதல்.*

47. நகரசங்கத் தெல்லைக்குள் யாதாமொரு மரம் கொப்பு அல்லது பழம் யாதாமொரு வீட்டின்மேல் விழுந்து அதில் வசிப்பவருக்கு மோசம்செய்யக் கூடுமென்று நகரசங்கம் காணும்பொழுதெல்லாம் அல்லது அப்படிப்பட்ட மரம் கொப்பு அல்லது பழம் யாதாமொரு தெரு வீதியில் தொங்கும்போதெல்லாம் அம்மரம் நிற்கிற நிலத்தின் சொந்தக்காரனுக்கு அல்லது வசிப்பவருக்கு அம்மரத்தை, கொப்பை, அல்லது பழத்தை வெட்டி யெடுக்கும்படி நகரசங்கத்தலைவர் எழுத்தில் அறிவித்தல் கொடுக்கலாம்; அப்படி அறிவித்தல் கிடைத்த மூன்று நாளைக்குள் அந்தச் சொந்தக்காரன் அல்லது வசிப்பவன் மேற்சொல்லியபடி வெட்டி யெடுக்காமலிருந்தால் நகரசங்கத்தலைவர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற ஒரு உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரர் அந்நிலத்துட் பிரவேசித்து அவ்வேலையைச் செய்துமுடிக்கலாம். அப்படிப்பட்ட வேலையின் சிலவு நிலத்தின் சொந்தக்காரன் அல்லது அதில் வசிப்பவன் கொடுத்தல் வேண்டும். இவ்வளவு சிலவு இன்னமாதிரி தீர்மானித்தல் இன்னமாதிரி அறவிடுதல் என்பது 1887, 1890, 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கச்சட்டத்தின் 281 ம் 282 ம் பிரிவுகளில் சொல்லியபடியே மேற்சொல்லிய சிலவுகள் மேற்சொல்லிய கட்டளைச்சட்டத்தினுல் கொடுக்கப்படவேண்டுமென்று கற்பிக்கப்படும் சிலவுகள்போல அறவிடப்படலாம்.

*விலக்கப்பட்ட செய்கைகள்.*

48. பின்வரும் செய்கைகளொன்றும் யாதாமொருவரும் செய்யப்படாது:—

(1.). 20 அடிக்குக் குறையாத நீளமுள்ள ஒரு மரத்தையாவது வேறெந்தச் சாமானையாவது காத்தையி லேற்றிப்போகும்போது அச்சாமானின் ஒரு பக்கத்தில் இன்னொரு காத்தையில்லாமல் போகுதல்.

*இருபதடிக்குக்குறையாத மரம் கொண்டுபோகுதல்.*

(2) இருபதடிக்கு மேற்பட்ட ஓர் மரத்தை அல்லது வேறு சாமானைக் கொண்டுபோகும்போது அதின் ஒரு அந்தத்தை யின்னொருவன் பிடியாமல் போகுதல்.

*இரும்புக்கம்பிகள்.*

(3) இரும்புக்கம்பிக ளேற்றிப்போகும்போது அவைகளி னந்தங்களை யொருமிக்கச் சேர்த்துக் கட்டாமல் விட்டு அவை சத்தம்போடும்படி விடுதல்.

*விரகு கரத்தை.*

(4) விரகு பீப்பா முதலிய சாமான்களை யேற்றும்போது கரத்தையின் தட்டிலிருந்து 6 அடிக்குமேலேற்றுதல்.

*மரம் முதலியவை பக்கத்தில் பீரிட்டிருத்தல்.*

(5) மரம், விரகு, பீப்பா, வைக்கோல் முதலிய சாமான்கள் ஏற்றிப் போகும்போது கரத்தையின் இருதைப்பக்கங்கள் புடைத்து நிற்கும்படி யேத்துதல்.

*ஒழுங்கீனமாய் ஏற்றப்பட்டிருக்கும் கரத்தைகளை மறித்தல்.*

49. மேற்சொல்லிய விதம் யாதாமொரு கரத்தையில் மேற்சொல்லிய கீழ் பிரமாணத்திற்கு விரோதமாய்ச் சாமானை யேற்றிப் போகப்பட்டால் அப்படி யேற்றிப்போகும் கரத்தையைப் பிடித்து மறியல்படுத்த நகரசங்கத்து எந்த உத்தியோகஸதருக்காவது அல்லது எந்தப் பொலீசுகாரனுக்காவது அதிகாரமுண்டு. அதுவுமல்லாமல் அப்படிப்பட்ட உத்தியோகஸதரது அல்லது பொலீஸகாரனது கடமையாகும். அப்படி மேற்சொல்லிய கீழ் பிரமாணத்திற்கு விரோதமாய் ஏற்றிப்போகும் சாமான்கள் அக்கீழ் பிரமாணப்படி ஒழுங்குபண்ணப்பட்டு வைக்கும்வரைக்கும் அப்படி மறியல்படுத்தி வைத்திருக்கலாம்.

*கரத்தைகளில் கவனயீனமாய் ஏற்றிக்கொண்டு போகுதல்.*

50. எவ்வகையான கரத்தையிலாவது எவ்வகையான அழுக்கு, செங்கல், கபூக்கல், கருங்கல், சுண்ணாம்பு முதலிய சாமான்களைக் கவனயீனமாய் ஏற்றி நகரசங்கத் தெல்லைக்குள் உள்ள எந்த வீதி, றோட்டுகளிலாவது, றோட்டில் அவைகள் விழுந்து சேதமுண்டாகத் தக்கவிதமாய் அல்லது றோட்டில் யாதொரு தடை தொந்தரவு செய்யத்தக்க விதமாய் யாதாமொருவருங் கொண்டு போகப்படாது.

*சில வீதிகளில் பாரக்கரத்தை போகக்கூடாது.*

51. நகரசங்கத்தலைவர் சாமான் ஏற்றிப்போகும் கரத்தை போகப்படாதென்று இலங்கை யரசாட்சி "கெசற்றில்" பிரசித்தப்படுத்திய தெரு றோட்டுகளில் அவருடைய அனுமதியின்றி யாதொருவரும் அப்படிப்பட்ட கரத்தை கொண்டுபோகக்கூடாது.

*ஸ்தோப்புகளில் கரத்தைகள் போகக்கூடாது.*

52. எப்படிப்பட்ட கரத்தைகளையாவது யாதாமொரு காலடிப்பாதையில் அல்லது கால் நடையாகப் போவோருக்கென்று செய்திருக்கும் றோட்டுப்பக்கங்களிலுள்ள ஸ்தோப்புகளில் எவராவது தள்ளிக்கொண்டுபோகுதல், இழுத்தல், அல்லது ஓட்டுதல் கூடாது. மேற்படி காலடிப் பாதையில் அல்லது ஸ்தோப்பில் அல்லது அவைகளி னெந்தப் பாகத்திலாவது யாதாமொரு வீதியி னெந்தப் பாகத்திலாவது எப்படிப்பட்ட சாமான்களையாவது விற்பதற்காக யாதாமொரு மேசை தட்டு முதலியவைகள் வைத்தல் கூடாது. கரத்தைகளுக்கு கால்நடையாகப் போகிறவர்களுக்கு எவ்விதமான வசதியீனம் தடையுண்டாகத்தக்கதாய் அப்படி மேசை முதலியவற்றை நிலையாயாவது சிறிது சிறிது நேரமாவது வைத்தல் கூடாது.

*ஆட்போகும் பாதையிலாடுமாடுகளை யோட்டப்படாது.*

53. காலடிப்பாதையில் அல்லது காலாட்கள் போகவென்று விடப்பட்டிருக்கும் ஸ்தோப்பு அல்லது பாதையில் யாதாமொரு மிருகத்தி லேறிப்போகுதல், ஆடுமாடோட்டுதல், பைசிக்கல், டிறைசிக்களி லேறிப்போகுதல் இவை யொன்றும் யாதாமொருவரும் செய்தல் கூடாது.

*வீதிகளுக் கருகிலிருக்கும் வெளிமதில்கள்.*

54. பிரசித்த வீதிகளுக்குப் பக்கத்திலிருக்கும் வீடுகள் தோட்டங்களின் வெளிச்சுவர்கள் சொந்தக்காரரால் அல்லது குடியிருப்பவரால் சுத்தமாயும் தகுந்தவிதமாய்ப் பழுதுபார்த்துமிருத்தல் வேண்டும்.

55. நகரசங்கத்தலைவரால் எழுத்திலுல் உத்தரவுபெறுமல் கொழும்பு வாவியில் அல்லது அதன் கரைகளில் எந்த முகாந்திரத்திலுலாவது எவரும் மீன்பிடிக்கவும் அல்லது பிடிக்க முயலவும் கூடாது.

*உத்தரவில்லாமல் கொழும்பு வாவியில் மீன்பிடித்தல்.*

56. கொழும்பு வாவியில் அல்லது அதின் கரைகளில் எவராவது மீன்பிடிக்க வலையாவது அல்லது மற்ற எந்தச் சாமானையாவது வைத்திருக்கக் கூடாது.

*கொழும்பு வாவியில் பக்ஷிகளை பிடிக்கக் கூடாது.*

57. கொழும்பு வாவியில் அல்லது அதின் கரைகளிலிருக்கும் அல்லது நீந்தும் தன் சொந்தமல்லாத பக்ஷிகளைப் பிடிக்கவு மல்லது கொல்லவும் அல்லது பிடிக்க முயலவு மல்லது கொல்ல முயலவும் கூடாது.

*வாவியில் ஊத்தை கஞ்சல் முதலானவை வீசக்கூடாது.*

58. கொழும்பு வாவியில் அல்லது வாய்க்காலில் அல்லது வாவிக்குப் போய்விழுந் தண்ணீர்ப் பாதையில் யாதாமொருவர் ஊத்தை, கஞ்சல், நாற்றமுள்ள சாமான் முதலியவைகளை வீசவும் அல்லது வீசச்செய்யவுங் கூடாது.

*வாவிகளில் பக்ஷிகளிருப்பிடத்திற்கு யேற்பட்டிருக்கிற பரப்பு.*

59. கொழும்பு வாவியில் துஷ்டபக்ஷிகளி ளிருப்பிடத்திற்கு சிறிது பரப்பில் நகரசங்கத்தால் யெல்லை யேற்படுத்தலாம். அவ்வெல்லைக்குள் நகரசங்கத்தலைவ ரனுமதியின்றி யெவரும் போகப்படாது.

*பாய்முதலியவை தூக்குதல்.*

60. றோட்டு வீதிகளின் பக்கத்தில் பாய் புடவை முதலியவை போன்ற மற்றச்சாமான்களெதுவும் யாதாமொருவருந் தூக்கியாகுதல் அல்லது வேறுவிதமாய் வைக்கப்பட்டாகுதல் இருத்தல் கூடாது.

*கைகாட்டி முதலியவை உத்தரவுக்கேட்டு வைத்தல் வேண்டும்.*

61. எந்தக்காலத்திலாவது நகரசங்கத்தலைவர் நியமித்த யிடத்தி லல்லாமல் வேறு சுவர் கட்டிடம், வீடு, சாலை, மற்று மிவைபோன்ற இடங்களில் யாதாமொரு கைகாட்டிமரம், விளம்பரக்கடதாசி, வேறு மிவைபோலவன் வைத்தலும் ஒட்டுதலும் யாதொருவராகுதல் செய்தல் கூடாது.

*மிருகங்களைப் பிடித்தல்.*

62. நகரசங்கத்தெல்லைக்குள் யாதாமொரு மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, அல்லது வேறு மிருகம் கட்டியிருந்தால், அல்லது விடுகாலியாய்த் திரிந்தால், அல்லது யாதாமொரு வீதியில் மேய்ந்துகொண்டு நின்றுல், நகரசங்கத்தலைவர் அல்லது அவரது அதிகாரம்பெற்ற எவராவது அம்மிருகத்தைப் பிடிக்கலாம். கரத்தையில் பாரம் ஏற்றும்போது அல்லது இறக்கும்போது அக்கரத்தையைச்சேர்ந்த ஒரு மிருகம் மேற்சொல்லியபடி கட்டுப்பட்டிருக்குமாலுல், அப்படிப் பிடித்தல் கூடாது. மேலும் அப்படிப் பிடிபட்ட மிருகத்தை அதிகங் கிட்டுமாயிருக்கிற பொலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டுபோய் ஓர் பொலீஸ உத்தியோகஸ்தர் வசம் ஒப்புவித்தல் வேண்டும். அம்மிருகத்தைப் பிடிக்கிற அல்லது ஏற்றுக்கொள்ளுகிற ஒவ்வொரு உத்தியோகஸ்தரும் நகரசங்கத்தலைவருக்கு உடனே றிப்போட்டுபண்ணல் வேண்டும். அப்படி றிப்போட் கிடைக்கும் நேரத்தில் மிருகத்தின் சொந்தக்காரர் வெளிப்படாதிருந்தால் அம்மிருகத்தைப் பாதுகாக்கவும் அதைப் பிடித்ததைப்பற்றி பிரசித்தப்படுத்தவும் வேண்டிய வழிவகைகளைச் செய்துகொள்ளும்படி அந்நகரசங்கத்தலைவர் அவ்வுத்தியோகஸ்தருக்குக் கற்பித்தல் வேண்டும். மிருகத்தைப் பிடித்தவருக்கு ஒரு ரூபாயும் அதை வைத்திருந்த ஒவ்வொரு நாளைக்கும் 12 சத வீதமும் நகசரங்கத்தலைவருக்குக் கொடுத்தாலன்றிச் சொந்தக்காரனுக்கு அம்மிருகம் கொடுக்கவேண்டியதில்லை. பத்து நாளைக்குள் சொந்தக்காரன் வெளிப்படாதிருந்தால் அல்லது மேற்படி தொகையைக் கட்டாதிருந்தால் அம்மிருகத்தை ஏலத்தில் விற்சலாம். அப்படி விற்பது கடமை. அப்படி விற்றுவந்த பணத்தில் மேற்சொல்லிய ஒரு ரூபாய் முதலிய பணமும், அதை வைத்துப்பாதுகாத்தவன் செலவும்போக மிகுதிப்பணம் நகரசங்கத்தலைவருக்குச் சேரவேண்டியது.

*பிரசித்தமான தெருவிலிருக்கும் லாம்பை கொளுத்துகிறதும் அவிக்கிறதும்.*

63. கொழும்பு கேஸ, தண்ணீர் கொம்பனி லிமிற்றட்டின் மானேஜருடைய (எழுத்திலுல்) அதிகாரம்பெறுமல் எந்தத் தெருவிலிருக்கும் கேஸ்லாம்புகளை யாதொருவரும் கொளுத்தவும் அல்லது அணைக்கவும் அல்லது அப்படிச்செய்ய முயலவும், அல்லது எந்த முகாந்திரத்திலுலாவது அதை ஒழுங்குப்படுத்தவும் அல்லது ஒழுங்குப்படுத்த முயலவும், அல்லது ஏணிமரம் வைத்து ஏறவும் கூடாது.

## 9 ம் அதிகாரம்.

### ஸ்நானம்செய்யும் பிரசித்த இடங்கள்.

*ஸ்நானம் செய்யும் பிரசித்த இடங்கள் கிணறு முதலியவை.*

1. ஸ்நானம்செய்யப் பாவிக்கப்படுகிற தண்ணீருள்ளதாயும், பலரும் பிரசித்தமாய் போய்க் குளித்து வருகிற ஒவ்வொரு கிணற்றுக்கும் இரண்டடிக்குக்குறையாத வுயரமுள்ள பாதுகாப்புச் சுவரிருத்தல் வேண்டும். அச்சுவருக்கு வெளிப்புறத்தில் நிலத்துக்கு இரண்டடிக்குக் கீழ் சிமிந்தி போடப்பட்டிருத்தல் வேண்டும்.

2. மேற்சொல்லிய பிரகாரம் பாவிக்கப்படும் பிரசித்த கிணறுகளைச் சுற்றியிருக்கும் தரையானது அக்கிணற்றுத் தண்ணீர் அத்தரையில் சுவறிப்போகாதபடி அக்கிணற்றிலிருந்து சிறிது தூரத்தில் கட்டப்பட்டிருக்கும் வாய்க்காலுக்குள் அக்கிணற்றுத் தண்ணீர் போய் விழக்கூடியதாய்ச் சரிவாயிருத்தல் வேண்டும்.

*ஆண் பெண்கள் வெவ்வேறிடத்தில் ஸ்நானம்பண்ணல்.*

3. நகரசங்கத்தாரால் ஒரு பாலார் ஸ்நானம்செய்வதற்கென்று குறிக்கப்பட்ட ஓர் பிரசித்தக் கிணற்றில் அல்லது இடத்திலுள்ள தண்ணீரில் மற்றப் பாலாரில் யாதாமொருவர் ஸ்நானம் செய்ய அல்லது வேறுவிதமாய்த் தண்ணீரைப் பாவித்தல் கூடாது.

*வாளிகள் நிந்தை பூசப்பட்டிருத்தல் வேண்டும்.*

4. மேற்சொல்லிய பிரசித்தக் கிணறுகளில் ஸ்நானம்செய்யப் பாவிக்கப்படும் வாளிகள் வருஷத்துக் கிருமுறையாகுதல் நிந்தை பூசப்பட்டு நாள்விதம் துடைக்கப்படல் வேண்டும்.

*வியாதி யுள்ளவர் அக்கிணறுகளில் குளித்தல் கூடாது.*

5. நகரசங்கத்தாரால் ஸ்நானம்செய்வதற்கென்று நியமிக்கப்பட்ட இடத்திலாவது அல்லது மேற்சொல்லிய பிரசித்தக் கிணற்றிலாவது உள்ள தண்ணீரில் சிரங்கு அல்லது வேறு தொற்று நோய்களுள்ள அல்லது அப்படிப்பட்ட நோய்களிருந்து கொஞ்சக் காலத்துக்குமுன் சுகமடைந்த யாராவது ஸ்நானம்செய்தல் கழுவுதல் கூடாது.

*ஸ்நானம் செய்ய விடப்பட்டிருக்குமிடத்தில் மிருகங்குளிப்பாட்டல் கூடாது.*

6. மேற்சொல்லிய பிரசித்த கிணற்றி லல்லது ஸ்நானம்செய்வதற்காய் நியமிக்கப்பட்ட வேறு இடத்தில் அல்லது அவைகளுக்குச் சமீபத்தில் யாராவது ஆடு, மாடு, பன்றி, குதிரை, நாய், அல்லது வேறு மிருகங்களை குளிப்பாட்டல் அல்லது குளிப்பாட்டுவித்தல் அல்லது வேறெந்த முகாந்திரத்தோடாவது அவைகளை யோட்டிக்கொண்டுபோதல் கூடாது.

*பிரசித்த கிணற்றருகில் அழுக்குண்டாக்கல்.*

7. பிரசித்த கிணறு அல்லது ஸ்நானம்செய்யவென்று விடப்பட்டிருக்கிற இடத்துக் கருகில் யாராவது மலசலங் கழித்தலாகாது.

*குடியிருப்பவர் பிரமாணத்தின்படி நடக்கல் வேண்டும்.*

8. அப்படிப்பட்ட ஒரு பிரசித்த கிணற்றின் சொந்தக்காரன் அல்லது அதை வாடகைக் கெடுத்திருப்பவன் மேற்சொல்லிய பிரமாணங்களின்படி தான் நடப்பது மல்லாமல் அவைகளை மற்றவர்கள் மீறாமலும் பார்த்தல் வேண்டும்.

---

## 10 ம் அதிகாரம்.

### வியாபாரத் தொழில் நடத்துமிடங்களைக் குறித்த பிரமாணங்கள்.

*பயனை முதலியவை போடுமிடங்களுக்கு உத்தரவுச்சீட்டு வேண்டல்.*

1. யாதாமொருவரும் விற்கும் நோக்கமாக அல்லது சேர்த்துவைக்கும் நோக்கமாக தோல், பறவையெச்சம், எலும்புத்தூள் அல்லது வேறு பயனைமுதலிய கெட்ட நாற்ற மெழும்பக்கூடிய வேறெந்தப் பொருளையாவது நகரசங்க எல்லைக்குள் எந்த இடத்திலாவது, குதத்திலாவது நகரசங்கத்தலைவரது உத்தரவுச்சீட்டுப்பெறாதபடி சேர்த்து வைத்தலாவது வைப்பித்தலாவது கூடாது. அவ்வுத்தரவுச்சீட்டு இச்சட்டத்தின் அநுபந்தத்திலிருக்கும் H என்னும் மாதிரியானதாயிருக்க வேண்டும். அப்படிப்பெற்ற உத்தரவுச்சீட்டு அது பெற்ற வருஷத்து டிசம்பர்மாதம் 31 ந் தேதி வரையில் பெலப்புள்ளதாயிருக்கும்.

*உத்தரவுச்சீட்டை அழித்தல்.*

2. மேற்சொல்லிய உத்தரவுச்சீட்டு தரமாட்டோமென்று சொல்லவும், கொடுத்த உத்தரவுச்சீட்டை யழிக்கவும் நகரசங்கத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

*தொழிற்சாலை முதலியவை நகரசங் தாருத்தரவின்றி ஸ்தாபித்தல்.*

3. (1) நீராவி யல்லது வேறு யந்திரத்தால் இயக்கப்படுந் தொழில், வேலை முதலியவை எந்தக் கட்டிடங்களிலாவது நகரசங்கத்தலைவரது உத்தரவில்லாமல் யாதாமொருவர் திறக்கப்படாது.

(2) நகரசங்கத்தலைவர் அப்படித்திறக்க நினைத்திருக்கு மிடம் அதிகம் ஜனம் நெருங்கிய இடமாயிருந்தால் அல்லது அயலில் வசிப்போருக்குத் தொந்தரவு அலைக்கழிவு வருமென்று நினைத்தால் உத்தரவு கொடாமல் விடலாம்.

*புகையுண்டுபெடும் அல்லது அபாயம் நேரிடக்கூடிய தொழிற்சாலைகள் அநுமதியின்றிக் கட்டப்படாது.*

4. புகைக்கின்றதும் நீராவியா லியக்கப்படுவதுமான யந்திரங்களையாவது அருகில் வசிப்பவருக்குத் தீங்கை வருவிக்கக்கூடிய யந்திரங்களையாவது நகரசங்கத்தலைவர் பிரியப்படாத எந்த இடத்திலும் யாராவது ஸ்தாபித்தல் கூடாது. நீராவி யந்திரங்களோடு சேர்க்கப்பட்டிருக்கும் புகைக்குழாய்க்களெல்லாம் நகரசங்கத்தலைவர் விரும்புகிற உயரமும் அளவுமுள்ளதா யிருத்தல் வேண்டும்.

5. (1) (a) யாதொரு கைத்தொழில் வியாபார முகாந்தரமாக வைக்கப்பட்ட போறணையிலிருக்கும் நெருப்பானது கூடியளவு புகையில்லாமல் எரியாதிருந்தால் அப்போறணையைப் பாவிப்பதும் பிறர்பாவிக்க விடுவதுங் கூடாது.
   (b) அல்லது கூடியளவு புகையில்லாமல் எறியத்தக்கதாய்ச் செய்யாமல் அசட்டைபண்ணிவிடுவதுங் குற்றம்.

(2) றெயில் பாதையில் சாமான்கொண்டு செல்லும் புகைவண்டியும், ரோட்டு பழுதுபார்ப்பதற்காகப் பாவிக்கப்படும் நீராவி உருளைகளும் இப்பிரிவில் மேற்சொல்லிய பிரகாரம் பாவிக்கப்பட வேண்டியதில்லை.

*தொழிற்சாலைகள் கோதுமையப்பம் சுடும் வீடுகள்.*

6. நீராவி, சலம், அல்லது வேறு கருவிகளைக்கொண்டு இயக்கப்படும் யந்திரத்தினால் வேலை செய்கிற தொழிற்சாலை கோதுமை யப்பம் சுடுமிடம், வேலைசெய்யும் சாய்ப்பு முதலிய இடங்களானது சுத்தமாய் வைக்கப்பட்டு கக்கூசு அழுக்கு நீர்பாயும் வாய்க்கால் முதலியவைகளிலிருந்து எழும்பும் கெட்ட நாற்றமில்லாமல் அவ்வவ் விடங்களில் வேலை நடக்கும்போது புறப்படுகிற வாயு, ஆவி, தூசி முதலிய அழுக்குகளினால் தீங்கு வராவண்ணம் சாதாரணமாய்க் காற்று உலாவிவரத்தக்கதாய் வைக்கப்பட்டிராதிருந்தால் அல்லது மேற்சொல்லிய இடங்களில் வேலைசெய்யு மாட்களின் சுகத்துக்குத் தீங்கு நேரிடக்கூடியதாய் அதிகத் தொகையான ஆட்கள் நெருங்கிநின்று வேலை செய்தால் அல்லது (மேற்சொல்லிய இடங்களிலுள்ள) யாதாமொரு யந்திரம், மில், சாமானுயரத்தும் கருவி அல்லது இவைபோன்ற எந்த யந்திரமாவது சீவனுக்கு அல்லது சரீரத்துக்குத் தீங்கு வரக்கூடிய விதமாய் வைக்கப்பட்டு அல்லது தகுந்த மாதிரியாய் அடைக்கப்பட்டிராதிருந்தால் அப்படியிருப்பது நகரசங்கத்தலைவர் அறியவரும்போது மேற்சொல்லிய இடங்களின் சொந்தக்காரனுக்கு எழுத்துமூலமாய் அறிவித்தல்கொடுத்து மேற்சொல்லிய தீங்கு, அபாயம் முதலியவை

நேரிடா வண்ணம் இன்னயின்ன செய்யவேண்டியதென்று சங்கத்தலைவர் சொல்லுகிறாரோ அவைகளையெல்லாம் செய்தல் சொந்தக்காரனது கடமை. இப்பிரிவிற் சொல்லியவைகள் இதற்குமுன் நிருபிக்கப்பட்டிருக்கும் அல்லது நிருபிக்கப்படும் எந்தக் கட்டளைச் சட்டத்தையாவது தாக்கமாட்டாது.

*நகரசங்கத்தலைவருத்தரவின்றி நீராவிகொண்டு உவிசிலடித்து சத்தம் போடுதலைத் தடுத்தல்.*

7. (1) நகரசங்கத்தலைவரது எழுத்துமூலமாய்ப்பெற்ற உத்தரவில்லாமல் யாதொரு தொழிற்சாலை முதலிய இடங்களில் ஆட்களை அழைத்தலுக்காக அல்லது வேலைவிட்டுப்போகும் நேரத்தைக் குறிப்பதற்காக நீராவி கொண்டு உவிசிலடித்து சத்தம்போடுதல் கூடாது.

(2) மேற்படி சத்தம்போடும் கருவி பாவிப்பதற்காக கொடுத்த உத்தரவை அது பாவிக்கும் ஆளுக்கு ஒரு மாச அறிவித்தல் கொடுத்து நகரசங்கத்தலைவர் எந்த வேளைகளிலும் அழித்துப்போடலாம்.

(3) ஆனால் அந்நகரசங்கத்தலைவர் உத்தரவு கொடுக்கும்பொழுது பொருந்திய சங்கேதங்களை மீருவதற்காக அவ்வுத்தரவை அழித்தாலல்லது நிருத்திவைத்தால் மேற்படி ஒருமாச நொத்திசு கொடுக்க வேண்டியதில்லை.

*தண்ணீரை மருந்து முதலியவைகளால் அழுக்குப்படுத்தக்கூடாது.*

8. (1) கைதொழில் வியாபாரம்செய்பவராவது—

(a) நகரசங்கத்துக்குச் சொந்தமான அல்லது அதின் பொருப்பிலிருக்கிற எந்த வாவி, வாய்க்கால், குளம், நீர்க்கட்டிவைத்திருக்குமிடம், கிணறு முதலிய தண்ணீர் நிற்குமெந்த இடத்துக்குள்ளாவது அல்லது அப்படிப்பட்ட இடத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் பைப்பு, வாய்க்காலுக்குள்ளாவது மேற்படி கைத்தொழில் வியாபாரம் செய்யும் பொழுது கழிக்கப்படும் கழுவிய அழுக்கு நீர் முதலிய பதார்த்தங்களைப் போகவிடுவது அல்லது கொண்டுபோய் விடுவது கொண்டுபோய் விடுவிப்பது முதலிய செய்கைகள் வேணுமென்று செய்தலும் ;

(b) அவ்வியாபாரம் கைத்தொழிலைச்சேர்ந்த எச்செய்கைகளினாலாவது மேற்படி சொல்லப்பட்ட வாவி முதலிய இடங்களிலுள்ள தண்ணீரானது அழுகிப் பழுதுபடுமாகில் அப்படிப்பட்ட செய்கையை வேணுமென்று செய்தலும், ஆகாவாம் ;

(2) மேற்படி கைத்தொழில் வியாபாரம் நடக்குமிடங்களிலுள்ள வேலைசெய்யும் கருவிகள், பைப்புக்குழாய்கள் முதலியவையினுடைய சொந்தக்காரனுக்கு அல்லது அவைகளை மேற்பார்வை பார்ப்போனுக்கு 24 மணித்தியாலத்துக்குக் குறையாத நொத்திசு கொடுத்து நகரசங்கத்தலைவரானவர் மேற்படி கருவிகள், குழாய் முதலியவற்றை திறப்பித்துச் சோதனைசெய்யலாம். அப்படிச் சோதனைசெய்யும்போது மேற்படி கருவிகள், குழாய் முதலியவைகளில் இப்பிரிவில் சொல்லிய பிரமாணங்களுக்கு விரோதமாய் ஏதாவது நடந்திருந்தால், அப்படித்திறந்து சோதனைபண்ணுகிற சிலவும் அவ்வாறு செய்தத்தவறை நீக்க என்னென்ன செய்யவேண்டுமென்று நகரசங்கத்தலைவர் சொல்லுகின்றாரோ அவைகளைச்செய்துமுடிக்கின்ற சிலவும் அக்கருவி, குழாய் முதலியவற்றின் சொந்தக்காரன் அல்லது அவைகளை மேற்பார்வைபார்ப்பவன் அல்லது யாருடைய தப்பிதத்தினால் அது நடந்ததோ அவன் இறுத்தல் வேண்டும்.

அப்படி இப்பிரமாணத்துக்கு விரோதமாய் யாதொன்றும் நடந்திராதிருந்தால், மேற்சொல்லப்பட்ட சிலவுகளும் மேற்படி திறந்து சோதனைபண்ணுவதினால் வரும் நஸ்டமும் நகரசங்கத்தலைவரே இறுத்தல் வேண்டும்.

---

## 11 ம் அதிகாரம்.

### கோதுமை அப்பம் முதலியவை சுடுமிடங்கள்.

*உத்தரவுச்சீட்டு.*

1. நகரசங்கத்தலைவரிடம் வருஷம் ஒருமுறை உத்தரவுச்சீட்டுப் பெறுமல் யாதொருவரும் கோதுமையப்பஞ் சுட்டு விற்குமிடம் வைத்திருக்கப்படாது.

*தண்ணீர் குழாய் வைத்தல்.*

2. கோதுமை யப்பஞ் சுட்டுவிற்கும் நோக்கமாக உத்தரவுச்சீட்டுப்பெற விண்ணப்பஞ் செய்யும் எவரும் அப்படி விண்ணப்பஞ் செய்யுமுன் அவ்வப்பஞ் சுடவென்று நினைத்திருக்கும் வீட்டுக்கு போதிய அளவு தண்ணீர்க்குழாய்கள் வைப்பித்தல் வேண்டும். அதுவுமல்லாமல் அத்தண்ணீர்க்குழாய்களும் அதைச்சேர்ந்த சகல கருவிகளும் அவ்விடத்தை போதியஅளவு தண்ணீர் விட்டுக் கழுவி துப்பரவுபடுத்தல் கூடிய அளவு நல்லமாதிரியாய் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*சுவர்களுக்குப் பிலாஸ்தரும், தலங்களுக்கு சிமிந்தியும் போடவேண்டியது*

3. (1) கோதுமையப்பம் சுட்டுவிற்கும் ஒவ்வொரு கட்டடத்திலுமுள்ள சுவர்கள் வச்சிரத்துடமாகவும், சுண்ணும்பினால் பிலாஸ்தர்பண்ணப்பட்டு வெள்ளையடிக்கப்பட்டும், தலங்கள் சிமிந்தி போடப்பட்டு மிருத்தல் வேண்டும். அத்துடன் கழுவிய நீர்ப்பாய் வாய்க்காலும் நல்லமாதிரியாய்க் கட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

*கக்கூசுமுதலியவைகளிலிருந்து 30 அடி தூரத்துள்ளிருக்கப்படாது.*

(2) கக்கூசு முதலிய குழிகளிலிருந்து 30 அடித் தூரத்துக்குள் யாதொரு கோதுமை அப்பஞ் சுடப்படுமிடம் அல்லது அதின் பாகமிருக்கப்படாது. அதுவுமல்லாமல் கெட்ட நாற்றம் வீசும்போது அன்னாற்றம் பிடிக்கக்கூடிய இடத்திலு மிருக்கப்படாது.

*கோதுமையப்பஞ் சுட வைத்திருக்குமிடத்தில் வேறு தொழில் செய்யப்படாது.*

4. கோதுமையப்பஞ் சுட்டுவிற்கு முகாந்தரமாய் வைக்கப்பட்டிருக்குமிடத்தில் வேறு யாதொரு தொழிலுஞ் செய்யாதிருத்தல் வேண்டும், மேலும் உள்ளே குடியிருக்கும் வீட்டுடன் சம்பந்தப்பட்டிருக்கவும்படாது.

*அப்பஞ்சுடப் பாவிக்கப்படும் கருவிகள்.*

5. கோதுமையப்பஞ் சுடுமிடத்திலுள்ள கருவிகள் தட்டுமுட்டுச் சாமான்களெல்லாம் சுத்தமாய் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*மா முதலியன.*

6. கோதுமையப்பஞ் சுடுவதற்காகப் பாவிக்கப்படும் மா, சலம் மற்றும் பதார்த்தங்களெல்லாம் நல்லதும் சுகத்துக்கேற்றதாயு மிருத்தல் வேண்டும். மேலும் மா வைக்கிறதற்காக வேறு அறையிருக்கவேண்டும், அப்பஞ்சுடுகிற இடத்தில் மா முதலியவைகளை வைக்கப்படாது.

*குப்பை முதலியவை யகற்றல்.*

7. அவ்விடங்களிலுள்ள குப்பை, அழுக்கு முதலியவை யெல்லாம் பெருக்கித் தள்ளப்பட்டு அழுக்கு நீர்பாயும் வாய்க்கால்களெல்லாம் நல்லாய்க் கழுவப்படல் வேண்டும். மேலும் அவ்வீடு எப்பொழுதும் சுத்தமாயிருத்தல் வேண்டும்.

*தொற்றுநோயுள்ளவர்கள் வேலைசெய்யப்படாது.*

8. அப்பஞ் சுடுமிடத்தில் தொற்றுநோயாளராவது அல்லது அருவருப்புள்ள நோயாளிகளாவது அப்படி நோயாளரைச் சிறிதுநேரத்துக்கு முன்பதாகப் பார்த்தவராவது குழித்துச் சரீரம் கழுவாதவர்களாவது, அசுத்தர்களாவது வேலைசெய்யாதிருத்தல் வேண்டும்.

*கோதுமையப்பஞ் சுடு மிடத்தின் நிருபன.*

9. கோதுமை யப்பஞ் சுடுமிடத்தைச் சேர்ந்த எந்தக் கட்டடமாவது அல்லது கட்டடத்தின் பாகமாவது மற்றெந்த விஷயத்திற்குப் பாவிக்கப்பட்டாலும், அந்த கட்டடம் கோதுமையப்பஞ் சுட்டு விற்கப்படு மிடத்துடன் சம்பந்தப்பட்டிருக்கும்.

*கோதுமை யப்பம் ஏற்றிக்கொண்டு போகுதல்.*

10. கோதுமை யப்பத்தை மூடின கரத்தையி லல்லது மூடின கூடை, தகரப்பெட்டி அல்லது மற்றெந்தப் பாத்திரத்திலே கொண்டுபோகிறதேதவிற ஒருவரும் ஒரு இடத்திலிருந்து மற்ற இடங்களுக்குக் கொண்டுபோதல் கூடாது. அப்படிக் கொண்டுபோகும் கரத்தை, கூடை, தகரப்பெட்டி, அல்லது மற்றப் பாத்திரங்கள் எப்பொழுதும் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும். முன்னேற்றிக்கொண்டுபோன அல்லது அழுக்காயிருக்கிற அல்லது சுத்திகரமில்லாத அப்பத்தை மறுபடியும் கொடுத்தல் கூடாது.

*சாப்பாட்டு வீடுகள்.*

11. இந்தக் கட்டளைச்சட்டங்கள் வெளியானபின் யெவரும் சாப்பாட்டுச்சாலை வைக்க அல்லது மேல்பார்க்க வேண்டுமென்றல் அது துவற்கம்செய்ய 7 நாளுக்கு முன்பதாக நகரசங்கத்தலைவருக்கு அறிவித்தல் வேண்டும். அப்படி இந்தக் கட்டளைச்சட்டங்கள் வெளியாகிறதற்கு முன்னிருக்கும் சாப்பாட்டுச்சாலைகளை யுடையவர்கள் இந்தக் கட்டளைச்சட்டம் வெளிப்பட்ட 30 நாளைக்குள் மேற்சொன்ன அறிவித்தல் வேண்டும். எந்தச் சாப்பாட்டுச்சாலைகளும் எவர்களுடைய பாரத்திலிருக்கிறதோ அவர்களையே அச்சாப்பாட்டுக்கடை யுடையவர்களென்றும் அல்லது மேற்பார்வைக்காரர்களென்றும் சாட்டப்படும்.

12. 3 ம், 5 ம், 7 ம், 8 ம் கட்டளைச்சட்டங்களின் பிரபந்தங்களால் சாப்பாட்டுச்சாலைகளுக்குக் கேட்கப்படல் வேண்டும். சாப்பாட்டுச்சாலையென்றல் சோறுவிற்கு மிடமும் உட்பட, ஆனால் 1891 ம் ஆண்டின் உத்தரவுச்சீட்டிலிருக்கும் சட்டத்தின் பிரகாரம் உத்தரவுச்சீட்டுப்பெற்ற வீடுகளைக் குறித்தல்ல.

---

## 12 ம் அதிகாரம்.

### ஆடுமாடு அறுக்குஞ் சாலைகள்.

*ஆடுமாடறுக்குஞ் சாலைகள்.*

1. ஒவ்வொரு பிரசித்தமாய் ஆடு மாடறுக்குஞ் சாலைகளும், அரசாட்சியா லேற்படுத்திய உத்தியோகஸ்தருடைய மேல்பார்வையிலிருக்க வேண்டும், அப்படிப்பட்டவரை ஆடுமாடறுக்குஞ் சாலையின் மேற்பார்வைக்காரரென் றெண்ணப்படும்.

*ஆடுமாடறுக்கும் நேரம்.*

2. நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் ஏற்படுத்துகிற நேரத்தில் தவிற மற்ற நேரங்களில் உத்தரவுச்சீட்டுப்பெற்ற எவ்விறைச்சிக் கடைக்காரனாவது மிருகங்களை யறுக்கவும் அல்லது அறுப்பிக்கவுங் கூடாது.

*ஆடுமாடறுக்கு மிடம்.*

3. ஆடுமாடறுக்குஞ் சாலையின் மேற்பார்வைக்காரர் அந்த ஆடுமாடறுக்குஞ் சாலைக்குள் நியமிக்கிற இடத்தில் மற்றும் உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்கடைக்காரன் மிருகங்களை யறுக்கலாம்.

*உத்தரவுச் சீட்டுகள்.*

4. நகரசங்கத்தலைவர் கற்பித்திருக்கு மாதிரியில் அச்சிடப்பட்டிருக்கும் உத்தரவுச்சீட்டில் ஆடுமாடறுக்கும் சாலைக்கு மேற்பார்வைக்காரர் எழுதி அவனுக்குக் கொடுக்காதபடி எந்த மிருகத்தையாவது உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்காரன் எவனாவது கொல்லுதல் கூடாது. இவ்வுத்தரவுச்சீட்டு ஆடுமாடறுக்குஞ் சாலைக்கு மேற்பார்வைக்காரரால் நிரப்பப்பட்டு, அவராலும் அதைக் கொடுக்கப்படும் இறைச்சிக்காரனாலும் கையொப்ப மிடப்பட்டு அதில் கொடுத்த தேதியும் போடவேண்டியது.

*உத்தரவு ஏழு நாளைக்குப் பெறும்.*

5. கொல்வதற்காகக் கொடுக்கப்படும் உத்தரவுகொடுத்த தேதி துவக்கம் ஏழு நாளைக்கு மாத்திரம் பெலப்புள்ளதாயிருக்கும்.

*கொல்ல உத்தரவு கொடாமல் விடலாம்.*

6. உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்காரன் 1896 ம் ஆண்டின் 10 ம் சட்டத்தின் செடூலில் சொல்லப்பட்டிருக்கும் A எழுத்துப்போட்ட அச்சிக்கடதாசியில் தன்னுடைய பெயருக்கு சர்ட்டுபிக்கெற் பெற்றுவந்தாலொழிய, அவர்களுக்கு மிருகங்களை யறுக்க உத்தரவுச்சீட் டளிக்கப்படாது. ஆனால் கொல்லு மிருகங்களை விற்க விரும்புவோன் அவ்விறைச்சிக்கடைக்காரனுடன் ஆடுமாடறுக்குஞ்சாலைக்கு மேற்பார்வைக்காரர் முன் வெளிப்பட்டு மேற்சொல்லிய விதமான சர்ட்டிபிக்கெட்டைக் கொண்டுவந்து மேலும் தான் இறைச்சிக்கடைக்காரனுக்கு விற்கிறேனென்று ஒரு உறுதிச் சீட்டிலும் கையொப்பம் வைத்தால், அவ்விறைச்சிக்கடைக்காரன் கொல்ல உத்தரவு கொடுக்கலாம். மிருகங்களை ஆடுமாடறுக்கும் சாலைக்குள் கொண்டுபோகிறதற்கு முன் சொல்லப்பட்ட சர்ட்டிபிக்கெட்டை ஆடுமாடறுக்கும் சாலைக்கு மேற்பார்வைக்காரரிடத்தில் கொடுத்தல் வேண்டும்.

*மிருகங்களை யறுக்கிறது.*

7. எந்த உத்தரவுச்சீட்டுப் பெற்ற இறைச்சிக்கடைக்காரன் அல்லது மற்ற யெவரும் ஆடுமாடறுக்க உத்தரவுச்சீட்டுப்பெறவேண்டி கொடுக்கப்படும் சற்டிபிக்கேற்றில் காண்பிக்கப்படும் மிருகங்களைப்பற்றி யெழுதப்பட்டில்லாதிருந்தாலும் அல்லது காண்பிக்கப்படும் மிருகங்களின் குறி, அளவு அல்லது மற்ற முக்கியமான காரணங்களைப் புஸதகத்தில் பதிவுசெய்யப்படாமல் புறட்டாகயெழுதியிருந்தாலும், அப்படிப்பட்ட சற்டிபிக்கேற்றைக் காண்பிக்கப்படாது. மேலும் அப்படிப்பட்ட மிருகங்களை ஆடுமாடறுக்குஞ் சாலைக்குள் விடப்படாது, அதைக் கொண்டுவந்தவர்கள் உடனே திருப்பிக்கொண்டுபோதல் வேண்டும்.

8. பிரசித்தமான ஆடுமாடறுக்கு மிடத்தில் விற்றுப்போட்ட யெந்த மிருகங்களை யறுக்கப்படுமுன் யாராவது அம்மிருகத்தைதப்பற்றி வளக்கிடுவோர்களாகில் அவைகளை அறுத்தலை நிறுத்தப்படும். அம்மிருகத்தை விற்றவன் அதற்குச் சேரவேண்டிய கூலியைக் கொடுத்துவிட்டு, அதை ஆடுமாடறுக்கு மிடத்தை விட்டுக்கொண்டு போதல் வேண்டும். அப்படிச் சேரவேண்டிய பணத்தைக் கொடாத பக்ஷத்தில் அம்மிருகத்தை இந்த அதிகாரத்தின் 18 வது கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் செய்யப்படும்.

*மிருகங்களைச் சரியாய்ப் பத்திரப்படுத்தல் வேண்டும்.*

9. ஆடுமாடறுக்கிற சாலையில் கொண்டுவரப்பட்ட அல்லது விடப்பட்டிருக்கிற எல்லா மிருகங்களையும் அவைகள் தப்பிப்போகாதபடி கயருகொண்டு சரியாய்ப் பத்திரப்படுத்தி வைத்தல் வேண்டும்.

*இரைச்சிக்கடைக்காரனுடைய வேலைக்காரனுடைய பெயரை ரெஜிஸ்டர் பதிவுசெய்தல்.*

10. உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒவ்வொரு இறைச்சிக்கடைக்காரனும் ஆடுமாடறுக்குஞ் சாலையில் வைக்கப்படும் தன்னுடைய வேலைக்காரருடைய பெயரை நகரசங்கக் கந்தோரில் ரெஜிஸடர் பதிவுசெய்விக்கவேண்டும். நகரசங்கத்தலைவர் எந்தப்பெயரை ரெஜிஸடர் பதிவுசெய்யக்கூடாதென்று மறுத்தாலும் அல்லது ரெஜிஸடர் பதிவுசெய்யப்பட்ட பெயரை அழித்தாலும் அப்படிப்பட்ட பெயரை உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்கடைக்காரன் மறுபடியும் வேலைக்கென்று வைத்திருக்கப்படாது.

11. ஒவ்வொரு உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்கடைக்காரரும் தன்னுடைய உத்தரவுச்சீட்டிலும் தன்னுடைய ஒவ்வொரு வேலைக்காரரை ரெஜிஸடர் பதிவுசெய்யப்பட்ட சற்டிபிக்கெட்டிலும் (கிடைத்தவுடன) உறுதிப்படுத்திய நகல்கள்யெடுத்து ஆடுமாடறுக்கிற சாலைக்கு மேற்பார்வைக்காரரிடம் வைத்தல்வேண்டும்.

*தோல், குடல்முதலியவை.*

12. கொல்லப்பட்ட மிருகத்தின் தோல் குடல் முதலியவைவை இரைச்சிக்காரன் அல்லது அவனுடைய வேலைக்காரர் அதற்காக வைத்திருக்குமிடங்களிற் சேர்த்துவைத்துக் கழுவித் துப்பரவுபண்ணியபின் தான் எடுத்துக்கொண்டு போதல்வேண்டும்.

*இறைச்சிக்காரர் அல்லது அவரது*

13. உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்காரன் அல்லது அவனுடைய ரெஜிஸடர் பதிவுசெய்யப்பட்ட வேலைக்காரர் ஆடுமாடறுக்குஞ் சாலையில் வேலைசெய்யும் மேற்படி இறைச்சிக்கார

*வேலைக்காரர் அவ்வாறு மாடறுக்குஞ் சாலைக்குச்செய்யும் நஷ்டம்.*

று லல்லது அவனுடைய வேலைக்காரரால் உண்டாகும் நஷ்டம் முழுவதற்கும் இறைச்சிக்காரனே உத்தரவாதியாயிருக்கப்படுவான்; மேலும் அந்த நஷ்டங்களுக்காக நகரசங்கத்தலைவர் சரியென்று கண்டு கேட்கப்படும் பணத்தை இறைச்சிக்காரன் செலுத்தவேண்டியது. அப்படி அந்தப் பணத்தை கொடுக்கத்தவறுவானாகில், அப்படிப்பட்டவனுடைய உத்தரவுச்சீட்டை யழிக்கவும் அல்லது அந்தப்பணத்தை அவனிடத்திலும் அவனுடைய பொறுப்புக்காரனிடத்திலும் அறவாக்கவும், அல்லது இருவகையாய்ச்செய்யவும் நகரசங்கத்தலைவருக்குத் தத்துவமுண்டு.

*குஷ்டரோகமுதலிய நோய்களால் வருந்துபவர்சாலைக்குள் விடப்படாது.*

14. குஷ்டரோகம் தோல்வியாதிகள்முதலிய தொற்றுவியாதிகளினால் வருந்தும் எவரையாகிலும் ஆடுமாடறுக்கிற சாலைக்குள் பிரவேசிக்க இடங்கொடுக்கப்படமாட்டாது.

*கரத்தைகள் வேண்டும்பொழுது காண்பிக்கவேண்டும்.*

15. உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்காரரல்லது மற்றவர்கள் நகரசங்க கட்டளைச்சட்டத்தின்படி இறைச்சி கொண்டுபோகிறதற்காகப் பாவிக்கப்படும் ஒவ்வொரு கரத்தைகளையும் ஆடுமாடறுக்கும் கட்டடத்திற்குள் போனவுடன் ஆடுமாடறுக்குஞ் சாலைக்கு மேற்பார்வைக்காரரிடம் சோதனைக்காகக் காண்பிக்கவேண்டியது. மேற்படி கரத்தைகள் சுத்தமாயும் பாவிக்கக்கூடிய நிலைமையிலுமில்லாத பக்ஷத்தில் மேற்படி ஆடுமாட்டறுக்கும் சாலையிலிருந்து இறைச்சி கொண்டுபோக உத்தரவுகொடுக்கப்படமாட்டாது.

*கொடுக்கவேண்டியசலார்.*

16. பின்வருமாறு சலார்கொடுத்தல் வேண்டும்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| கொல்லப்படுமொவ்வொரு மாட்டுக்குமுத்தரவுபெற | ... | 0 50 |
| கொல்லப்படுமொவ்வொரு ஆட்டுக்கு முத்தரவுபெற | ... | 0 15 |
| கொல்லப்படுமொவ்வொரு பன்றிக்கு முத்தரவுபெற | ... | 0 15 |
| ஒவ்வொரு மாடும் வைத்துணவூட்ட ஒவ்வொரு இருபத்திநாலு மணித்தியால நேரத்திற்கும் அல்லது அதினொவ்வொரு பாகத்துக்கும் ... ... | ... | 0 25 |
| ஒவ்வொரு ஆடும் வைத்து உணவூட்ட ஒவ்வொரு இருபத்தினாலு மணித்தியால நேரத்திற்கு அல்லது அதினொவ்வொரு பாகத்துக்கும் ... ... | ... | 0 15 |
| ஒவ்வொரு பன்றியும் வைத்து உணவூட்ட ஒவ்வொரு இருபத்தினாலு மணித்தியால நேரத்துக்கு அல்லது அதின் ஒவ்வொரு பாகத்துக்கும் ... ... | ... | 0 15 |

17. ஆடுமாடறுக்கும் சாலைக்குச் சேரவேண்டிய செலவு முதலானவைகளைக் கட்டி அதை அறுக்கிறதற்கு உத்தரவுச்சீட்டுப்பெறும் வரைக்கும் எந்த மிருகத்தையும் எவரும் கொல்லப்படாது. மேற்படி பணம் செலுத்தாவிட்டால் அந்த மிருகத்தை 18 வது கட்டளை சட்டத்தின் பிரகாரம் செய்யப்படும்.

*மிருகங்களின் விற்பனை முதலியவை.*

18. எந்த மிருகங்களும் சலார் கொடுக்கப்படாமல் ஆடுமாடறுக்குஞ் சாலையில் தங்கியிருந்தால் நகரசங்கத்தலைவரால் இரண்டு நாள் (மேளம் அடித்தலால்) அறிவித்தல் செய்தபின் அதை பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். மேற்படி விற்பனையில் வரும் பணத்தில் அந்த மிருகத்தால் ஆடுமாட்டறுக்குஞ் சாலைக்குச் சேரவேண்டிய பணத்தைக் கழித்து மீதியிருந்தால் அந்த மிருகத்தை ஆடுமாடறுக்குஞ் சாலைக்குக் கொண்டுவந்தவர்களுக்கு எழுத்தினால் தெரிவித்துக் கொடுக்கப்படும்.

*நோயுள்ள மிருகங்களைக் கொல்லப்படாது.*

19. எந்த மிருகங்களையும் கொல்ல உத்தரவுச்சீட்டு கொடுக்குமுன் அல்லது கொடுத்தபின் மனுஷருணவுக்குத்தகாதென்று காணப்படும் அல்லது நோய் கொண்டிருக்கும் எந்த மிருகத்தையாவது கொல்லக்கூடாதென்று ஆடுமாடறுக்கும் சாலைக்கு மேற்பார்வைக்காரரால் அல்லது நகரசங்க மிருக வயித்தியரால் தடங்கல்செய்யக்கூடும். மேலும் அப்படிப்பட்ட மிருகத்தை யெவரும் கொல்லக்கூடாது.

*நோய்பிடித்த இறைச்சி.*

20. செத்த அல்லது சாகப்போகிற மிருகங்களை ஆடுமாடறுக்குஞ் சாலைக்குள் விடப்படாது. அப்படிப்பட்ட மிருகங்களை ஆடுமாடறுக்குஞ் சாலைக்குக் கொண்டுவந்தால் அவைகளை தொற்றுநோயுள்ள மிருகங்களைப்போல் பாவிக்கப்படும்.

21. தொற்றுநோயுள்ள மிருகங்களை ஆடுமாடறுக்குஞ் சாலைக்குக் கொண்டுவரப்பட்டால் அவைகளை நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் நியமிக்கு மிடத்தில் கட்டப்படும். மேலும் நகரசங்கத்தலைவர் சரியென்று கண்டால் அவைகளை அவ்விடத்திலேயே கொல்லப்படும்.

*உத்தரவுச்சீட்டளிக்கத் தடங்கல் செய்யப்பட்டபொழுது மிருகங்களைக் கொண்டுபோகத் தவறினால்.*

22. எவர்களும் ஆடுமாடறுக்கும் சாலைக்கு கொல்லுகிறதற்காகக் கொண்டுவரப்பட்ட மிருகங்களைக் கொல்லக்கூடாதென்று தடங்கல்செய்து அல்லது உத்தரவுச்சீட்டு கொடுக்கப்படாதென்று மறுத்தபொழுது அம்மிருகங்களை மேற்படி ஆடுமாடறுக்குஞ் சாலையினின்று பன்னிரண்டு மணித்தியாலத்துக்குள் கொண்டு செல்லாவிட்டால் நகரசங்கத்தலைவரால் இரண்டு நாள் (மேளம் அடித்தலால்) அறிவித்தல் செய்த பிற்பாடு மேற்படி மிருகங்களைப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும். மேற்படி விற்பனையில் வரும்படியான பணத்தில் அந்த மிருகத்தால் ஆடுமாடறுக்குஞ் சாலைக்குச் சேரவேண்டிய பணத்தைக் கழித்து மீதியிருந்தால் அந்த மிருகத்தை அச்சாலைக்குக் கொண்டுவந்தவர்களுக்கு எழுத்தினால் தெரிவித்துக் கொடுக்கப்படும்.

*ஆடுமாடறுக்குஞ் சாலையிலிருந்து இறைச்சி கொண்டுபோக ஒரு விடுதலைச்சீட்டு தேவை.*

23. பிரசித்த மிருகமறுக்குஞ் சாலையில் கொல்லப்பட்ட எந்த மிருகத்தின் இறைச்சி, தோல், குடல் முதலானவைகளை நகரசங்கத்தலைவர் கற்பித்த ஓர்வித பாஸ் (விடுதலைச்சீட்டு) மிருகமறுக்குஞ் சாலையின் மேற்பார்வைக்காரரால் அல்லது அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கு மோர் உத்தியோகஸ்தரின் கையொப்பமிடப்பட்டு எடுத்துக்கொள்ளாமல் யாராவது இறைச்சி, தோல், குடல், முதலியவைகளை யெடுத்துப்போதல் கூடாது. அப்படி பாஸ் பெற்று இறைச்சி, தோல், குடல், முதலியவைகளைக் கொண்டுபோகிறவர்கள் நகரசங்க உத்தியோகஸ்தரால் கேட்கப்பட்டால் உடனே சோதனைக்காக அவர்கள் பெற்ற பாஸைக் காண்பித்தல் வேண்டும். அப்படிச்செய்ய யாராவது தவறினால் அந்த இறைச்சி, தோல், குடல், முதலியவைகளை நகரசங்க கந்தோருக்கு அல்லது பொலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டுபோய் நகரசங்கத்தலைவர் உத்தரவுசெய்கிற பிரகாரம் விற்கப்படும், அதில் சொந்தக்காரனுக்கு யாதொரு சம்பந்தமும் கிடையாது.

*ஆடுமாடறுக்குஞ் சாலையில் நாய்கள் பிரவேசிக்கக்கூடாது.*

24. மிருகமறுக்குஞ் சாலைக்குள் நாய்கள் பிரவேசிக்கவிடுதல் கூடாது. நாய்களின் சொந்தக்காரரும் அவைகளை உள்ளே பிரவேசிக்க விடவும் கூடாது. அப்படிப் பிரவேசிக்கும் நாய்களையெல்லாம் பொலீஸார் பிடித்துச் சொந்தக்காரரில்லாத நாய்களை யென்னசெய்வாரோ அப்படிச் செய்தல் வேண்டும்.

*ஆடுமாடறுக்குஞ் சாலையில் சத்தம் செய்தல்.*

25. மிருகம் அறுக்குஞ் சாலையில் எந்த உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்காரனாவது அல்லது அவனுடைய ரெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்ட வேலைக்காரனாவது அல்லது அவ்விடத்திலிருக்கிற யெவராவது சத்தம்செய்தல், சண்டைபிடித்தல், கோபம்மூட்டக்கூடிய வசைச்சொல் அல்லது கூடாத பாஷை பேசுதல் முதலியவைகள் செய்தல் கூடாது. இக்கீழ் பிரமாணத்துக்கு விரோதமாய் நடப்பவரை சாலையின் மேற்பார்வைக்காரரா லல்லது அவரது உதவிக்காரரால் பிடித்து வெளியே விடப்படும்.

*விசேஷ உத்தரவுச்சீட்டு.*

26. நகரசங்க எல்லைக்குள் உத்தரவுச்சீட்டுப்பெற்றிருக்கிற இறைச்சிக்கடைக்காரனே யல்லாமல் வேறொருவரும் ஆடு மாடு கொல்லக்கூடாது. ஆனால் நகரசங்கத் தலைவரிடத்தில் ஒரு விசேஷ உத்தரவுச்சீட்டைப் பெற்றிருந்தால் அப்படிச் செய்யலாம். அப்படி விசேஷ உத்தரவுச்சீட்டுப்பெறுகிற எவரும் அவ்வுத்தரவுச்சீட்டில் சொல்லிய விடத்திலும் அதில் சொல்லப்பட்ட சங்கேதங்களின்படியுமே யல்லாமல் வேறு இடத்திலும் வேறு மாதிரியாகவும் ஆடு மாடு கொல்லுதல் கூடாது. அப்படி விசேஷ உத்தரவுச்சீட்டுப்பெறுவதற்கு விண்ணப்பம்செய்யும்போது 1898 ம் ஆண்டின் 10 வது கட்டளைச்சட்டத்தின் செடூலில் A எழுத்துப்போட்டிருக்கிற விபரம் போன்ற ஒரு விபரமும் அவ்விண்ணப்பத்திலெழுதப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு விண்ணப்பஞ்செய்வோருடைய சொந்த மிருகந்தானென்று ஒரு றிப்போட்டை ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தர் அல்லது விண்ணப்பக்காரரிருக்கும் டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஓர் தலைமைக்காரன் கொடுத்தனுப்பியிருத்தல் வேண்டும். அவ் விசேஷ உத்தரவுச்சீட்டுக்கு இருபத்தைந்து சதம் சவார் கொடுத்தல்வேண்டும்.

*ஆடுமோட்டுறுக்குமிடம் நாள்தோறுமிரண்டு தரம் கழுவுதல்.*

27. ஆடுமோட்டுறுக்கும் ஒவ்வொரு இடத்தையும் நகரசங்கத்தலைவர் நியமித்த நேரங்களில் தினந்தோறும் இரண்டு முறைக்குக்குறையாமல் நல்லாய்க் கழுவிக் கூட்டித் துப்பரவுசெய்தல் வேண்டும்.

*மூன்று மாசத்துக்கு ஒருமுறை சுண்ணும்பு பூசுதல்.*

28. ஆடுமோட்டுறுக்கும் ஒவ்வொரு இடத்தையும் குறைந்த கணக்கு மூன்று மாசத்துக்கு ஒருமுறையாவது உள்ளும் புறமும் சுண்ணும்புபூசி வெள்ளையடித்தல் வேண்டும்.

*கல்லுப் பதித்தல் வேண்டும்.*

29. ஆடுமோட்டுறுக்குமிடத்தின் தளங்களெல்லாம் கருங்கல்லாலாவது தளிவிசைக்குப் பாவிக்கக்கூடிய செங்கல்லாலாவது, அல்லது இவைபோன்ற ஓட்டினுலாவது அல்லது கருங்கல்லும் சிமிந்தியும் கலந்தாவது தளிவிசை போடப்பட்டிருத்தல் வேண்டும். அத்தளிவிசைக் கற்களினிடையேயுள்ள பொருத்துக்கள் வருஷம் வருஷம் குறைந்த பட்சம் ஒருமுறையாவது புதிதாய்ச் சாந்துபோட்டு அடைத்தல் வேண்டும்.

*நோய்பிடித்த மிருகங்கள்.*

30. மேற்படி நல்லதென்று காணப்பட்டுக் கொல்லப்பட்ட மிருகத்தி னிறைச்சியானது நோய்ப்பட்டிருப்பதாக அல்லது வேறு ஞாயம்பற்றி மனுஷருணவுக்குத் தகாததாகக் காணப்பட்டால் மேற்படி மேற்பார்வைக்காரர் அல்லது நகரசங்கத்தலைவரிடத்திலிருந்து உத்தரவுபெற்றவராவது மேற்படி இறைச்சி அவ்விடத்தில் அப்போதே அழித்து இல்லாமற் செய்து மனுஷருணவுக்கு விற்கவாவது பாவிக்கவாவது விடாமல் தடுத்தல்வேண்டும். மேற்படி இறைச்சி மனுஷருணவுக்குத் தகாததல்லவென்று யாராவது சொன்னல் மேற்படி மேற்பார்வைக்காரர் அல்லது அதிகாரம்பெற்றவர் உடனே ஆட்டுமோட்டு வயித்தியரையாவது அல்லது நகரசுக வைத்தியரையாவது அவ்வாடுமோட்டுறுக்குஞ் சாலைக்குக் கூட்டிக்கொண்டுபோய் அவ்விறைச்சியைச் சோதித்துப் பார்த்தல்வேண்டும். அவ்வாட்டுமோட்டு வயித்தியர் அல்லது நகரசுக வைத்தியர் அவ்விறைச்சியை மனுஷருணவுக்குத் தகாததெனத் தீர்ப்பாராகில் மேற்படி மேற்பார்வைபார்ப்பவர் அல்லது மேற்படி அதிகாரம்பெற்றவரதன்பின் மேற்சொல்லிய விதம் அவ்விறைச்சியை அழித்து இல்லாமல்செய்தும்போடலாம். இவ்விஷயத்தில் மேற்படி வயித்தியராவது அல்லது நகரசுகவயித்தியராவது தீர்த்த தீர்ப்பு கடைசித் தீர்ப்பாயிருக்கும்.

*ஆடுமோட்டுறுக்கும் நேரத்தில் ஒருவரும் சாலைக்குப்போகப்படாது.*

31. இறைச்சிக்கடைக்காரரும் அவர்களுதவிக்காரரும் ஆடுமோட்டுறுக்குஞ் சாலையைச்சேர்ந்த நகரசங்க உத்தியோகஸ்தரும் அதிகாரம் பெற்றவர்களுமாகிய இவர்களே யல்லாமல் வேறே யாராவது மிருகங்களைக் கொன்று தோலுரித்து வெட்டுகிற நேரத்தில் மிருகங்களறுக்குஞ் சாலைக்குள் உட்பிரவேசிக்கக் கூடாது.

*நோயுள்ள மிருகங்களைக் கொண்டுவரப்படாது.*

32. நோயுள்ள யாதாமொரு ஆடுமாடு முதலியவற்றை மிருகங்களறுக்குஞ் சாலைக்குள் கொண்டுவரக் கூடாது.

*இறைச்சிக்கடைக்காரன் விட்டுப்போகும் தோல் முதலியவை.*

33. இறைச்சிக்கடைக்காரரல்லது அவர்களுடைய உதவிக்காரர் ஆடுமோட்டுறுக்குமிடத்தில் விட்டுப்போகும் குடல் முதலியவற்றை பலருக்கும் பொதுவான குடல் முதலியவைபோல எடுத்து விட்டுப்போடல் அல்லது வேறேதாவது செய்தல்வேண்டும்.

*குறித்த நேரத்தின்பின் விடப்படுந் தோல் முதலியவை.*

34. மேற்பார்வைப்பார்ப்பவரால் நியமிக்கப்படும் மணித்தியாலத்தின்பின் ஆடுமோட்டுறுக்குஞ் சாலையில் விடப்படும் தோல் குடல் முதலியவை மேற்படி உத்தியோகஸ்தரின் அனுமதியில்லாமல் விடப்பட்டிருந்தால், சொந்தக்காரர் வேண்டாமென்று விட்டுவிட்டார்களென்று எண்ணப்பட்டு நகரசங்கத்தின் சொந்தப் பொருளாகக் கவனிக்கப்படும். அவைகளை நகரசங்கத்தார் தாங்கள் நினைத்தபடி செய்யலாம்.

*நகரசங்க எல்லைக்கப்பால் கொல்லப்பட்ட மிருகத்தினிறைச்சி.*

35. நகரசங்கத்துட்பட்ட ஆடுமோட்டுறுக்குஞ் சாலையில் கொல்லப்படாது ஆடு, மாடு, செம்மறியாடு முதலியவைகளினிறைச்சியாவது குடல் முதலியவையாவது நகரசங்க எல்லைக்குள் நகரசங்கத்தலைவரது விசேஷ உத்தரவுச்சீட்டில்லாமல் கொண்டுவருதல் கூடாது.

*நகரசங்க எல்லைக்குப்புறத்தில் கொல்லப்பட்ட மிருகங்கள்.*

36. நகரசங்க எல்லைக்கப்பால் கொல்லப்பட்ட மிருகத்தின் மாமிசமாவது குடல் முதலியவையாவது நகரசங்கத்தலைவரால் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் ஓர் உத்தியோகஸ்தரால் சோதிக்கப்பட்டு மனுஷ உணவுக்குத் தகுந்ததெனக் காணப்பட்டாலன்றி, அவ்விறைச்சி முதலியவற்றை நகரசங்க எல்லைக்குள் கொண்டுவந்து யாராவது விற்றல் கூடாது. ஆனால் உப்புப்போட்டு அல்லது தகரத்தி லடைத்துவரும் இறைச்சியைக் குறித்தல்ல.

*இறைச்சியை மூடின கரத்தையில் கொண்டுபோதல் வேண்டும்.*

37. ஒரு நகரசங்க ஆடுமோட்டுறுக்குஞ் சாலையிலிருந்து நகரசங்க எல்லைக்குள் எந்த இடத்திற்காவது அல்லது எந்த ஆடுமோட்டுறுக்குஞ் சாலைக்காவது எந்த மிருகத்தி னிறைச்சியையாவது கரத்தையி லல்லது இருபது ராத்தலுக்கு மேற்பட யெவரும் கொண்டுபோதல் கூடாது. அக்கரத்தைகளில் கொண்டுபோகப்பட்ட இறைச்சியில் தூசி, வெய்யில், மழை இதுகள் படாமல் மூடப்பட்டிருப்பதுடன், அக்கரத்தைகளும் நகரசங்கத்தலைவரால் உத்தரவுச்சீட்டளிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் அக்கரத்தையில் கொண்டுபோகிற பச்சைத்தோல் முதலியவைகளை வெளிப்பார்வைக்கு வசதியாக வெளியில் போட்டுவைத்தல் கூடாது.

*மேற்பார்வைக்காரன் மாடாடு பதிவு செய்ய றிஜிஸடர் வைத்திருத்தல்.*

38. ஆடுமோட்டுறுக்குஞ் சாலை மேற்பார்வைக்காரராவது மேற்படி அதிகாரம்பெற்ற வேறெவராவது, தம்மால் சோதனைபண்ணப்படும் ஆடுமாடுகளைப் பதிவுசெய்ய வோர் றெஜிஸ்தர் வைத்திருத்தல் வேண்டும், அவ் றெஜிஸ்றரில் அம்மாடுகளைக் குறித்த விபரங்களும் அவைகளின் குறிகளும், மேலும் நகரசங்கமானது என்னென்ன விபர மெழுதவேணுமென்று கற்பிக்கிறதோ அவ்விபரங்களும் என்னவிதமா யெழுதவேண்டுமென்று மேற்படி சங்கம் கற்பிக்கிறதோ அவ்விதமா யெழுதப்பட்டிருத்தல் வேண்டும். அவ் றெஜிஸறரை ஞாயிற்றுக்கிழமையும் விடுதலை நாட்களும் தவிர மற்ற நாட்களில் சாயங்காலம் ஒரு மணிக்கும் நாலு மணிக்குமிடையில் ஆடுமோட்டுறுக்குஞ் சாலையைச் சேர்ந்த கந்தோரில் யாரும் போய்ப்பார்க்கலாம்.

*விசேஷ உத்தரவுச்சீட்டுக்குச் சலார்.*

39. உத்தரவுச்சீட்டுப்பெற்ற இறைச்சிக்கடைக்கார னல்லாத வேறெவராவது ஓர் விசேஷ உத்தரவுச்சீட்டுப்பெறுமல் யாதாமொரு ஆடு அல்லது பன்றியைக் கொல்லுதலும் அவ்விசேஷ உத்தரவுச்சீட்டுக்கு விரோதமாய் நடத்தலுங் கூடாது. அப்படி ஒவ்வொரு உத்தரவுச்சீட்டுக்கும் இருபத்தைந்து சத வீதம் சலார் அறவிடப்படும். ஆனல் அவசரமாயும் வியாபாரத்துக் கல்

வாமல் சொந்தப்பாவிப்புக்காகவும் கொல்லுகிறதாயிருந்தால், நகரசங்க இன்ஸ்பெக்டராவது அல்லது பொலீஸ் ஸ்டேஷன் அச்சமயம் யாருடைய பாரத்திலிருக்கிறதோ அவர்களாவது அவர்களுக்கு உத்தரவுச்சீட்டளித்து மேற்படி சலாரைக் கைக்கொண்டு நகரசங்க சக்கிடுத்தாருக்குத் திரும்பிக் கொடுத்தல் வேண்டும்.

---

## 13 ம் அதிகாரம்.

### மார்க்கட்டுகளும், ஆடுமாடுகள் கட்டும் பட்டிகளுக்கு உத்தரவுச்சீட்டு.

*மடுவங்கள் கூலிக்குக் கொடுத்தல்.*

1. நகரசங்கமானது 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கக் கட்டளைச்சட்டங்களின் 227 ம் பிரிவிற் சொல்லப்பட்ட எந்தப் பிரசித்த மார்க்கற்றிலாவது காலத்துக்குக்காலம் கொடுக்கப்படவேண்டிய வாடகை, ஆயம், சலார் முதலியவற்றை பன்னிரண்டு மாசத்துக்கு மேற்படாத காலத்து காலத்துக்குக்குத்தகை கொடுக்கலாம்.

*அதிகாரம்பெற்ற காரியகாரரைத் தடுத்தல்.*

2. பிரசித்த மார்க்கெற்றுகளை மேற்பார்வை பார்க்கவாவது ஆயம், வாடகை, சலார் முதலியவை அறவிடவாவது அம்மார்க்கெற்றுகளை ஒழுங்காகச் சுத்தமாய் வைத்திருக்கும்படிச் செய்யவாவது நகரசங்கத்தலைவரிட மதிகாரம்பெற்ற எவரையாவது தடுத்தல், எதிர்த்தல், பின்போடச் செய்தல், தொந்தரவுசெய்தல் முதலியவை யாதாமொருவர் செய்தல் குற்றமாகும்.

*செய்யத்தகாத செய்கைகள்.*

3. பின்சொல்லப்படுஞ் செய்கைகள் யாதாமொருவரும் செய்தல் கூடாது :—

*வீண் தொந்தரவு செய்தல்.*

(a) யாதாமொரு பிரசித்த மார்க்கெற்றில் மடுவம் அல்லது இடம் பாவிக்க உத்தரவுச்சீட்டுப்பெற்ற எவராவது அல்லது அப்படிப்பட்டவருடைய வேலைக்காரனாவது அம்மார்க்கெற்றுக்குப்போகு மெவருக்காவது வீண் தொந்தரவு மற்று மலைக்கழிவு அல்லது தாமதஞ்செய்தல்.

*மார்க்கெற்றில் சமைத்தல்.*

(b) பிரசித்த மார்க்கெற்றில் சமைத்துச் சாப்பிடுதல்.

*குறிக்கப்பட்ட சலாருக்கு மேற்பட வாங்குதல்.*

(c) யாதாமொரு மார்க்கெற்றுக் காவல்செய்வோனாவது, ஓர் பிரசித்த மார்க்கெற்றைக் குத்தகைக் கெடுத்திருப்போனாவது, அல்லது அப்படிப்பட்டவன் கீழ் வேலைக்காரனாயிருப்போனாவது வாங்கும்படிக் குறிக்கப்பட்ட சலாருக்கு மேற்படக் கேட்டலும், வாங்குதலும் அல்லது தங்களதிகாரத்தையாவது, கடமையையாவது செய்வதாகப் பாசாங்கு செய்து யாதாமொருவருக்காவது அவசரமில்லாத வீண் தொந்தரவுசெய்தல்.

*ஒழுங்கீனமான மாதிரியாய் நடத்தல்.*

(d) பிரசித்த மார்க்கெற்றில் அல்லது அம்மார்க்கற்றைச்சேர்ந்த கட்டிடங்களில் ஒழுங்கீனமாய் நடத்தல் இறத்தல் மலசலங்கழித்தல் முதலியவை செய்தல்.

*தொழிலில்லாது திரிவோர்.*

(e) பிரசித்த மார்க்கற்றுகள் பூட்டப்பட்டபின் இரவு ஒன்பது மணியின்மேல் அம்மார்க்கற்றிடங்களில் தங்கி தாமென்ன தொழில்காரர் ஏன் அவ்விடத்தில் நிற்கிறதென்று சொல்ல வேலாதிருத்தல்.

*மார்க்கெற்றுக்குச் செய்யும் நஷ்டம். தண்ணீரை அழுக்காக்கல்.*

(f) மார்க்கெற் கட்டடத்தின் எப்பகுதியையாவது மடுவங்களையாவது, விளக்குகளையாவது அல்லது அம்மார்க்கெற்றிலுள்ள நகரசங்கத்தின் எப்பொருளையாவது சேதம்பண்ணுதல் அல்லது எவ்விதமாயாவது அவலட்சணப்படுத்தல் அல்லது அப்பிரசித்த மார்க்கெற்றின் பாவிப்புக்காக வைக்கப்பட்டிருக்கும் தண்ணீரை அழுக்குப்பண்ணுதல் அல்லது அத் தண்ணீரில் குழித்தல் அல்லது எந்தத் துணிகளையாவது மிருகங்களையாவது கழுவுதல்.

*தொற்றுநோயால் வருந்துகிறவர்கள் மார்க்கற்றில் நிற்றல் கூடாது.*

(g) தொற்றுநோய் அல்லது அருவருப்புள்ள நோயில் வருந்து மெவராவது பிரசித்த மார்க்கெற்றிலாவது பிரசித்தமில்லாத மார்க்கெற்றிலாவது உள்ள மடுவம் அல்லது இடங்களில் நிற்றல் அல்லது மார்க்கெற்றில் சாமான் விற்றல், கொண்டுபோதல், அல்லது நகரசங்க எல்லைக்குள்ளிருக்கும் எந்த றேட்டிலாவது எந்தச் சாமானையாவது விற்கக் கொண்டுபோதல், அப்படி நோயுடைய எவனையும் பிரசித்த மார்க்கெற்றிலாவது வேறெந்த மார்க்கெற்றிலாவது வேலைக்காரனாக யாதாமொருவரும் வைத்திருத்தல் கூடாது. அப்படி நோயுடையவன் யாதாமொரு மார்க்கெற்றுக்குள் பிரவேசித்தலும் கூடாது. அப்படி நோயுடையவன் அப்படிப் பிரவேசிப்பானாகில் அவனை வெளியில் துரத்திவிடலாம்.

*சண்டைபிடித்தல் சத்தம்செய்தல் கூடாது.*

(h) பிரசித்த மார்க்கெற்றி லல்லது அதைச்சேர்ந்த கட்டடத்தில் சண்டை சச்சரவு செய்தல், கோபமூட்டு மல்லது அழுகல் பேச்சுப்பேசல், சத்தம் செய்தல், இச்சேழ்ப் பிரமாணத்துக்கு விரோதமாய் நடக்கு மெவரையும் அம்மார்க்கற்றுக் காவல்காரன் அல்லது அவனுதவிக்காரன் அல்லது இதற்கென்று அதிகாரம் பெற்றவன் வெளியில் பிடித்துவிடலாம்.

*வாடகை யறவிடுதல்.*

4. பிரசித்த மார்க்கெற்றைப் பாவிப்பதற்காகக் கொடுக்கவேண்டிய ஆயம், வாடகை, சலார் முதலியவையை அந்தந்தக் காலத்தில் கேட்கும்போது நகரசங்கத்துக்குக் கொடுத்தல் வேண்டும் அல்லது நகரசங்கத்தாரிடம் குத்தகைவாங்கியிருப்பவனுக்காவது நகரசங்கத்தாரது அதிகாரம் பெற்ற வேறுயாருக்காவது அல்லது அப்படி அதிகாரம்பெற்றவனிடத்தில் குத்தகைவாங்கியிருப்பவனுக்காவது மேற்படி வாடகை முதலியவற்றைக் கொடுத்தல் வேண்டும்.

*விதிக்கப்பட்ட வாடகைக்கு மேற்பட வாங்குவது குற்றம்.*

5. நகரசங்கமானது அறவிடலாமென்று விதித்த வாடகை, ஆயம், சலார் முதலியவையை அப்படி விதிக்கப்பட்ட தொகையிலும் மேற்பட்ட தொகையைத் தரும்படி கேட்கிற அல்லது கொடுத்தால் வாங்குகிற ஒவ்வொருவரும் குற்றவாளிகளாவார்.

*சாமானை விற்று அறவிடல்.*

6. மேற்படி ஆயம், வாடகை, சாலார் முதலியவை கொடுக்கவேண்டிய எவனாவது கேட்கும்பொழுது அவ்வாடகை முதலியவற்றை இறுத்துப்போடாதிருந்தால், அப்படிக் கொடாதவன் மார்க்கெற்றில் வைத்திருக்கும் சாமான்களையாவது பிடித்து விற்று அறவிடுதற்கு நகரசங்கத்துக்காவது, அல்லது அதினிடத்திலிருந்து குத்தகைவாங்கியவனுக்காவது, அல்லது அதன் அதிகாரம் பெற்ற வேறு எவனுக்காவது அல்லது அப்படி அதிகாரம்பெற்றவரிடத்தில் குத்தகைவாங்கியவருக்காவது அதிகாரமுண்டு.

*வாக்குவாதம் முதலியவற்றை சங்கத்தலைவர் தீர்த்தல்.*

7. யாதாமொரு மடுவம், வாடகை, சலாரைக் குறித்து வாக்குவாத முண்டாகும்போது அதைத் தீர்க்கவாவது அல்லது அதைக் குறித்து என்ன கட்டளை விதிக்கவாவது நகரசங்கத்தலைவருக்கு அதிகாரமுண்டு.

*வாடகை அட்டவணை.*

8. ஒவ்வொரு பிரசித்த மார்க்கெற்றிலும் அந்தந்தக் காலத்தில் கொடுபடவேண்டிய ஆயம் வாடகை சலார் முதலியவை யடங்கிய அம்மார்க்கெற்றில் நல்லாய்த் தெரியக்கூடிய ஓரிடத்தில் சங்கமாவது அல்லது அதனிடத்தில் குத்தகை வாங்கியவராவது வைத்தல் வேண்டும்.

*பிரசித்த மார்க்கெற்றல்லாத இடங்களில் இறைச்சி முதலியவை விற்றல் கூடாது.*

9. பிரசித்த மார்க்கெற்றல்லாத வேறு எந்த விடத்திலும் நகரசங்க எல்லைக்குள் நகரசங்கத்தினின்றும் ஓர் விசேஷ உத்தரவுச்சீட்டுப் பெறாமல் மீனாவது ஆடுமாடு முதலிய மிருகங்களின் இறைச்சியையாவது அல்லது குடல் முதலியவையையாவது றோட்டு வீதியிலாவது வேறெந்த விடத்திலாவது விற்றலும், விற்கும்படி வெளியாக வைத்திருத்தலும், விற்கும்படி கொண்டுதிரிதலும் எவரும் செய்யாதிருத்தல் வேண்டும். அப்படி விற்க விசேஷ உத்தரவுச்சீட்டுப்பெற்றால் அச்சீட்டுக்கு விரோதமாய் யாதொன்றும் செய்யாதிருத்தல் வேண்டும். ஆனால் நகரசங்கமானது தீர்மானஞ்செய்து அதிகாரங் கொடுக்காமல் அவ்விசேஷ உத்தரவுச்சீட்டு ஓர் பிரசித்த மார்க்கெற்றிருக்கு மிடத்திலிருந்து ஒரு மைல் தூரத்துள்ளிருக்கும் எந்த இடத்திலாவது இறைச்சி முதலியவை விற்றலுக்காகவும் மேற்படி அரைமைல் தூரத்துக்குள்ளிருக்கும் எந்த இடத்திலாவது மீன் விற்றலுக்காகவும் கொடுக்கப்படமாட்டாது.

*மடுவம், வாங்கு முதலியவை நாள் தோறும் சுத்திசெய்தல்.*

10. பிரசித்த மார்க்கெற்றில் ஓர் மடுவத்தையாவது இடத்தையாவது பாவிக்கு மெவரும் பிரசித்தமல்லாத மார்க்கெற்றுக்கு உத்தரவுச்சீட்டுப்பெற்ற எவரும் அம்மடுவம் வாங்கு முதலிய விடங்களில் தீன்சாமான் அல்லது தாகத்துக்குக் குடிக்குஞ் சாமான்களை வைத்து விற்றால் அவ்வவ் விடங்களைத் தினந்தோறுங் கழுவிச் சுத்தப்படுத்த வேண்டும். மீன் அல்லது இறைச்சி முதலியவை வைத்து விற்றால் அவ்விடங்களை உறஞ்சி சுரண்டிக் கழுவல் வேண்டும்.

*பிரசித்தமாயல்லாத மார்க்கெற்றுக்கு உத்தரவுச்சீட்டுப் பெற்றிருப்பவர்கள் தண்ணீர் வைத்தல்.*

11. இதன் 9 ம் கீழ் பிரமாணத்தின்படி பிரசித்த மல்லாத மார்க்கெற்று வைத்திருக்க நகரசங்கத்தலைவரிடமிருந்து உத்தரவுச்சீட்டு பெறு மொவ்வொருவரும் மேற்படி நகரசங்கத்தலைவர் வேணுமென்று கண்டால் அம்மார்க்கற்றுக்குத் தண்ணீர்க்குழாய் பெரிய தண்ணீர்க்குளாயுடன் சேர்த்து வைப்பித்தல் வேண்டும். அப்படி வைப்பித்த குளாய் மற்றுமதைச்சேர்ந்த கருவிகளெல்லாம் எந்த நேரத்திலும் அம்மார்க்கெற்றைச் சேர்ந்த கட்டிடங்களெல்லாம் நல்லாய்க கழுவித் துப்பரவுபண்ணக்கூடிய அவ்வளவு நல்லவேலை செய்யக்கூடிய நிலைபரத்தில் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*குடல் முதலிய அழுக்கெல்லாம் வெளியே யகற்றிப் பெட்டியல் போடல் வேண்டும்.*

அம்மார்க்கெற்றில் எந்தப்பகுதியிலாவது சேரு மழுக்கு, குடல் குப்பை யெல்லாம் உடனேயுடனே தாமே வெளியிலகற்றிப் போடவேண்டும். அப்படி யகற்றும்போது கிட்டநிற்போருக்கு யாதொரு இடைஞ்சல் அருவருப்பு முதலியவை யில்லாமலகற்றல் வேண்டும். மேலும் நகரசங்கத்தலைவர் அப்போதைக் கப்போதே போட்டுவைப்பதற்காக நியமித்த பெட்டி இடம் முதலியவைகளிலேயே யப்படி யகற்றிப்போடல் வேண்டும்.

*மார்க்கெற்றை ஒவ்வொரு நாளும் கூட்டிச் சுத்தம்செய்தல் வேண்டும்.*

மேற்படி மார்க்கற்றை வைத்திருக்கு மொவ்வொருவனும் அம்மார்க்கற்றைத் தினந்தோறும் காலமேயும் சாயங்காலமும் கூட்டித் துப்பரவுசெய்தல் வேண்டும். அப்படிச் சுத்தம்செய்தல் நகரசங்கத்தலைவர் மெச்சக்கூடியதா யிருத்தல்வேண்டும். மேலும் ஒவ்வொரு சாயங்காலமும் கழுவவேண்டும்.

*ஒழுங்கீனமாய் விற்க வைக்கப்பட்டிருக்கு மிறைச்சியை இன்ஸ்பெக்டர் பிடிக்கலாம்.*

12. இந்த அதிகாரத்தின் 9 ம் கீழ்ப் பிரமாணத்துக்கு மாறாக விற்கப்பட்டிருக்கும், அல்லது விற்கக்கொண்டுதிரியப்படும் எந்த மீன், மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி அல்லது வேறு மிறைச்சி அல்லது குடல் முதலியவைகளைப் பிடித்து நகரசங்கத்தார் கந்தோருக்கு அல்லது பொலீஸ் ஸ்டேசனுக்குக் கொண்டுபோய் நகரசங்கத்தலைவர் அல்லது மாஜிஸ்ட்றேற் நீதவான் சொல்லும் விதம் செய்ய நகரசங்க எந்த இன்ஸ்பெக்றருக்காவது பொலீஸ் உத்தியோகஸ்தருக்காவது அதிகாரமுண்டு.

*விசேஷ உத்தரவுச்சீட்டுக்குச் சலார்.*

13. இவ்வதிகாரத்து ளடங்கிய கீழ்ப் பிரமாணங்களின்படி பிறப்பிக்கப்படு மொவ்வொரு விசேஷ உத்தரவுச்சீட்டுக்கும் அது கொடுக்கப்படு மொவ்வொரு வருஷத்துக்கும் அல்லது அதின் ஒரு பாகத்துக்கும் ஐந்து ரூபாவுக்கு மேற்படாத சலார் அறவிட நகரசங்கத்தலைவருக் கதிகாரமுண்டு.

*உத்தரவுச்சீட்டுப் பெற்ற மார்க்கெற்றில் விற்கப்படும் பொருள்.*

14. பிரசித்த மார்க்கெற்றுகளில் உத்தரவுச்சீட்டு அல்லது டிக்கட்டில் சொல்லப்பட்ட சாமானையல்லாமல் வேறே சாமான்களை யாதாமொருவரும் விற்றல்கூடாது. பிரசித்த மார்க்கெற்றுகளிலாவது, 9 ம் கீழ்ப் பிரமாணத்தின்படி விசேஷ உத்தரவுபெற்ற வேறெந்த விடத்திலாவது 12 ம் அதிகாரத்தின் 23 ம் பிரிவின் பிரகாரம் பாஸ் முடியாமலாவது, யாதாமொருவரு இறைச்சி, குடல் முதலியவற்றை விற்கவைத்திருத்தலும், விற்றலுங்கூடாது, இறைச்சியை விற்க வைத்திருக்கும் மொவ்வொருவனிடத்திலுமுள்ள பாஸைக் கொண்டுவந்து காட்டும்படி நகரசங்கத்தைச் சேர்ந்த எந்த உத்தியோகஸ்தராவது கேட்கலாம், மேற்படி பாஸ் காட்டத் தவறுபவனுடைய இறைச்சியையாவது அல்லது அப்பாஸில் சொல்லப்பட்டிருப்பதற்கு மாறாக விற்பவனுடைய இறைச்சியையாவது அல்லது அப்பாசில் சொல்லப்பட்டிருப்பதற்கு மாறாக விற்பவனுடைய இறைச்சியையாவது பிடித்து நகர சங்கத்தார் கந்தோருக்கு அல்லது ஒரு பொலீஸ ஸ்டேசனுக்குக் கொண்டுபோய் நகரசங்கத்தலைவர் அவ்விறைச்சியை என்னசெய்ய சொல்லுகிறாரோ அவ்விதம் செய்யலாம்.

*பிரசித்த மார்க்கற்றில் உத்தரவு சீட்டில்லாமல் விற்பனவு செய்தல் கூடாது.*

15. உத்தரவு சீட்டுப்பெறுமனும் அல்லது அவனுடைய உத்தரவு சீட்டில் குறிக்கப்பட்ட நாள் முடிந்த பின்னும் யாதாமொருவனும் பிரசித்த மார்க்கற்றிலுல் எந்த மடுவத்தையாவது இடத்தையாவது பாவித்தல் வைத்திருத்தல் கூடாது. அவ்வுத்தரவுச்சீட்டு இச்சட்டத்தின் அனுபந்தத்திலுள்ள I. என்னும் மாதிரிவிருத்தது மல்லாமல் நகரசங்கச் சக்கிடுத்தாரால் கையொப்பம் வைக்கப்பெற்றிருத்தலும் வேண்டும். அவ்வுத்தரவுச்சீட்டில் சொல்லியவைக்கு மாறாக யாதாமொருவரும் நடத்தலும் கூடாது.

*காய்கறி பழம் விற்கவைக்க விடங்கள்.*

16. பிரசித்த மார்க்கெற்றுகளில் காய்கறி விற்பதற்காகப் புறம்பான இடங்களை அடையாளம் பண்ணி நம்பர்பண்ணி விடல்வேண்டும். அப்படி யடையாளம்பண்ணி நம்பர் பண்ணுவது நாள் தோறுஞ் சலார் கொடுத்துக் காய்கறி பழம் முதலியவை விற்பவர்களே நகரசங்கத்தலைவர் கற்பிக்கிறபடி செய்தல் வேண்டும். மேற்படி இடங்களில் யாதாமொருவரும் காய்கறி பழம் முதலிய சாமான்களை டிக்கட்டு யில்லாமல் விற்றலாவது அல்லது டிக்கட்டில் சொல்லியவைக்கு மாறாக விற்றலாவது கூடாது. சலார் கொடுக்கு மொவ்வொருவருக்கும் நகரசங்க தலைவரிடமிருந்து எழுத்திலதிகாரம்பெற்ற ஒருவரால் கையொப்பம் வைக்கப்பட்ட வோர் டிக்கட்டு கொடுக்கப்படும்.

*எவ்விடத்தையும் அடைத்தல் கூடாது.*

17. மார்க்கெற்றில் எவ்விடத்தையாவது அல்லது எப்பாகத்தையாவது அடைத்தல், தட்டி வைத்து மறைத்தல் அல்லது எவ்விடத்திலாவது பலகை முதலியவை வைத்து அறைத்தல், யாதாமொரு பெட்டிவைத்தல், கட்டிடங் கட்டுதல் முதலிய செய்கைகள் நகர சங்கத்தலைவர் உத்தரவின்றி யாராவது செய்யப்படாது. மார்க்கெற் பூட்டப்படும்படி நியமித்த மணித்தியாலத்தின் பின் அவ்விடத்தில் எவ்வித சாமானையாவது யாராகுதல் வைத்திருத்தல் கூடாது.

*வேலை நடக்கும் நேரம்.*

18. ஒவ்வொரு பிரசித்த மார்க்கெற்றுந் தினந்தோறும் காலமே ஐந்து மணிக்கும் சாயங்காலம் ஒன்பது மணிக்கு மிடையில் பாவிப்புக்காகத் திறக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*உத்தரவுச்சீட்டு ஒருவர் இன்னொருவருக்குக் கொடுத்தல் கூடாது.*

19. எவராவது பிரசித்த மார்க்கெற்றில் யாதாமொரு மடுவம், இடம் பாவிப்பதற்காக அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் உத்தரவுச்சீட்டையாவது டிக்கேட்டையாவது இன்னொருவருக்குக் கொடுத்தலும் அவ்விடத்தையாவது அதனோர் பாகத்தையாவது வேறொருவருக்கு வாடகைக்குக் கொடுத்தலும் கூடாது. வேறெவராவது நகரசங்கத்தலைவரது உத்தரவின்றி இன்னொருவர் கொடுத்ததாகச் சொல்லி அம்மார்க்கெற்றின் எவ்விடத்தையாவது பாகத்தையாவது வைத்துப வித்தல் கூடாது.

*உத்தரவுச்சீட்டு பெற்றவனன்றி வேறொருவன் விற்றல் கூடாது.*

20. உத்தரவுசீட்டு பெற்றிருப்பவனும் அல்லது நகரசங்கத்தார் கந்தோரில் பெயர் பதிவு செய்யப்பட்ட அவனது காரியகாரன் அல்லது வேலைகாரனுமாகிய இவர்களேயல்லாமல் வேறு யாராவது அம்மார்க்கெற்றில் மடுவத்திலாவது அல்லது ஓர் பாகத்திலாவது சாமான் வைத்திருத்தல் விற்றல் முதலியவை செய்தல் கூடாது.

*டிக்கற் உடையவர்களே சாமான் விற்கலாம்.*

21. பிரசித்த மார்க்கெற்றில் இடம் பாவிப்பதற்கு டிக்கற் வைத்திருக்கும் எவராவது அவ்விடத்தையாவது அதனோர் பாகத்தையாவது இன்னொருவர் பாவிக்கவும், அல்லது அதில் இன்னொருவர் அப்படிப்பட்ட சாமான்களையாவது விற்கவும் விற்கவைத்திருக்கவும் எவ்வித நியாய மிருந்த போதிலும் இடங்கொடுத்தல் கூடாது.

*மார்க்கெற்றில் குறிக்கப்பட்டமடுவத்திலல்லது.*

22. பிரசித்த மார்க்கெற்றில் எந்த மடுவத்திலும் அல்லது இடத்திலும் டிக்கற் பொருத்தபடி எவராவது சாமான்கள் வைத்து விற்கப்படாது.

*இடத்திலல்லாமல் மற்ற விடங்களில் சாமான்கள் வைக்கப்படாது.*

23. பிரசித்த மார்க்கெற்றில் குறிக்கப்பட்ட மடுவம் அல்லது அடைப்பில்லாமல் மற்றவிடங்களில் நகரசங்கத்தலைவரின் உத்தரவில்லாமல் யெவராவது சாமான் வைத்து விற்கப்படாது.

*உத்தரவுச்சீட்டு டிக்கற் பெற்றவர்களும் பேர்பதிவு பெற்ற காரியகாரருமே சாமான் விற்கலாம்.*

24. பிரசித்த மார்க்கெற்றில் எவ்விடத்தையாவது மடுவத்தையாவது பாவிப்பதற்காக உத்தரவுசீட்டு அல்லது டிக்கெற் பெற்றிருக்கும் எவராவது இன்னொருவர் அம்மடுவம், இடம், அல்லது அவைகளினோர் பாகத்தைப் பாவிக்க விடுதலும் அல்லது அவ்விடங்களில் எவ்வித சாமான்களையாவது விற்க வைத்திருக்க விடுதலும் எவ்வித நியாயமிருந்தபோதிலும் நகரசங்கத்தலைவர் உத்தரவிலலாமல் செய்தல் கூடாது. ஆனால் மேற்படி பேர் பதிவுபெற்ற காரியகாரர் அல்லது வேலைக்காரர் அப்படி விற்கலாம்.

*டிக்கற்றுகளைத் திருப்பிக் கொடுத்தல் வேண்டும்.*

25. டிக்கற் வைத்திருக்கும் ஒவ்வொருவனும் தன் தன் மடுவத்தை அல்லது யிடத்தை விட்டுப் போகும்போது நாள்தோறும் தனது டிக்கெற்றை நகரசங்கத் தலைவரால் டிக்கெற் வாங்கும்படி அதிகாரம்பெற்ற ஆளிடம் கொடுத்துவிட்டு போதல் வேண்டும்.

*தனது எல்லைக்கப்பாலுள்ள யிடத்தை பாவித்தல் கூடாது.*

26. பிரசித்த மார்க்கெற்றில் எம்மடுவத்துக்காவது உத்தரவுச்சீட்டு அல்லது டிக்கற்று பெற்றிருக்கு மெவராவது அவரால் வாடகைக் கொடுக்கப்பட்ட மடுவம் அல்லது யிடத்துக்கப்பாலுள்ள நிலத்தைப் பாவிப்பதும் அல்லது அவருக்காக இன்னொருவரை அப்படிப் பாவிக்க இடங்கொடுத்தலும் அல்லது அவர் வேலைக்காரன் அல்லது காரியகாரன் அப்படிப்பட்ட இடத்தைப் பாவிப்பதுங் கூடாது.

*அழுக்குப்போடும் பெட்டிகள்.*

27. பிரசித்த மார்க்கெற்றில் மடுவம் அல்லது இடம் பாவிக்க உத்தரவுச்சீட்டு பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் அம்மடுவத்தி லல்லது அதற்குகிட்ட நகரசங்கத்தலைவர் நல்லதென்று சொல்லக்கூடிய ஓர் அழுக்குப் போடும் பெட்டியை வைத்திருத்தல் வேண்டும். அப்பெட்டியில் சகல அழுக்கு குப்பை முதலியவை யெல்லாம் போட்டுவைத்தல் வேண்டும்.

*அசுத்தத்தையை வெளியே எறிதல்.*

28. மேற்படிசொல்லிய பெட்டியிலன்றி வேறிடத்தில் பிரசித்த மார்க்கற்றிலாவது அக்கட்டிடங்களிலாவது அல்லது அவைபோன்ற வேறெவ்விடத்திலாவது அல்லது அதினருகிலிருக்கும் கானுகளிலாவது குப்பை, கஞ்சல், மிருகங்களின் தோல், எலும்பு முதலியவையை யாராவது எறிதல் கூடாது.

*மடுவத்தை நாடோறும் பெருக்கல்.*

29. பிரசித்த மார்க்கெற்றில் மடுவத்தை யல்லது இடத்தை வைத்திருக்க உத்தரவுச்சீட்டுப் பெற்றிருக்கு மொவ்வொருவரும் தினந்தோறும் அம்மடுவத்தைப் பெருக்கி அம்மடுவத்தின் முன்னிருக்கும் அம்மார்க்கற்றின் பாவியாத நிலத்தையும் அப்படிப் பெருக்கிச் சுத்தமாய் வைத்திருத்தல் வேண்டும்.

*நகரசங்கத்தைச் சேர்ந்த ஆடு மாடு அறுக்குஞ்சாலையில அறுபடாத மிருகத்தி னிறைச்சியை மார்க்கெற்றுக்குக் கொண்டு வருதல் கூடாது.*

30. இந்தக்கீழ் பிரமாணங்களில் சொல்லியவை தவிர வேறெந்த மிருகத்தின் சரீரமாவது அல்லது ஓர் பாகமாவது, அம்மிருகத்தை நகரசங்கத்தைச் சார்ந்த மிருக மறுக்குஞ் சாலையில் கொல்லப்படாதிருந்தால், பிரசித்தமான அல்லது பிரசித்தமற்ற எந்த மார்க்கற்றுக்காவது கொண்டுவரப்படாது அல்லது இவ்வதிகாரத்தின் 9 ம் கீழ்ப் பிரமாணத்தின்படி விசேஷ உத்திரவுச்சீட்டுப்பெற்ற எவ்விடத்துக்காவது மேற்படி மிருகத்தி னிறைச்சியைக் கொண்டுவருதல் கூடாது. மேலும் அப்படிப்பட்ட இடங்களில் அவ்விறைச்சியை விற்றலும், விற்க வைத்திருத்தலுங் கூடாது. ஆனால் பிரதேசங்களினின்றும் இவ்விலங்கைத்தீவுக்குள் இறக்குமதி செய்யப்படுந் தகரத்தி லடைக்கப்பட்டு வரும் மீன், இறைச்சி முதலியவைக ளிப்பிரமாணத்து ளமையலாம். அப்படி இறக்குமதி செய்யப்படும் மீன் இறைச்சி முதலியவை அம்முகாந்தரத்துக்காக விசேஷ உத்திரவுச்சீட்டுப்பெற்ற எவ்விடத்திலும் விற்கலாம்.

*மடுவங்களைப் பலரும் வந்துபோகத்தக்கதாய் வைத்திருத்தல் வேண்டும்.*

31. எப்படிப்பற்ற மார்க்கெற்றிலாவது மடுவம் வைத்திருக்க உத்தரவுச்சீட்டுப்பெற்ற ஒவ்வொருவரும் பிரசித்த மார்க்கெற்றல்லாத வேறெவ்விடத்திலாவது மீன் இறைச்சி முதலியவை விற்க விசேஷ உத்தரவுச்சீட்டுப் பெற்றிருக்கும் ஒவ்வொருவரு மிவ்வதிகாரத்தில் சொல்லிய பிரகாரம் அவ்விசேஷ உத்தரவுச்சீட்டுப் பெறக்கூடியதா யிருந்தால் அம்மடுவம் இடம் முதலியவற்றை காலமே ஆறு மணிக்கும் சாயங்காலம் ஒன்பது மணிக்குமிடையில் தினந்தோறும் பிரசித்தமாய்ப் பலரும் வந்துபோக வசதியாய்த் திறந்து வைத்திருத்தல் வேண்டும். நகரசங்கத்தலைவர் உத்தரவு எழுத்திலில்லாமல் எவராவது அப்படிப்பட்ட மடுவத்தையாவது இடத்தையாவது இரண்டு நாளைக்குப் பிரசித்தமாய் மறுபேருக்கு விற்பனவு செய்யாமல் வேணுமென்று அசட்டை பண்ணி விட்டாலும், அல்லது அப்படிச்செய்ய இணங்காதிருந்தாலும் குற்றவாளியாக எண்ணப்படுவார். அப்படிக் குற்றம் செய்தவரது உத்தரவுச்சீட்டை நிறுத்திவைக்கவும், தள்ளவும், அதன்பின் அவருக்கு உத்தரவுச்சீட்டுக் கொடாமல் விடவும் நகரசங்கத்தலைவருக்கு அதிகாரமுண்டு.

*மார்க்கெற்றுக்கு நாய் கொண்டு வருதல்.*

32. எவராவது மார்க்கெற்றுக்கு நாய் கொண்டுவரவும் அல்லது தன் சொந்த நாய் அம்மார்க்கெற்றுக்கு அல்லது அதைச்சேர்ந்த இடத்துக்கு வரும்படிச் செய்யவும் கூடாது.

*அவரவர் மடுவ மல்லது இடத்துக்கப்பால் சாமான் வைத்தல்.*

33. மார்க்கெற்றில் மடுவத்தையாவது இடத்தையாவது பாவிக்கு மெவனாவது அம்மடுவம் அல்லது இடத்தின் எல்லைக்கப்பால் விற்க வைக்கப்பட்டிருக்குஞ் சாமான்கள் மீறிப்போகக் கூடியதாய் விற்கவாவது அல்லது வேறு நோக்கமாயாகுதல் அப்படிச் சாமான்களை வைத்தலாவது வைக்க விடுதலாவது வைப்பித்தலாவது கூடாது.

*தெரு வீதிகளைத் தடைப்பண்ணல்.*

34. மார்க்கெற்றுகளில் மடுவங்கள் வைத்திருக்கும் சொந்தக்காரனாவது பாவிப்பவனாவது அல்லது மடுவம் வைத்திருப்பவனாவது அம்மார்க்கெற்று அல்லது சந்தைக்குளிருக்கும், தெரு, வீதி, பாதை, முதலியவைகளில் விலைச்சாமான்களைப் போட்டாவது அல்லது சேரவிட்டாவது, அல்லது இன்னொருவர் விற்க விடுவதினாலாவது அல்லது அப்பாதை முதலியவைகளின் பைக்கீஸபெட்டி முதலிய எந்தச் சாமானையாவது வைப்பதினாலாவது அப்பாதை முதலியவற்றில் போக்குவரவு செய்வதைத் தடை செய்யாதிருத்தல் வேண்டும்.

*பழுதுப்பட்ட உணவுப் பொருள்களை விற்றல் கூடாது.*

35. யாதொரு மார்க்கெற்றையாவது சாய்ப்பையாவது சொந்தமாய் உடையவராவது பாவிப்பவராவது குத்தகைக் கொடுத்திருப்பவராவது அல்லது அவைகளிற் சாமான் விற்பவராவது யாதொரு அழுகிப் பழுதடைந்த அல்லது சுகத்துக்குத்தகாத இறைச்சி, குடல், மீன், அழு

கிய காய்கறி முதலிய எவ்வித பதார்த்தத்தையும் அம்மார்க்கற்று அல்லது சாப்பில் விற்கவும், விற்க வைத்திருத்தலும், மறுபெயர் விற்க விடுதலும், அல்லது அப்பதார்த்தங்களை அவ்விடங்களிலிருக்க விடுதலும் கூடாது. மேற்படி சொந்தக்காரன், பாவிப்புக்காரன், அல்லது குத்தகைக் கொடுத்திருப்பவன் மேற்படி இறைச்சி, குடல், மீன், காய்கறி முதலிய பதார்த்தத்தை யாதொரு தாமதமுமின்றி அப்போதைக்கே நகரசங்கத்தலைவர் உத்தரவு செய்யுமிடத்தில் கொண்டுபோய்ப் போடல் வேண்டும்.

*நெருப்பு வெளிச்சம் முதலியவை.*

36. மார்க்கெற்றில் மடுவம் வைத்திருக்கும் அல்லது வேறு கட்டடத்தை வைத்திருக்கும் ஒவ்வொருவரும், அல்லது அதில் வசிக்கும் ஒவ்வொருவனும், அல்லது அவர்களின் வேலைக்காரர் ஒவ்வொருவரும் அம்மடுவத்தில், அல்லது கட்டடத்திலுள்ள நெருப்பு வெளிச்சமெல்லாம் இல்லாமற் செய்து அல்லது செய்வித்துப்போட்டே அவ்விடத்தைவிற்று போதல் வேண்டும். அக்கட்டடம் அல்லது மடுவத்துக்கு மோசம் வருவிக்கக்கூடிய நெருப்பு வெளிச்சம் முதலியவை அவ்விடங்களில் வைக்க உத்தரவு கொடுக்கப்படமாட்டாது.

*மார்க்கெற்றில் ஒழுங்கீனமாயிருப்பவர்களைத் துரத்தல்.*

37. மார்க்கெற்றுகளில் குடித்துப்போட்டு நிற்கும், அல்லது பிச்சைசேற்கும், அல்லது வீணிலே திரியும், அல்லது ஒழுங்கீனமாய் நடக்கும் அல்லது பைத்தியம் பிடித்திருக்கும் எவராவது காணப்பட்டால், அப்படிப்பட்டவரை யெல்லாம் அம்மார்கற்றுக்குப் பாதுகாவலராவது அல்லது நகரசங்கத்தலைவராது அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தராவது, அம்மார்க்கெற்றினின்றும் வெளியே துரத்திவிடலாம், அப்படி ஒழுங்குத்தப்பி நடக்கிறவர் அம்மார்க்கெற்றைக் குத்தகைக் கொடுத்தவனுல் அல்லது அவனது வேலைக்காரனுயிருந்தால் அம்மார்க்கெற்று மடுவம் சாய்ப்பு முதலியவைகளில் அவன் அதன்பின் வியாபாரஞ் செய்யாதபடி தடைசெய்யலாம், அப்படித் தடைசெய்தல் நகரசங்கத்தலைவர் அநுமதியுடன் செய்தலவேண்டும்.

அம்மார்க்கெற்றில் சண்டைசெய்யும் சாமான் விற்பவரெவரையும் அப்படிச் சண்டைசெய்ததின்பின் அம்மார்க்கெற்று, சாய்ப்பு, முதலியவற்றில் வியாபாரஞ்செய்யாதபடி தடுத்து துரத்திவிடலாம்.

*மார்க்கெற்றிலிருந்து பாசில்லாமல் இறைச்சி முதலியவை கொண்டுபோதல்.*

38. எந்தப் பிரசித்த மார்க்கெற்றின் மடுவத்திலிருந்தாவது 9 ம் கீழ்ப் பிரமாணத்தின் பிரகாரம் விசேஷ உத்தரவுச்சீட்டில் குறிக்கப்பட்டிருக்கு மிடத்துக்குக் கையில் பாசில்லாமல் இறைச்சி குடல் முதலியவைகளை யெவராவது கொண்டுபோதல் கூடாது. அந்தப் பாசில் யாருடைய மடுவத்திலிருந்து மேற்படி இறைச்சி முதலியவை கொண்டுபோகிறதோ அவர்களுடைய கையொப்பமுமிருக்க வேண்டியது. மேற்படி பாஸ் நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் கற்பிக்கிற விதமிருப்பதுடன் அவர் காலத்துக்குக்காலம் கற்பிக்கிற காரணங்களு மடங்கியிருக்க வேண்டியது. மேற்படி இறைச்சி முதலியவைகளைக் கொண்டுபோகும்போது நகரசங்க உத்தியோகஸ்தர் யாராவது சோதனைக்காகப் பாஸைக்கேட்டால் காண்பிக்க வேண்டும்.

பிரசித்த மார்க்கெற்றின் எந்த மடுவத்திலாவது அல்லது 9 ம் கீழ்ப் பிரமாணத்தின்படி விசேஷ உத்தரவுச்சீட்டளிக்கப்பட்ட எந்த இடத்திலாவது 12 ம் அதிகாரத்தின் 23 ம் கீழ்ப் பிரமாணத்தின் பிரகாரம் பாஸ் கிடைக்கப்பெற்ற கடைக்காரர் அந்தப் பாஸில் சொல்லிய அளவுக்கு அதிகமாக இறைச்சி, குடல் முதலியவை அவர்கள் மடுவத்தில் வைத்திருந்தால் அல்லது 24 மணித்தியாலங்களுக்கு மேற்பட்டதாயுமிருந்தால் அப்படிப்பட்ட கடைக்காரரல்லது உத்தரவுச்சீட்டளிக்கப் பெற்றவர்களைக் குற்றத்துக்குச் சாட்டப்படும்.

*குதிரைலாயம் வைக்க கரத்தை முதலியவை வைத்திருக்க உத்தரவுச்சீட்டுப்பெறல்வேண்டும்.*

39. குதிரை கூலிக்குப் பராமரிக்கப்படும் லாயம், குதிரைகரத்தை கூலிக்கு விட நிற்கும் லாயம், குதிரை கட்டி நிற்கும் லாயம், குதிரை, ஆடு, மாடு, பார்க்கும் வைத்தியசாலை, கரத்தை நிற்கும் மடுவம் அல்லது இருபது ஆடுகள் நிற்கக்கூடிய அல்லது பத்து மாடு நிற்கக்கூடிய கொட்டகை அடைப்பு முதலிய இடங்கள், அல்லது நகரசங்க எல்லைக்குள் அதிக ஜனங்கள் வசிக்கும் இடங்களில் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட ஆடுகளும் ஐந்து அல்லது அதற்கு மேற்பட்ட மாடுகளும் நிற்கும் அடைப்புகள் முதலிய இவ்விடங்களின் சொந்தக்காரராவது அவ்விடங்களை பாவிப்பவனுவது ஒவ்வொரு வருஷத்திலும் அதன் முதன் மாதத்தில் மேற்படி இடங்களைப் பாவிப்பதற்காக ஒரு உத்தரவுச்சீட்டைத் தரும்படி நகரசங்கத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும், புதிதாய்த் திறக்கப்பட்ட இடங்களுக்கு உத்தரவுச்சீட்டு பெறவேண்டுமாகில் அப்படித் திறக்கப்பட்ட ஒரு மாதத்துள் மேற்படி விண்ணப்பஞ்செய்தல் வேண்டும்.

*நகரசங்கத்தலைவர் உத்தரவுச் சீட்டைக் கொடுக்க அல்லது கொடாமல்விட அதிகாரமுண்டு.*

நகரசங்கத்தலைவர் தாம் நினைக்கிறபடி மேற்படி உத்தரவுச்சீட்டைக் கொடுத்தலும் கொடாது விடுதலும் அப்படி கொடுத்த உத்தரவுச்சீட்டை எந்த நேரத்திலும் அழித்தலும் நிறுத்திவைத்தலும் அவ்வுத்தரவுச்சீட்டைக் கொடுக்கும்போது இன்னயின்ன செய்யவேண்டுமென்று கட்டளைபண்ணுதலும் ஆகிய செய்கைகள் செய்ய அதிகாரமுடையவராவர். அவ்வுத்தரவுச்சீட்டைக் கொடாது விடும்போதாவது அழிக்கும்போதாவது நிறுத்திவைக்கும்போதாவது செய்யும் கட்டளை எழுத்திலிருத்தல் வேண்டும். அப்படி கட்டளைசெய்வதற்கு நியாயமும் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

*உத்தரவுச் சீட்டிடாமல் இடத்தைப் பாவிப்பவருக்குத் தண்டனை.*

மேற்படி உத்தரவுச்சீட்டானது இல்லாதபோதாவது கொடுக்கப்படாதபோதாவது அழிக்கப்பட்டிருக்கும்போதாவது நிறுத்திவைக்கப்பட்டிருக்கும்போதாவது அல்லது உத்தரவுச்சீட்டிலுள்ள பொருத்தங்களுக்கு விரோதமாயாவது மேற்சொல்லிய முகாந்தரங்களுக்காக எந்த இடத்தையாவது பாவிக்கு மெவரும் இருபது ரூபாவுக்கு மேற்படாத குற்றத்துக்காளாவது மல்லாமல் அப்படி குற்றவாளியாகக் காணப்பட்டபின் அப்படி அவ்விடத்தைப் பாவிக்கிற ஒவ்வொரு நாளைக்கும் பத்து ரூபா வீதத்துக்கும் மேற்படாத குற்றத்துக்கு மாளாவர்.

*அரசாட்சியார் அப்படி பாவித்தல் குற்றமில்லை.*

ஆனுல் அப்பிரிவிற் சொல்லியவை அரசாட்சியார் அதிகாரத்துக்குக் கீழ் அல்லது பாவிப்பிலிருக்கு மெந்த விடத்தையும் தாக்கமாட்டாது.

*உத்தரவுச்சீட்டு வைத்திருப்போர் தங்கள் லாயங்களிலிருக்கும் மிருகங்களின்சொந்தக்காரர் பெயரைக் கேட்டால் எழுதிக்கொடுத்தல் வேண்டும்.*

40. குதிரை, ஆடு, மாடு முதலிய நாற்கால் மிருகங்கள் விற்பதற்காவது கூலிக்குவிடவாவது அல்லது அவைகளினின்றும் வரும் வரும்படியை விற்பதற்காவது அம்மிருகங்களை விட்டுவளர்க்க எவ்விடத்தையாவது பாவிப்பதற்கு நகரசங்கத்தலைவரிடம் உத்தரவுச்சீட்டு பெற்றிருக்கும் ஒவ்வொருவரும் அவ்விடங்களில் அந்நேரத்தில் நிற்கும் குதிரை, ஆடு, மாடு முதலிய மிருகங்களின் சொந்தக்காரருடைய பெயர் ஒவ்வொன்றையும் எழுத்தி லெழுதித் தரவேண்டுமென்று நகரசங்கத்தலைவர் காலத்துக்காலம் கேட்கும்போதெல்லாம் அப்படி எழுதிக்கொடுத்தல் வேண்டும், அத்தோடு இன்ன இன்ன இனத்தில் இத்தனை இத்தனை நிற்கின்றன வென்றும் எழுதிக்கொடுத்தல் வேண்டும்.

*சாணி முதலிய மலங்கள் தண்ணீரைப் பழுதாக்கக்கூடிய இடத்தில் போடுதல் கூடாது.*

41. மனுஷரால் பாவிக்கப்படும் அல்லது பாவிக்கப்படப்படும் போலவிருக்கும் அல்லது குடிக்கப் பாவிக்கப்படும் அல்லது வீட்டுகாரியங்களுக்குப் பாவிக்கப்படும் அல்லது பால்மாடு, ஆடு, குதிரை முதலிய விலங்குசாதிகளால் பாவிக்கப்படும் அல்லது அவைகளால் பாவிக்கப்படும்போலிருக்கும் அல்லது யாதாமொரு டெயரியிலிருக்கும் அல்லது பால்கறக்க அல்லது வைக்கப்பாவிக்கும் பாத்திரங்களைக் கழுவப் பாவிக்கப்படும் தண்ணீர் எங்கேயிருக்கிறதோ அந்தத் தண்ணீரை அழுக்குப்படுத்தும்படியான விதமாய் மேற்படி குதிரை ஆடு முதலிய விலங்குசாதிகளின் மலத்தை எவ்விடத்திலாவது வைத்தலும், வைக்க இடங்கொடுத்தலும் உத்தரவுச்சீட்டுப்பெற்ற எவரும் செய்தல் கூடாது.

*தலங்கள் ஊறாதபடி தளவிசைப்போடுதல் வேண்டும்.*

42. அக்குதிரை, ஆடு, மாடு முதலியவைக்காகப் பாவிக்கப்படும் அல்லது பாவிக்கப்படப்போகிற ஒவ்வொரு கட்டடத்தின் தலமும் தகுந்த சாமான்போட்டு தளவிசைசெய்து மலம் மூத்திரம் முதலியவை உட்புகாதபடிசெய்து அத்தளத்தைத் (தண்ணீர் ஓடக்கூடிய) சரிவாய்ச் செய்வதுடன் கானுகவும் செய்திருத்தல் வேண்டும். அப்படி செய்திருத்தல் நகரசங்கத்தலைவர் போதுமானதென்று சொல்லவும் வேண்டும்.

*சாணிமுதலியவை போட வக்குகள்.*

43. மேற்படி சொல்லப்பட்ட இடங்களில் ஓர் வசதியான இடத்தில் அல்லது அவ்விடங்களின் சமீபத்திலிருக்கும் ஓர் இடத்தில் மேற்படி இடங்களில் நிற்கும் குதிரை, ஆடு, மாடு முதலிய மிருகங்களாலுண்டாகும் சாணி, குப்பை, அழுக்கு முதலியவை யெல்லாம் போடுவதற்காக ஓர் தகுந்த வக்கை மேற்படி உத்தரவுச்சீட்டுப்பெற்றவர் வைத்திருத்தல் வேண்டும்; அப்படிப்பட்ட குழி நகரசங்கத்தலைவர் நல்லதென்று சொல்லக்கூடியதாய் இருத்தல் வேண்டும்.

*வக்கினது அடித்தலம் பக்கத்திலுள்ள நிலத்திலும் பதியாயிருத்தல்வேண்டும்.*

மேற்சொல்லிய வக்கினது அடித்தலம் பக்கத்திலுள்ள நிலத்திலும்பார்க்க ஒருபோதும் பதியாமலிருக்கக்கூடிய விதமாய் அவ்வக்கைக் கட்டுவித்தல் வேண்டும்.

*உள்ளிருக்குஞ் சாணி முதலியவை வெளியில் ஊறிப்போகாவண்ணம் கட்டிருத்தல் வேண்டும்.*

மேலும் அவ்வக்குகளை உள்ளிருக்கும் சாணி முதலியவை வெளியிலாவது, நிலத்துக்குள்ளாவது, அடுத்த கட்டடத்தின் சுருக்குக்குள்ளாவது ஊறிச்செல்லாதபடி நல்ல சாமான் போட்டுப் பெலமாய்க்கட்டி என்றும் அப்படியே யிருக்கும்படியாய்ப் பழுதுபார்த்தல் வேண்டும்.

*வக்குக்கு மூடி போடல்.*

மேற்சொல்லிய வக்குகளுக்குத் தகுந்த மூடிபோட்டிருத்தல் வேண்டும்.

*ஆடுமாடு குளிப்பாட்டத் தளவிசைப்போட்ட இடம் வேண்டும்.*

44. மேற்படி இடங்களில் குதிரை, ஆடு, மாடு வைத்து வளர்த்தால் அம்மிருகங்களைக் குளிப்பாட்டுவதற்காய் ஓர் தளவிசைப்போட்ட இடம் வைத்திருத்தல் வேண்டும். அத்தளவிசைப்போட்ட இடம் மேற்படி மிருகங்கள் நிற்குமிடங்களி லல்லது அவ்விடங்களோடு தொடுத்ததாய் நகரசங்கத்தலைவர் தகுந்ததென்று சொல்லக்கூடியதா யிருத்தல் வேண்டும்.

*அழுக்குநீர்போகும் வாய்க்கால் பழுதுபார்த்தல்.*

45. மேற்படி கட்டடங்களிலுள்ள அல்லது அவைகளோடு தொடுக்கப்பட்டிருக்கும் அழுக்குநீர் பாயும் வாய்க்கால் முதலியவை யெந்த நேரத்திலும் நல்ல நிலையிலுட நல்லாய் நீரோடத்தக்க மாதிரியாயுமிருத்தல் வேண்டும். நகரசங்கத்தலைவரும் நல்லதென்று சொல்லக்கூடிய நிலையாத்தி லிருத்தல் வேண்டும்.

*மேற்படி இடங்களைத் தினந்தோறும் சுத்தப்படுத்தல்.*

46. தினந்தோறும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது மேற்படி கட்டடங்களைத் தண்ணீரா லடித்துக் கழுவி மேற்படி 43 ம் பிரமாணத்தில் சொல்லியபடி வைக்கப்பட்டிருக்கும் வக்குகளிலுமுள்ள சாணி, அழுக்கு, மண் மூத்திர முதலிய நாற்றமுள்ள பதார்த்தம் முழுவதையு மன்னி அகற்றி நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் நியமிக்கு மிடங்களில் கொண்டுபோய்ப் போடுதல் வேண்டும்.

*லாயங்கள் கட்ட வேண்டிய கடமைகள்.*

47. குதிரைகளுக்கு அல்லது மாடுகளுக்குக் கட்டப்படும் லாயங்கள் கீழ்த்தளத்திலிருந்து வாள்க்கைமட்டத்துக்கு 9 அடிக்குக் குறையாம லிருத்தல் வேண்டும். அல்லது தாள்ந்த வாள்க்கைக்கு சாய்வான கூரையாக யிருத்தல் வேண்டும். மேற்படி கீழ்த்தளத்திலிருந்து மோட்டு வாள்க்கை மட்டத்துக்கு 12 அடிக்குக் குறையாம லிருத்தல் வேண்டும். அல்லது மேல்வாள்க்கைக்குச் சாய்வான கூரையாக யிருத்தல் வேண்டும். ஒவ்வொரு குதிரையும் நிற்கக்கூடிய தளங்கள் அடைத்தால், 10 அடியும் 8 அடியுமாகத் தளமிருத்தல் வேண்டும். ஒவ்வொரு மாடும் ஒவ்வொரு எருமையும் நிற்கக்கூடிய தளம் 6 அடியும் 3 அடியுமாக யிருத்தல் வேண்டும்.

---

## 14 ம் அதிகாரம்.

### உணவுக்குத்தகாத சாமானைப் பிடித்தல்.

*உணவுக்குத்தகாத சாமானைப் பிடித்தல்.*

1. நகரசங்க எல்லைக்குட் கொண்டுவரப்படும் அல்லது விற்கவைக்கப்பட்டிருக்கும் இறைச்சி கோழி, மீன், வேட்டைமிருகம், மாமிசம், காய்கறி, பழம், முதலிய எந்த உணவுக்கேற்ற சாமானாவது மனுஷஉணவுக்குத் தகாதென்று அல்லது சுகத்துக்கேற்றதல்லதென்று கண்டால், நகரசங்கத்தைச் சேர்ந்த எந்த இன்ஸ்பெக்டராவது அல்லது ஆடுமாடறுக்குஞ் சாலையில் மேற்பார்வைக்காரராவது அச்சாமானைப் பிடித்து நகரசுக வைத்தியரிடமாவது, அல்லது மிருக வயித்தியரிடமாவது, அல்லது அவர்களில்லாதிருந்தால் நகரசங்க மஜிஸ்றேற்றிடமாவது கொண்டுபோகலாம். அப்படிக் கொண்டுபோகப்பட்ட இறைச்சி கோழி முதலியவை மனுஷ உணவுக்குத் தகாதெனவென்று அந்நகரசுக வயித்தியருக்கு அல்லது மிருக வயித்தியருக்கு அல்லது நகரசங்க நீதவானுக்குத் தோற்றுமாகில், அவர் அவற்றை விற்கவாவது அல்லது மனுஷ உணவுக்காகப் பாவிக்கப்படவாவது விடாதபடி அழித்துப்போடல் அல்லது வேறு விதமாய் மாற்றிவிடல் வேண்டும்.

*மோசம்வரத்தக்க சரக்குகள் சேர்த்து விற்றலைத் தடுத்தல்.*

2. (1) எவராவது உணவுக்குப் பாவிக்கும் சாமானோடும் சுகத்துக்கு மோசம்வருவிக்கத்தக்க எப்பதார்த்தத்தையாவது கலந்து நிறைப்பண்ணுதல், பொடியாக்குதல், அல்லது இன்னொருவர் அப்படிச் செய்யவிடுதல், முதலிய செய்கைகள், அச்சாமானை விற்கும் நோக்கமாய்ச் செய்தல் கூடாது. அப்படிக் கலந்து நிறைப்பண்ணிப் பொடிபண்ணிய பதார்த்தத்தை யாராகிலும் விற்றல் கூடாது.

(2) மனுஷருணவுக்காகச் செய்யப்படும் சாதம், பணியாரம், மிட்டாய் முதலிய தின்பண்டங்களில் தூசி, கொசு, அல்லது கெட்டநாற்றம் வராதபடி பாதுகாக்காமல் யெவராவது அவைகளை விற்கப்படாது.

*தண்ணீர் முதலிய கலந்து பழுதுபண்ணிய பால்.*

3. எவராவது தண்ணீர் அல்லது வேறு பதார்த்தங்கொண்டு கலக்கப்பட்ட பசுப்பால் அல்லது எருமைப்பாலை விற்கவைத்திருத்தலும் விற்கக் கொண்டுதிரிதலும் நியாயப்பிரமாணத்துக்கு விரோதம்.

*பால் சோதிப்பும் விற்றலும்.*

4. பால்வியாபாரஞ்செய்யும் பேர்கள் ஆடையெடுத்தப் பாலென்று வாங்குவோருக்கு அறிவிக்காமல் ஆடையெடுத்த பால் விற்கப்படாது.

5. றெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்ட பால்வியாபாரி அல்லது மற்றபேர்கள் பால்விற்கும் போது நகரசுகவயித்தியர் அல்லது அவருடைய உதவிக்காரர் அல்லது மிருகவயித்தியர் அல்லது நகரசங்க இன்ஸ்பெக்டர் அவர்களிடத்தில் பால் மாதிரி காண்பிக்கும்படி எந்த நேரத்திலும் கேட்கலாம். அப்போது மேற்படி பால்வியாபாரிகள் அப்பாலைக் கொடுக்காவிட்டால் அவர்களைக் குற்றவாளியெனச் சாட்டப்படும்.

6. பால் மாதிரி யெடுக்கிறதில் நகரசுகவயித்தியர், அல்லது அவருதவிக்காரர், அல்லது மிருகவயித்தியர், அல்லது நகரசங்க இன்ஸ்பெக்டர் மூன்று மாதிரி யெடுக்கவேண்டியது, அப்படியெடுத்து உடனே அம்மாதிரிகளை அப்பால்காரரின் முன்பதாக முத்திரித்து ஒன்றை அப்பால்

காரனிடத்தில் கொடுத்து மற்ற இரண்டையும் ஒன்றை திறமுண்டிய பகுப்பவரிடத்திலும் மற்றொன்றை அரசாட்சியின் பகுப்பவரிடத்திலும் அனுப்பவேண்டியது. அப்படி அனுப்பிய மாதிரிகளில் தண்ணீர் கலந்திருக்கிறதென்று சொல்லப்பட்டால், அம் மாதிரிகளே அதற்குச் சாட்சியாக யெடுக்கப்படும். அப்படி சாட்சிக்கொண்டுவருகிறதாயிருந்தால், அது தண்ணீர் கலக்கப்பட்டிருக்கிறதென்று அரசாட்சியின் பகுப்பவரிடத்திலிருந்து நிச்சயப்பத்திரம் பெற்றுவரவேண்டியது.

7. நகரசங்கத்தலைவர் காலத்துக்குக்காலம் நியமிக்கிறமாதிரி அச்சிட்டு இலக்கம் பதிவுசெய்து சக்கிடுத்தார் கையொப்பமிட்ட சீட்டை ஒவ்வொரு வருஷமும் ரெஜிஸடர் பதிவுசெய்த பால்க்காரருக்கு அவர்கள் கேட்டவுடன் கொடுக்கவேண்டியது. அப்படி அந்தந்த வருஷத்துக்குக் கொடுக்கப்படும் சீட்டை அவர்கள் வசமில்லாமல் எந்த ரெஜிஸடர்பதிவுசெய்யப்பட்ட பால்காரரும் பால்விற்க அல்லது தெருவளியே கூறக்கூடாது. மேலும் அப்படிப்பட்ட பால்காரருடைய பெயர் பதிவில்லாமல் அவர்கள் பால்வியாபாரம் செய்யவும் கூடாது. மேற்படி சீட்டை நகரசங்க உத்தியோகஸ்தர் அல்லது பொலீஸ உத்தியோகஸதர் சோதனைக்காகக் கேட்டபொழுது எவராவது மேற்படிச் சீட்டைக் காண்பிக்கத்தவறினால், அவர்களைக் குற்றவாளியென்று சாட்டப்படும். மேலும் அப்படிப்பட்டவர்களை உடனே அவ்வுத்தியோகஸதர் பிடிக்கலாம். அப்படிப் பிடித்து அவர்களை அருகாமையிலிருக்கும் பொலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய் விடவேண்டியது. அப்பொலீஸ ஸ்டேஷன் யாருடைய பாரத்திலிருக்கிறதோ அவர் அவனோடு பேசிக்கொள்ளலாம். மேலும் அப்படிப்பட்டவர்களை எந்த பொலீஸ உத்தியோகஸதரும் துஷ்கிருத்திய வியவகாரவிதியின் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் (Criminal Procedure Code) வாரந்தில்லாமல் பிடிக்கலாம்.

8. மேற்சொல்லப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் எடுக்கப்பட்ட மாதிரியில் தண்ணீர் கலக்கப்பட்டிருக்கிறதென்று தெரியப்பட்டால், அது யாரிடத்திலிருந்து யெடுக்கப்பட்டதோ அவர்களைக் குற்றத்திற்கு நியமிக்கப்படும், அல்லது அம்மாதிரி யெடுக்கும்போது அவர்கள் மேற்சொல்லிய நிபந்தனையின் பிரகாரம் பெற்ற சீட்டைக் காண்பித்து அந்தச் சீட்டு யாருக்குக் கொடுக்கப்பட்டதோ அந்த ரெஜிஸ்டர் பதிவுசெய்யப்பட்ட பால்காரனுடைய பெயர் பதிவிலிருந்தால் அப்படி ரெஜிஸ்டர்பதிவுசெய்யப்பட்ட பால்காரனை குற்றவாளியென்று நியமிக்கப்படும்.

9. நகரசுகவயித்தியர் அல்லது அவருடைய உதவிக்காரர் அல்லது மிருகவயித்தியர் அல்லது நகரசங்க இன்ஸ்பெக்டர் எவராவது, உப்பிட்ட இறைச்சி அல்லது தகரத்திலடைத்துவரும் இறைச்சியை வைத்து வியாபாரம்செய்யு மெந்தக் கடைக்கும் திறந்திருக்கும்போது உள்ளே போய்ச் சோதனைபண்ணி அவைகள் மனுஷருணவுக்குத் தகாதென்று கண்டால் அவைகளை திறமுடைய பகுப்பவரிடத்திற்கு அனுப்பலாம். அப்பகுப்பவர் அதை மனுஷருணவுக்குத் தகாதென்று கண்டு நிச்சயப்பத்திர மனுப்பினால் அதையே சாட்சியாகக்கொண்டு அப்படிப்பட்ட கடைக்காரனை குற்றவாளியென்று நியமிக்கப்படும்.

10. இருந்தாமிலம் சேர்த்தத் தண்ணீர் செய்யப்படு மிடங்களுக்கு அது திறந்திருக்கும் எந்த நேரத்திலும் போய் வியாபாரத்திற்கு வைத்திருக்கும் எவ்விதத் தண்ணீர் புட்டிகளிலும் மாதிரிக்காக ஒரு புட்டியெடுக்க நகரசுகவயித்தியர், அல்லது அவருதவிக்காரர், அல்லது மிருகவயித்தியர், அல்லது நகரசங்க இன்ஸபெக்டர் எவர்களுக்கும் தத்துவமுண்டு. அப்படி அவர்கள் கேட்கும்போது அதின் சொந்தக்காரரல்லாது தலைமைக்காரர் மறுப்பார்களாகில் அவர்களைக் குற்றவாளியென்று நியமிக்கப்படும். அப்படி யெடுத்த மாதிரியை தகுதியான பகுப்போரிடத்திற்கு அனுப்பி அவர் அனுப்புகிற நிச்சயப்பத்திரிக்கையில் அது மனுஷர் பாவிப்புக்குக் கூடாதென்று யெழுதியிருந்தால் அதையே சாட்சியாகக்கொண்டு அதினுடைய சொந்தக்காரனை யல்லது மேற்பார்வைக்காரனை குற்றவாளியென்று நியமிக்கப்படும்.

---

## 15 ம் அதிகாரம்.

### வீடுகளிற் சனங்கள் நெருங்கியிருத்தல்.

*கட்டடங்கள் நெருங்கியிருத்தல்.*

1. எந்த நேரத்திலாவது எக்கட்டடத்திலாவது நகரசங்கத்தலைவர் அபிப்பிராயப்படி அவ்விடத்தில் வசிக்கக்கூடிய தொகைக்கு மேற்பட்ட சனங்களிருப்பதாகக் காணும்போதெல்லாம் அக்கட்டடத்தில் வசதியாயிருக்கக்கூடிய தொகையேயல்லாமல் மிகுதியாயிருப்பவர்களை அக்கட்டடத்தினின்றும் வெளியேபோகும்படி சொல்வதற்கு நகரசங்கத்தலைவருக்கு அதிகாரமுண்டு. அப்படிக் கட்டளைக் கொடுத்தபின் எந்நேரத்திலாவது அக்கட்டளையிற் சொல்லப்பட்ட தொகைக்கு மேற்பட அக்கட்டடத்தில் சனங்கள் வசிப்பதாகக் காணப்பட்டால், அக்கட்டடத்தின் சொந்தக்காரன் குற்றவாளியாக எண்ணப்படுவான்.

2. (1) யாதாமொரு கட்டடத்தில் வசிப்பவர் தொகை அதிகப்பட்டு, அவ்வசிப்பவர்கள் சுகத்துக்கு மோசம் வருமென்று நகரசங்கத்தலைவருக்குத் தோற்றுமாகில், அப்படித் தொகை யதிகப்படுவதைத் தடுக்கும்படி நகரசங்க நீதவானைக் கேட்கலாம். அதன்பின் அந்நீதவான் விசாரணை வைத்து எழுத்து மூலமாய் அக்கட்டடச் சொந்தக்காரனுக்குக் கட்டளையனுப்பி அக்கட்டளையிற் சொல்லப்பட்டிருக்கும் (6) ஆறு கிழமைக்கு மேற்படாத காலத்துக்குள், அக்கட்டடத்தில் வசிப்போர் தொகையைக் குறைக்கும்படி கட்டளைபண்ணலாம். அல்லது தாம் சரியென்றும் நியாயமென்றும் நினைக்கிற வேறெந்தக் கட்டளையாவது பண்ணலாம்.

(2) ஓர் கட்டடத்தின் சொந்தக்காரன் அவ்வீட்டைக் கீழ்வாடகைக்கு கொடுத்திருந்தால், அக்கட்டடத்தில் வசிப்பவரிடத்தில் வாடகை வாங்குபவனே இப்பிரிவின் முகாந்திரத்துக்கு சொந்தக்காரனென் றெண்ணப்படுவான்.

(3) இக் கீழ்ப்பிரிவின்படி சொந்தக்காரன் கேட்கும்போது அக்கட்டடத்தில் வாடகைகொடுத்து வசிக்கிற அல்லது அங்கிருக்கிற எவரும் அக்கட்டடத்தை விட்டுப்போவது அவர் கடமை.

---

## 16 ம் அதிகாரம்.

### சாதாரணமான விடுதிவீடுகள்.

*இடாப்பு.*

1. விடுதி வீடுகளெல்லாம் அடங்கிய ஒரு டாப்பு நகரசங்கத்தலைவர் வசமிருத்தல் வேண்டும். அவ்விடாப்பு இதன் அநுபந்தத்திலிருக்கும் J. என்னும் செடூலின் மாதிரியாயிருத்தல் வேண்டும்.

*வீடுகளைப் பதிவு செய்தல்.*

2. சாதாரணமான விடுதிவீடென்று ஒரு வீட்டைப் பதிவுசெய்யுமுன், அவ்வீடிருக்குமிடம் விடுதிகாரருக்குக் கொடுக்கவென்றிருக்கிற அறைகளின் தொகை, அந்த அறைகளின் விஸ்தார முதலிய விபரங்களடங்கியதாயும், இதன் அநுபந்தத்திலிருக்கும் K. என்னுஞ் செடூலைப்போன்ற மாதிரியுள்ளதுமான ஒரு விண்ணப்பப்பத்திரம் நகரசங்கத்தலைவருக்கு அனுப்பப்படவேண்டும். அந்த முகாந்திரத்துக்காக நகரசங்கத்தலைவரால் மேற்படி மாதிரியான ஒரு செடூல் (வேண்டியபோது) கொடுக்கப்படும்.

*வீடுகளைப் பதிவு செய்தல்.*

3. சாதாரணமான விடுதிவீடென்று பதிவுசெய்யப்பட எண்ணப்பட்டிருக்கும் எந்த வீடாவது அதிக பெலப்புள்ளதாகக் கட்டப்பட்டு ஒழுங்கான நிலையிலிருத்தலோடு தளங்களெல்லாம் ஓட்டினால் அல்லது சேர்த்திறுக்கிய சிமந்தியினால் அல்லது ஒரு அங்குல கனமுள்ள போட்லண்ட் சிமந்தியோடு சேர்த்திறுக்கிய சுண்ணாம்பால் தளவிசைபோடப்பட்டிருத்தல் வேண்டும். அத்தோடு படுக்கை யறைகளாகப் பாவிக்கப்படவென்றிருக்கிற எல்லா அறைகளும் அதனதன் பக்கத்திலுள்ள நிலமட்டத்துக்கு மேலிருத்தல் வேண்டும். மேலும் அவ்வீட்டோடு தொடுக்கப்பட்ட வாய்க்கால்களெல்லாம் ஒழுங்காயும் வீட்டு வாய்க்கால்களைப்பற்றிய கீழ்ப்பிரமாணங்களின்படி கட்டப்பட்டவைகளாயுமிருத்தல் வேண்டும். அதுவுமன்றி நகரசங்கத்தலைவர் போதுமென்று சொல்லக்கூடிய மாதிரியான குசினி, கக்கூசு சலங்களோடு குழி முதலியவையிருத்தல் வேண்டும். மேலும் தண்ணீர் எப்போதைக்கு மொரேவிதமாய்க் குறைவின்றி வரக்கூடிய மாதிரியாயிருந்தாலன்றி, போதியளவு தண்ணீர் சேர்க்கப்பட்டு நிற்கக்கூடியதாய் ஒரு தொட்டியுமிருத்தல் வேண்டும்.

*விடுதிவீடு வைத்திருப்பவர் உத்தரவுச்சீட்டுப்பெறல்.*

4. ஒரு சாதாரண விடுதிவீடு வைத்திருப்பதற்கு ஒருவன் உத்தரவுகொடுக்கப்படுமுன் அவன் நகரசங்கத்தலைவருக்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும். அப்படிப்பட்ட விண்ணப்பத்தோடு நகரசங்கத்தலைவர் ஒத்துக்கொள்ளக்கூடிய மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வீட்டுடையோரால் கொடுக்கப்பட்ட நன்னடக்கைப்பத்திரமொன்று சேர்க்கப்படவேண்டும். அதுவுமன்றி உத்தரவுச்சீட்டுப்பெற்ற விடுதிவீடு வைத்திருப்போருக்குரிய சட்டங்களையெல்லாம் நிறைவேற்றும் பொருட்டு அப்படி நன்னடக்கைப்பத்திரம் கொடுப்போர் பிணைகொடுத்தலும் வேண்டும்.

*விடுதிவீடு வைத்திருப்போருக்கு உத்தரவுச்சீட்டு கொடுத்தல்.*

5. விடுதிவீடு வைப்பதற்காக விண்ணப்பஞ்செய்த ஒருவனுடைய குணம் நல்லதென்று நகரசங்கத்தலைவர் கண்டால், அவர் அப்பிரகாரமே ஒரு உத்தரவுச்சீட்டு அவனுக்குக் கொடுக்கலாம்.

*விடுதிவிட்டிருப்பவர் தொகையைக் குறைத்தல்.*

6. தொகையைக் குறைப்பதற்கு நியாயத்தையும் அப்படி எவ்வளவு காலம் குறைந்திருக்க வேண்டுமென்பதையும் காட்டி நகரசங்கத்தலைவர் எழுத்திலே ஒரு அறிவித்தலை அனுப்பப்பெற்றுக்கொண்ட ஒவ்வொரு விடுதிவீடு வைத்திருப்பவனும் தனது வீட்டிலுள்ள எந்த அறையிலாவதிருக்கும் விடுதிக்காரர் தொகையைக் குறைத்தல் வேண்டும்.

*அறிகுறிப்பலகை வைத்தல்.*

7. சாதாரணமான விடுதிவீடு வைத்திருப்பவன் அவ்வீட்டின் வெளிப்புறத்தில் நல்லாய்த் தெரியக்கூடிய ஓரிடத்தில் கறுத்தத் தீந்தை பூசப்பட்டு (Licensed Lodging House) என்னுஞ் சொற்கள் இரண்டு அங்குல நீட்டுக்குக்குறையாத எழுத்துகளால் வெள்ளைத் தீந்தையில் இங்கிலீஸ, சிங்களம், தமிழ் என்னும் பாஷைகளில் நேர்த்தியாய் எழுதப்பட்ட ஓர் பலகையை வைத்தல் வேண்டும். அதுமன்றி அவ்வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையின் வாசலிலும் அவ்வறையில் இத்தனை பேரிருக்கலாமென்று பதிவுசெய்யப்பட்ட தொகை மேற்சொல்லிய மூன்று பாஷையிலும் எழுதப்பட்ட ஒரு பலகை வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

*ஆண்பெண்களிருக்கப் பிறம்பான அறைகள்.*

8. சாதாரணமான விடுதிவீடு வைத்திருக்கு மொருவன் ஒரே படுக்கையறையில் பத்து வயசுக்கு மேற்பட்ட ஆண்பெண்களை இருக்கவிடுதல் கூடாது. ஆனால் பெண்சாதி புருஷன் பெற்றார் பிள்ளைகளாயிருந்தால அப்படிவிடலாம். கெட்ட முகாந்திரத்துக்காக தன் வீட்டுக்குள் யாரையாவது விடுதிவீடு வைத்திருப்பவன் இருக்கவிடுதல் கூடாது.

*நல்ல ஒழுங்கு.*

9. சாதாரண விடுதிவீடுவைத்திருப்பவன் அறிந்துகொண்டும் கெட்ட குணமுள்ளவர்களைத் தனது வீட்டிலிருக்க விடுதல் கூடாது. மேலும் அவன் அவ்வீட்டிலிருப்பவர்கள் நன்னடத்தையுள்ளவராயும் ஒழுங்குள்ளவர்களாயிருக்கச்செய்தல் கடமை. அதுவுமன்றி தனது விடுதிவீட்டிலிருக்கு மொவ்வொரு விடுதிகாரரது பெயர், தொழில், பிறப்பிடம் முதலியவை எழுதப்பட்ட ஓரிடாப்பை வைத்திருத்தலும் வேண்டும்.

*காற்றுலாவ விடுதல்.*

10. சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவனெவனும் படுக்கையறைகளிலுள்ள ஜன்னல்களெல்லாந் தினந்தோறுங் குறைந்தபட்சம் நாலு மணித்தியாலத்துக்காவது திறந்துவைத்திருத்தல் வேண்டும். புயல் மழையுள்ள நேரத்தில் அப்படி வைத்திருத்தல் வேண்டியதில்லை.

*துப்பரவு செய்தலும் சுண்ணாம்படித்தலும்.*

11. சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவன் அவ்வீட்டுச் சுவர்களின் உட்புறமும் மச்சும் ஒவ்வொரு வருஷத்திலும் 3 ம், 6 ம், 9 ம், 12 ம் மாசங்களில் நல்லாய்க் கழுவி வெள்ளையடித்து வைத்திருத்தல் வேண்டும்.

*சுத்தமாயிருத்தல்.*

12. மேற்படி விடுதிவீடு வைத்திருப்பவன் எந்த நேரத்திலும் அவ்வீட்டறைகள் விறாந்தைகளெல்லாவற்றையும் சுத்தப்படுத்தி சுகத்துக்கேற்ற நிலையில் வைத்திருத்தல் வேண்டும். படுக்கையறைகளிலுள்ள சாமான்களெல்லாம் நல்லாய்ப் பழுதுபார்த்து வைத்திருத்தல் வேண்டும். மேற்படி வீட்டிலுள்ள ஒவ்வொரு அறையையும், பாதையையும், படியையும் தினந்தோறும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது கூட்டித் துப்பரவுசெய்து வைத்தல்வேண்டும்.

*சுத்தப்படுத்தல்.*

13. மேற்படி விடுதிவீடு வைத்திருப்பவர் எவரும் அவ்விடத்திலுள்ள அழுக்கு குப்பை முதலிய பழுதான பதார்த்தங்களை அங்கிருந்தும் நாள்தோறு மகற்றிபோடவேண்டும்.

*தொற்றுநோய் முதலியவை.*

14. மேற்படி சாதாரண விடுதிவீட்டில் எவருக்காவது தொற்றுநோய் வருமாகில், அவ்வீட்டை வைத்திருப்பவர் அவ்விடுதிவீட்டிருக்கும் பகுதியைச்சேர்ந்த நகரசங்க இன்ஸ்பெக்தருக்கு அறிவித்தல் வேண்டும். அல்லது கிட்டயிருக்கும் பொலீஸ ஸ்டேசனுக்காவது நகரசங்கத்தலைவருக்காவது அப்படி அறிவித்தல் வேண்டும். மேலும் சாதாரண விடுதிகள் வைத்திருப்பவன் அவ்வீட்டை ஒழுவித்து அத்தொற்றுநோயாளி பாவித்த படுக்கை உடுப்பு முதலிய சாமான்களை யழித்து அல்லது சுத்திசெய்து அவ்வீட்டையும் புகைப்போட்டுச் சுத்தஞ்செய்து வெள்ளையடித்தல் வேண்டும். அப்படிச்செய்யும் சிலவு நகரசங்கத்தலைவர் கற்பிக்கிறபடி அரசாட்சியார் பொறுத்தல்வேண்டும். அப்படிப்பட்ட சாதாரண விடுதிவீட்டை வைத்திருப்பவன் மறுபடியும் விடுதிகாரரைச் சேர்க்குமுன் நகரசுக வயித்தியரால் அல்லது அவருதவிகாரனால் அவ்விடத்தைச் சோதிப்பித்து தொற்றுநோய் வரக்கூடிய நிலையில் அவ்வீட்டிருக்க வில்லையென்று சேட்டிவிக்கற் பெற வேண்டும்.

*கக்கூசு வசதிகள்*

15. மேற்படி விடுதிவீடுகளிலுள்ள கக்கூசுகளெல்லாம் தினந்தோறும் வாளி வைத்தெடுக்கிற ஒழுங்குள்ளதாயிருத்தல் வேண்டும். அப்படி வீட்டுக்கு அவசரமென்று கண்டால் நகரசங்கத்தலைவர் இதற்கென்று நாள்தோறும் சம்பளம் கொடுக்கிற ஓர் கூலியை வைப்பார். ஒவ்வொரு பத்துப் பேருக்கும் குறைந்தபட்சம் ஒரு அளவு வாளியாவது இருத்தல் வேண்டும். நகரசங்கத்தலைவர் சொல்லுகிற பிரகாரம் கக்கூசு வசதியாயிருந்தால் தண்ணீர் கரத்தையுமனுப்பப்படும், எவ்விஷயத்திலும் சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவன் கக்கூசு வசதியாய் வைத்திருத்தல் வேண்டும்.

*தண்ணீர் வைத்தல்.*

16. மேற்படி விடுதிவீடுகளெல்லாம் அவ்விடுதி வைத்திருப்பவனுடைய செலவால் போதியளவு தண்ணீர் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அத்தண்ணீரும் லபுகமாவிருந்து வருத் தண்ணீராகவிருத்தல் வேண்டும்.

*சோதனை பார்த்தல்.*

17. மேற்படி வீடுகளை எந்த நேரத்திலும் இரவிலாவது பகலிலாவது நகரசங்க உத்தியோகஸ்தராவது இன்ஸ்பெக்தர் நிரைக்குக் குறையாத பொலீஸ உத்தியோகஸ்தராவது போய்ச் சோதனை பண்ணலாம்.

*[illegible]*

16. சாதாரண விடுதிவீடென்பது ஒரே குடும்பத்தைச்சேராதவர்களாய் பத்து அல்லது அதற்கு மேற்பட்ட தொகையான ஆட்களிருக்கும் வீடேயாம், அல்லது அப்படி ஆட்களிருக்கும் ஓர் பாகமேயாம்.

வீட்டு வேலைக்காரர் அல்லது சாய்ப்பு வேலைக்காரரல்லாத வேறு வேலைக்காரரை எவராவது ஓர் நிலையான கட்டடத்தில் வைத்திருந்தால் அக்கட்டடமும் (சாதாரண விடுதிவீடாகும்).

சாதாரண விடுதிவீடு வைத்திருப்பவனென்பது உத்தரவுச்சீட்டுப் பெற்றுச் சாதாரண விடுதி வீடு வைத்திருப்பவனே.

---

## 17 ம் அதிகாரம்.

### சவந்தாட்டல் சவக்காலை.

*சவந்தாட்டல் சு தற்கு இடம்.*

1. 1899 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் கீழ் சவக்காலையென்று முறையே பிரசித்தம்பண்ணப்படாத எந்த இடத்திலாவது அல்லது மேற்படி சட்டத்தின் கீழ் நகரசங்கக் கந்தோரில் சவம் புதைக்குமிடம் அல்லது சுடுமிடமென்று விசேஷமாய்ப் பதிவுபெறப்படாத எந்தக் கட்டடத்திலாவது சவந்தாட்டல் சுடுதலும் அப்படிச்செய்ய உதவி செய்தலும் நகரசங்கத்தின் உத்தரவின்றி யெவரும் செய்தல்கூடாது.

*சவக்காலை பதிவு செய்யப்பட்டு ஒரு காவல்காரன் வைக்கப்பட்டு அவனது பெயரும் பதிவுபெற வேண்டியது.*

2. யாதாமொரு சவக்காலைக்கு உரித்துடையவர் யெவரும் அச்சவக்காலையைப் பதிவுசெய்யும்படி நகரசங்கத்தலைவருக்கு எழுத்தில் விண்ணப்பம்செய்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்தில் அச்சவக்காலை காப்பவனது பெயரு மெழுதி அத்தோடு சர்வேயர் ஜெனறல் அல்லது முறைப்படி உத்தரவுச்சீட்டுப்பெற்ற சர்வேயர் சரியென்று கையொப்பமிட்ட ஓர் படமு மிணைத்திருத்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்தில் காவல்கார்ப்பவனெனப் பெயர் எழுதப்பட்டிருப்பவனும் அத்தொழிலைத் தான் கையேற்றதற்குச் சாட்சியாக அதில் கையொப்பம்வைத்திருத்தல் வேண்டும்.

*காவல்கார்ப்போனில்லாதிருந்தால் உத்தரவாதி யாரென்பது.*

3. மேற்படி காவல்கார்ப்பவன் பெயரெழுதப்பட்டிராதிருந்தாலும் அப்படி எழுதப்பட்டவன் மேற்சொல்லியபடி கையொப்பம் வையாதிருந்தாலும் மேற்படி சவக்காலையைப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்தவரே அச்சவக்காலைப் பாதுகார்ப்பவரென எண்ணப்படுவதுமல்லாமல் அதைப்பற்றிய பிரமாணங்களை மீறும் செய்கைகளுக்கு உத்தரவாதியாயு மிருப்பார்.

*காவல்கார்ப்பவனிறந்தால் புதிதாய்ப் பதிவுசெய்தல் வேண்டும்.*

4. மேற்படி சவக்காலை பாதுகாப்பவ னிறந்துவிட்டால் அல்லது வேறெந்த நியாயத்தினாலாவது தனது கடமைகளைச்செலுத்த சக்தியற்றவனாய்ப் போய்விட்டால், இவ்வதிகாரத்தில் 9 ம் பிரிவின்படி அச்சவக்காலையைப் பதிவுசெய்யும்படி புதிதாய் விண்ணப்பம்செய்தல் வேண்டும். நகரசங்கத்தலைவரிடமிருந்து அல்லது அவரில்லாதபோது நகரசுகவயித்தியரிடமிருந்து ஒரு விசேஷ உத்தரவுச்சீட்டுப் பெறாதபடி, அல்லது அதினருகில் இருக்கும் பொலிஸ் ஸ்டேசனின் உத்தியோகஸ்தருக்கு எழுத்து மூலமாய் அறிவிக்காதபடி மேற்படி விண்ணப்பஞ்செய்து பதிவுசெய்யுமுன் மேற்படி சவக்காலையில் சவஞ்சுடுதல் சவம்தாட்டல் செய்தல் கூடாது.

*சவக்காலை காப்பவனுக்கு இறந்ததென்பதைக் குறித்த சேட்டிவிக்கட் கொடுத்தல்.*

5. நியாயப்பிரமாணத்தின்படி கொடுக்கவேண்டிய இறந்ததென்பதைக் குறிக்குஞ் சேட்டிவிக்கேற்றுவது, அப்படிச் செட்டிவிக்கேற் பெறுவதற்காக விண்ணப்பம் முறைப்படி செய்யப்பட்டிருக்குமென்று தாம் நம்புவதாக ஒரு பொலீஸ இன்ஸபெக்தராவது நகரசங்க இன்ஸபெக்தராவது கொடுக்கும் ஒரு செட்டிவிக்கற்றுவது அச்சவக்காலை காப்பவனுக்குக் கொடுக்குமுன் யாதாமொரு சவத்தையாவது தாட்டல் சுடுதல் கூடாது.

*சவக்காலைக் காப்போன் அச்சவக்காலையில் சுடப்பட்ட அல்லது தாட்டப்பட்டவைகளைப் பதிவு செய்ய டாப்பு வைத்திருத்தல் முதலியவை.*

6. எச்சவக்காலையிலாவது தகனஞ்செய்யப்படும் தாட்கப்படும் பிரேதங்களைப் பதிவுசெய்வதற்காக அச்சவக்காலை காப்பவன் ஒரு றிஜிஸ்றரை வைத்திருப்பதும் அதில் ஒவ்வொரு கொப்பியினந்தோறும் நகரசங்கத்துக்கென்று றிஜிஸ்திரார் ஜெனறல் கந்தோருக் கொன்றுமாக அனுப்புவதும் மேற்படி காவல்காப்பவன் கடமை.

*சவக்காலையைச் சோதிக்க அதிகாரம் பெற்றவர்.*

7. நகரசங்கத்தலைவராவது, பொலீஸ இன்ஸபெக்றர் ஜெனறலாவது, றிஜிஸ்திரார் ஜெனறலாவது, அல்லது இவர்களி லொருவரிடம் எழுத்தில் அதிகாரம்பெற்ற வேறு யாராவது மேற்படி சவக்காலையை எந்த நேரத்திலாவது சோதனைபண்ணிபார்க்கவும், சவக்காலையைக் குறித்த சாதனங்கள் புஸதகங்களைப் பார்க்கவும் அதிகாரமுண்டு.

*நிலத்தைச் சுத்தமாய்க் காவல்காப்பவன் வைத்திருத்தல் வேண்டும்.*

8. நகரசங்கத்தலைவர் நேர்த்தியென்று சொல்லக்கூடிய விதமாய்ச் சுத்தமாயும் துப்பரவாயும் சவக்காலையை வைத்திருத்தல் சவக்காலை காப்பவனது கடமை.

*நகரசங்கத்தலைவர் யோக்கியமென்று சொல்லக் கூடியவ சலார் வாங்கல் வேண்டும்.*

9. ஒவ்வொரு சவக்காலையினதும் பாதுகாப்பவன் அவ்விடத்தில் பிரேதஞ் சுடுதல் தாட்டல் முதலியவற்றிக்கு வாங்க வேண்டுமென்று தான் நினைக்கிற சலாரடங்கிய ஓர் அட்டவணையை நகரசங்கத்தலைவர் சம்மதம் பெறும்படியா யெழுதியனுப்ப வேண்டும். அந்நகர சங்கத்தலைவ ரொத்துக்கொண்ட சலாரையே வாங்கலாம்.

*சவக்காலையைச் சுற்றி மதில் வைத்தல் வேண்டும்.*

10. நகரசங்கத்தலைவர் நல்லதென்று ஒத்துக்கொண்ட மதிலால் ஒவ்வொரு சவக்காலையும் சுற்றிவரக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். அந்த மதில்கள் எப்போதும் பழுதுபார்த்து வைத்திருத்தல் வேண்டியது.

*நகரசங்கத்தலைவர் சம்மதத்துடன் கட்டடவேலைகள் செய்தல்வேண்டும்.*

11. நகரசங்கத்தலைவரது சம்மதம் எழுத்தில் பெற்றுக்கொள்ளாதபடி சவக்காலைக்குள் மதில் அல்லது வேறு கட்டடங்கள் எவராவது கட்டுதல்கூடாது.

*வருஷாந்தக் கணக்கு முடித்துச் சுக்கிடுத்தாருக்குக் கொப்பி அனுப்புதல்.*

12. ஒவ்வொரு சவக்காலைக்கும் சொந்தக்காரரா யல்லது மனேஜர்மாராய் அல்லது காரியகாரராயிருப்போராவது, அல்லது தனியத் தன் பொறுப்பில் வைத்திருப்பவரெவராவது ஒவ்வொரு வருஷமும் 1899 ம் ஆண்டின் 9 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி அறவிடக்கூடிய அல்லது மேற்படி சவக்காலையைக் குறித்து வரி சலார் முதலியவையை அறவிடும்படி அவர்களுக்குத் தத்துவங்கொடுக்கும் வேறெந்தக் கட்டளைச்சட்டத்தின்படியாவது அறவிடப்பட்ட பணத்தின் பற்றுச்சீட்டுகள் முழுவதையுங் காட்டும் ஓர் கணக்கு முடித்தல் வேண்டும். அக்கணக்கு ஒவ்வொரு வருஷத்திலும் டிசம்பர்மாதம் 31 ந் தேதி வரைக்கும் முடிந்ததாயும் "வரவு" "செலவு" களைத் தெளிவாய்க் காட்டுவதாயும், பாக்கி இவ்வளவென்றும் காட்டி, மேற்படி சொந்தக்காரர் மனேஜர்மார் காரியகாரர் அல்லது சொந்தப் பொறுப்பில் வைத்திருப்பவரால் ஒத்துப்பார்க்கப்பட்டு சரியென்று கையொப்பம் வைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அப்படி முடித்த கணக்கில் சலார் வாங்காமல் ஒரு கொப்பி நகரசங்கச் சக்கிடுத்தாருக்கு அனுப்பவேண்டும். அப்படி அனுப்புதல் அக்கணக்கு முடித்த நாளிலிருந்து ஒரு மாசத்துள் அனுப்பவேண்டும்.

மேற்படி சவக்காலையை நல்லநிலையில் வைத்திருப்பதற்காக வேண்டிய வேலைகள் பழுது பார்த்தல் முதலியவை யெல்லாம் மேற்படி சொந்தக்காரர் மனேஜர்மார் முதலியவர்களைச் செய்துமுடிக்கும்படி எந்த நேரத்திலாவது எழுத்து மூலமாய் அறிவித்தல்கொடுத்துக் கேட்பதற்கு நகரசங்கத்தலைவருக்கு அதிகாரமுண்டு. அப்படிச் செய்யும்படி கேட்ட காலத்தில் அப்படிச் செய்யாதிருந்தால், நகரசங்கத்தலைவராவது அவரிடத்து அதிகாரம்பெற்ற வேறு உத்தியோகஸ்தராவது வேலைக்காரராவது அச்சவக்காலைக் குட்பிரவேசித்து வேண்டிய வேலைகளெல்லாவற்றையும் செய்யலாம். அப்படிச் செய்வதா லுண்டாக்கும் சிலவுகளெல்லாம் மேற்படி சொந்தக்காரர் முதலியோரே இறுத்தல்வேண்டும். மேற்படி சிலவானது 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கச் சட்டங்களின் 281 ம் 282 ம் பிரிவுகளிற் சொல்லிய விதம் இவ்வளவென்று நிர்சயித்து அறவிடப்படல் வேண்டும். மேற்படி கட்டளைச்சட்டத்தின்படி சிலவுக ளெப்படி அறவிடப்பட வேண்டுமோ அப்படி அறவிடுதல் வேண்டும்.

*பிரேதத்தை என்னசெய்தல் வேண்டும்.*

13. கொழும்பு, கண்டி, காலி நகரத்து நகரசங்க எல்லைக்குள் மரணிக்கும் ஒவ்வொருவரது பிரேதத்தையும் மேற்படி கொழும்பு, கண்டி, காலி நகரத்துள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பொதுச் சவக்காலையிலும், அல்லது முறையே பதிவுபெற்ற சவக்காலையிலுமே தகனஞ்செய்தல் புதைத்தல் வேண்டும்.

14. மேற்படி கொழும்பு, கண்டி, காலி நகரத்துள் இறக்கும் ஆட்களுடைய பிரேதத்தை மேற்படி கொழும்பு, கண்டி, காலி நகரத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பொதுச் சவக்காலையும், மேற்படி கொழும்பு, கண்டி, காலி நகரத்தில் முறைப்படி பதிவுபெற்ற சவக்காலையுமாகிய சவக்காலைகளல்லாத வேறு சவக்காலைகளில் தகனஞ்செய்யும் நோக்கமாய் அல்லது புதைக்கும் நோக்கமாய் மேற்படி நகரத்தின் எல்லைக்கப்பால் கொண்டுபோதல், கொண்டுபோகச்செய்தல், கொண்டுபோகவிடுதல் முதலிய செய்கைகள் எவருஞ் செய்யாதிருத்தல் வேண்டும். ஆனால் மேற்படி கொழும்பு, கண்டி, காலி நகரத்தின் நகரசங்கத்தலைவருக்காவது அல்லது அவரில்லாவிடத்து அச்சங்க சக்கிடுத்தாருக்காவது நல்ல போதிய நியாயங்காட்டி, மேற்படி நகரத்தின் எல்லைக்கப்பாலுள்ள சவக்காலையில் எவருடைய பிரேதத்தையாவது தகனஞ்செய்யும்படியாவது புதைக்கும்படியாவது உத்தரவுதரும்படி விண்ணப்பஞ்செய்து கேட்டால், நகரசங்கத்தலைவராவது சக்கிடுத்தாராவது அப்படிச் செய்வதற்கு எழுத்து மூலமாய்க் கட்டளைசெய்தல் கூடும், அக்கட்டளையில் எழுதப்பட்டிருக்கும் ஆளுடைய பிரேதத்தையே அப்படித் தகனஞ்செய்தல் புதைத்தல் கூடும். மேலும் அப்படி விண்ணப்பம் அந்நகரசங்கத் தலைவருக்காவது நகரசங்க சக்கிடுத்தாருக்காவது சுகமேற்பார்வை பார்ப்பவருக்காவது கொடுத்த ஆறு மணித்தியாலத்துள் அந்நகரசங்கத் தலைவராவது, சக்கிடுத்தாராவது மேற்படி கட்டளைச் செய்யத்தவறினால், அப்பிரேதத்தை மேற்படி நகரத்தப்பாலுள்ள எந்த இடத்துக்காவது கொண்டுபோய் தகனஞ்செய்தல் புதைத்தல் முதலியவை செய்ய அப்படி விண்ணப்பஞ்செய்த தென்பதும் அப்படிச் செய்த தெந்நேர மென்பதும் அப்படி விண்ணப்பஞ் செய்பவரே ஒப்பனைபண்ணல் வேண்டும்.

---

## 18 ம் அதிகாரம்.

### ஈட்டுக்குப் பணங்கொடுத்தவன் பதிவுசெய்தல்.

*ஈட்டுக்குப் பணம் கொடுத்தவன் பதிவுசெய்தல்.*

1. நகரசங்க எல்லைக்குள் இருக்கும் எந்த அசைவற்ற ஆதனத்தின் பேரிலாவது ஈட்டுக்குப் பணம் கொடுத்து ஈட்டுறுதிவைத்திருக்கிற எவராவது, அல்லது அவரது உரித்தாளிகள் அல்லது அவர்களிலொருவர், அல்லது அந்த ஈடுபிடித்தவ ளிறந்துவிட்டால் அவனது தத்துவக்காரன் நகரசங்கத்தின் கந்தோரில் மேற்படி ஈட்டைப் பதிவுசெய்வித்தல் கூடும். மேலும் ஈடுபிடித்திருக்குமொவ்வொருவரும் அவ் ஈட்டைப் பதிவுசெய்விக்க விரும்பினால், தானாக அல்லது தனது காரியம் பார்ப்பவன் மூலமாக தனது பெயர், விலாசம், ஈடுவைத்தவன் அல்லது ஈடுவைக்கப்பட்ட ஆஸ்தியின் சொந்தக்காரன் பெயர், விலாசம், ஆஸ்தியின் விவரம், மற்று மதைக்குறித்துக் காட்டக்கூடிய குறிப்பு முதலியவற்றை (யெழுதி) நகரசங்கத்துக்குக் கொடுத்தனுப்பவேண்டும். அதன் பின் நகரசங்கமானது இதற்கென்று வைக்கப்பட்டிருக்கும் ஒரு புஸ்தகத்தில் பதிவுசெய்ய விரும்புவரிடம் 50 சதம் சிலவு வாங்கிக்கொண்டு மேற்சொல்லிய விபரங்களெல்லாவற்றையும் பதிதல் வேண்டும்.

*பதிவுப்புஸ்தகம் யாராவது பார்க்கக் கூடியதாயிருத்தல் வேண்டும்.*

2. மேற்படி பதிவுசெய்யப்பட்ட புஸ்தகம் நகரசங்கம் வேலைபார்க்கும் மணித்தியாலங்களிலெல்லாம் பார்க்க விரும்புகிறவர் 25 சதம் சிலவுகொடுத்தவுடன் காட்டப்படவேண்டும்.

*நடுக்கட்டலைப்பற்றி ஈடுபிடித்திருப்போருக்கு நகரசங்கமறிவித்தல்.*

3. இந்த அதிகாரத்தின் 1 ம் கீழ்ப் பிரிவின்படி மேற்சொல்லிய பிரகாரம் பதிவுசெய்யப்பட்ட ஈட்டுக்காணியை 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கச் சட்டத்தின் 149 ம் பிரிவின்படி வெலியாத்து முகாந்திரமாக (யாராவது) பிடித்தால், மேற்சொல்லிய சட்டத்தின்படி அவ்வாஸ்தி விற்பனைக்காகப் பிரசித்தப்படுத்தமுன் குறைந்தபட்சம் பதினாலு நாட்களுக்கு முந்தி அந்த ஆஸ்தியின் ஈட்டை முன்பதிவுசெய்தவர்க்கு அதன் நடுக்கட்டலைப்பற்றியும் அந்நடுக்கட்டலுக்கு நியாயமாயுள்ள வரிமுதலியவற்றின் பாக்கித் தொகையையும் எழுத்திலறிவிப்பது நகரசங்கத்தார் கடமை.

*ஈடுபிடித்தவர் வரிப்பணப்பாக்கியைக் கொடுத்தல்.*

4. நடுக்கட்டப்பட்ட ஆஸ்தி விற்கப்படுமுன், அதன் சொந்தக்காரன் கொடுக்கவேண்டிய வரிப்பணப் பாக்கி முழுவதையும் அல்லது அந்நடுக்கட்டலுக்கு நியாயமாகிய அவ்வளவு பாக்கி வரிப்பணத்தையும் ஈடுபிடித்தவர் அல்லது அவரது உரித்தாளி அல்லது தத்துவக்காரன் நகரசங்கத்துக்குக் கொடுக்கலாம். அப்படி அவர் கொடுத்தவுடன் நடுக்கட்டப்பட்ட ஆஸ்தி விடப்பட வேண்டும்.

---

## 19 ம் அதிகாரம்.

### வழிகாட்டிகள்.

*வழிகாட்டி சட்டையும் பட்டயமுமணிதல்.*

1. 1887 ம் ஆண்டின் 15 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின்படி நியமிக்கப்பட்டு உத்தரவுச் சீட்டுப்பெற்ற ஒவ்வொரு வழிகாட்டியும், பச்சைமுகப்புள்ளதாயும் இருண்ட நீலநிறமுள்ளதாயுமான ஒரு சட்டையை அணிதல் வேண்டும். அத்தோடு மேற்படி சட்டத்தின் 5 ம் பிரிவிற் சொல்லியவண்ணம் சட்டைக்குமேல் இடது மார்பில் ஒரு பட்டயமு மணிதல் வேண்டும். மேற்சொல்லிய சட்டை நகரசங்கத்தால் கிரயமின்றிக் கொடுக்கப்படும். மேலும் உத்தரவுச்சீட்டிற் சொல்லிய கால முடிந்தவுடன் அல்லது புதுச்சட்டை கொடுபடும்போது நகரசங்கத்துக்குத் திருப்பிக் கொடுபட வேண்டும்.

*குறிக்கப்பட்ட மத்திய இடத்திலிருந்தே வழிகாட்டி புறப்படல்.*

2. நகரசங்கத்தலைவரது வெளியான அதிகாரப்பத்திரம் பெற்றாலன்றி (மற்றபடி யெல்லாம்) நகரசங்கத்தால் இதற்கென்று நியமிக்கப்பட்ட மத்திய ஸ்தானத்திலிருந் தல்லது வேறே ரிடத்தில் நின்றுகொண்டு, தான் ஒரு வழிகாட்டியென்று சொல்லித் தனது தொழிலைக் கூலிக்குச்செய்தல் அல்லது செய்வேனென்று சொல்லல் அல்லது எத்தனித்தல் முதலிய செய்கைகளை ஒரு வழிகாட்டியுஞ் செய்தல்கூடாது.

*பொக்கற் புஸ்தக மொன்று வைத்திருத்தல்.*

3. உத்தரவுச்சீட்டுப்பெற்றுக் கூலிக்கு அத்தொழிலைச்செய்யும் ஒவ்வொரு வழிகாட்டியும் ஒரு பொக்கெற் புஸ்தகம் கொண்டுதிரிதல் வேண்டும். அப்புஸ்தகத்தைக் காட்டும்படி அவனைக் கூலிக்குப் பிடித்தவராவது, அல்லது ஒரு பொலீஸ் உத்தியோகஸ்தனாவது, அல்லது நகரசங்க உத்தியோகதஸனாவது கேட்கும்போது அவனதைக் கொடுக்கவேண்டும். உத்தரவுச்சீட்டு பெறும்போது அப்புஸ்தகம் சங்கத்தால் மேற்படி வழிகாட்டிக்குக் கொடுபடும். மேலும் நகரசங்கத்தலைவர் கற்பித்த விதமாய்ப் பாவித்தல் வைத்திருத்தல் வேண்டும்.

*சலார்கள்.*

4. தன்னைக் கூலிக்குப்பிடிக்கும் யாரிடமாவதிருந்து பின்வருஞ் சலார்களை ஒரு வழிகாட்டி கேட்டு வாங்கலாம் :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| முதல் மணித்தியாலத்துக்கு அல்லது அதன் பகுதிக்கு | ... | 0 | 50 |
| முதல் மணித்தியாலத்துக்கு மேற்பட்ட ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் அலலது அதன் பகுதிக்கும் ... | ... | 0 | 25 |

## 20 ம அதிகாரம்.

### மதிப்புகள்.

*மதிப்புகள்.*

1. 50 ரூபாவுக்குமேல் செலவுபோகாத அவசர சிறிய வேலைகள் தவிர மற்றவேலைகளைப் பொருத்திக் கொடுத்துச் செய்விக்கவாவது, அல்லது நகரசங்க உத்தியோகஸதரே செய்தற்கென்றாவது இருக்கிற பகிரங்க (கட்டட) வேலைகளுக்காகத் தேள்வையான பணம் முன்னமே ஆயத்தப்படுத்தப்பட்டு சங்கத்தார் முன்பதாகத் தெரிவிக்கப்பட்ட பலவகைப்பட்ட வெவ்வேறான மதிப்புகளைக் கொண்டு அம்மதிப்புக்குத்தக்கதாய்க் கொடுபடவேண்டும். மேற்சொல்லிய மதிப்புகளொவ்வொன்றும் அறியக்கூடிய வரையில் இன்னகாரியத்துக்கு இவ்வளவு தொகையென்று விபரங்களடங்கியிருத்தலோடு நகரசங்கத்துக்கு முன்பாகக் கொண்டுவரப்படுமுன் அச்சங்கத்தின் வருமானத்துக்கும் வரிக்கும் நிலையாய்க் காரியம்நடத்தும் கொம்மிற்றியாரது யோசனைக்காக அவர்களிடம் கொடுக்கப்படல் வேண்டும்.

## 21 ம் அதிகாரம்.

### வேலைகள்செய்து நிறைவேற்றல்.

*நகரசங்கத்தலைவரது அதிகாரம்பெற்றவர் தெரு வீதி முதலியவற்றைப் பழுதுபார்த்தற் பொருட்டு காணிக்குட் புகுதல்*

1. நகரசங்க எல்லைக்குள்ளிருக்கும் அல்லது அப்படி இருக்கக்கூடியதான தெருவுக்குப் பக்கத்தில் அல்லது சமீபத்திலுள்ள எந்த நிலத்துக்குள்ளாவது எந்த நியாயமான வேளையிலும் தேள்வையான, சரியான, கூலியாட்கள், வேலைக்காரர், வண்டி, மிருகம், வேறும் சாமான்கள் முதலியவற்றோடு போவதற்கு நகரசங்கத்தலைவரிடமிருந்து எழுத்தில் தத்துவம்பெற்ற எவருக்கு மதிகாரமுண்டு. அதுவுமன்றியும் அந்நிலத்தில் அப்படிப்பட்ட தெருவைப்போடவாவது, அழக்கவாவது, செய்யவாவது, திறக்கவாவது, மாற்றவாவது, திருப்பவாவது, பழுதுபார்க்கவாவது, சுத்திசெய்யவாவது, திருத்தவாவது, அடைக்கவாவது, அல்லது அத்தெருவோடு சேர்ந்த பாலம், அகல், வேலி, மதவு, வரம்பு, கிடங்கு, குளாய், தாமான் அல்லது மற்றக் கருவிகள் முதலியவற்றைக் கட்டவாவது, தோண்டவாவது, பழுதுபார்க்கவாவது, சுத்திசெய்யவாவது, திருத்தவாவது, அல்லது 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கக் கட்டளைச்சட்டத்திற் சொல்லப்பட்ட காரியங்கள் செய்கைகள் முதலியவற்றைச் செய்யவாவது அவர்களுக்குத் தத்துவமுண்டு.

*அங்குள்ள சாமான்களை யெடுத்தல்.*

அன்றியும், மேற்சொல்லிய பிரகாரம் தத்துவம்பெற்ற எவராவது மேற்சொல்லிய பிரகாரம் தமது கூலிக்காரர் வேலைக்காரர் முதலியவரோடு நியாயமான எந்த வேலையிலும் தேள்வையான வண்டி, மிருகம், மற்றும் சாமான்களோடும் அத்தெருவை யல்லது போடப்போகின்ற தெருவை, போடுவதற்காவது, அலப்பதற்காவது, செய்து கட்டுவதற்காவது, திரப்பதற்காவது, மாட்டுவதற்காவது, திருப்புவதற்காவது, பழுதுபார்க்கவாவது, சுத்திசெய்யவாவது, திருத்தவாவது, அடைக்கவாவது, அல்லது அத்தெருவோடு சேர்ந்த பாலம், வேலி, மதவு, வரம்பு, குழி, குளாய், தாமான் அல்லது மற்ற கருவிகள் முதலியவற்றைக் கட்டவாவது, தோண்டவாவது, பழுதுபார்க்கவாவது, சுத்திசெய்யவாவது, அல்லது திருத்தவாவது, அல்லது அத்தெருவைப்பற்றிய வேலைசெய்துக்கொண்டிருக்கும், நகரசங்க உத்தியோகஸதரது தேள்வைக்கு அல்லது அவருக்குக் கீழ் வேலைபார்க்கும் கூலிக்காரர் வேலைக்காரர் வண்டி மிருகம் முதலியவைகளினது தேள்வைக்காகவேண்டிய கட்டடம் கொட்டகை முதலியவைகளைப் பழுதுபார்த்தலுக்காகவாவது அந்நிலத்திலுள்ள தண்ணீர், மரம், பூண்டுகள், கல்லு, மண் அல்லது வேறு சாமான்களைத் தோண்டி வெட்டி யெடுத்து அங்கிருந்துந் தூக்கிக்கொண்டு குற்றவாளியென்று காணப்பட்டால் இன்னொருவரது நிலத்துக்கூடாகக் கொண்டுபோகவும் அதிகாரமுண்டு. ஆனால், வேறு அடுத்தாப்போலிருக்கும் பாழான அல்லது பொதுவான அல்லது தடாமல் விடப்பட்ட நிலங்களில் வசதியாய்ப் போதியளவு சாமான்களையெடுத்துக்கொள்ள இயலாத பட்சத்திலன்றி சொந்தக்காரனது உத்தரவின்றி யாதாமொரு வீட்டின் கொல்லை, வழி, புல்தோட்டம், அடைப்பு, வாழைத்தோட்டம் வயல் முதலியவற்றிலிருந்தும், மேற்சொல்லிய சாமான்களை வெட்டி யெடுத்துக்கொண்டுபோகுதல் கூடாது. மேலும், மேற்சொல்லிய பாழ்நிலம், முதலியவைகளில் சொல்லப்பட்ட சாமான்களில்லாதிருந்தால் வசதியான இடத்தில் தத்துவம்பெற்றவர் எடுத்துக்கொள்ளலாம், ஆனால் மேற்சொல்லிய சாமான்களுக்காகவும், அவைகளை எடுத்துக்கொண்டுபோவதால் வரும் நஷ்டத்துக்காகவும், பதிலாக நியாயமான தொகைபணம் அவைகளின் சொந்தக்காரனுக்குக் கொடுபட வேண்டும். அதுவுமன்றி அச்சொந்தக்காரன் அச்சாமான்களை யெடுத்தால் உண்டாக்கிய குழி முதலியவற்றை மனுஷருக்காவது மிருகங்களுக்காவது மோசம் நேரிடாதபடி சுற்றியடைத்தல் வேண்டும்.

*அடுத்த நிலங்களில் குப்பைபோடுதல்.*

2. யாதாமொரு றேட்டை அல்லது கட்டடத்தைப் புதுக்க உண்டாக்க எண்ணி நிலயங் குறிக்கும்போதும், அளக்கும்போதும், செய்யும்போதும், வேலைசெய்யும்போதும், திறக்கும்போதும், மாட்டும்போதும், திரும்பும்போதும், பழுதுபார்க்கும்போதும், வெட்டித் துப்பரவு செய்யும்போதும், அல்லது முன்னமே இருக்கும் றேட்டுக்கட்டடங்களில் மேற்சொல்லிய வேலைகள் செய்யும்போதும், நிலங்களைத்தோண்டும்போதும் பழுபார்த்தல் வேலைசெய்யும்போதும் யாதாமொரு பாலம், வேலி, வாய்க்கால் வரம்பு, குழி, குலாய், தாமான் அல்லது மற்றக்கருவிகள் முதலியவை அவ்வீதி அல்லது கட்டடத்தோடிருந்தால் அவைகளைத் திருத்தும்போதும், அல்லது அவ்வீதி கட்டடத்தைச்சேர்ந்த எவ்வித வேலையையாவது செய்யும்போதும் அவ்வேலை செய்யுமிடத்துக்கு அருகாமையிலுள்ள நிலங்களில் அவ்வேலைசெய்யுமிடத்திலிருந்து அகற்ற வேண்டிய மண் குப்பை முதலியவற்றைப் போடுவதற்கு மேற்படி தத்துவம்பெற்றவர்களுக்கு நியாயப்பிரமாண மிடங்கொடுக்கும். ஆனால் அப்படிப் போடப்படும் மண் குப்பை முதலிய பதார்த்தங்களெல்லாம் கூடியளவு சீக்கிரமாய் எடுத்துப்போடுதல் வேண்டும்.

*சிறிதுகாலமாத்திரம்வேண்டியறேட்கேள் செய்தல்.*

3. மேற்படி வேலைகளைச் செய்துமுடிப்பதற்காக மேற்படி வீதி கட்டடங்களுக் கருகிலுள்ள நிலங்களில் மேற்படி தத்துவம்பெற்ற எவரும் ஓர் றேட்டுப் போட்டுக்கொள்ளலாம். ஆனால், கட்டடங்களிலிருக்கும் நிலத்திலாவது அடைத்த தோட்டங்களுக்கூடாகவாவது போகும்படி மேற்படி றேட்டைப் போடலாகாது.

*மரங்களை வெட்டல்.*

4. மேற்படி நிலங்களிலுள்ள அல்லது அந்நிலங்களுக்கிட்ட நிற்கும் மரங்கள், செடிகள், பற்றைகள், முதலியவைகளையும் நகரசங்க எல்லைக்குளுள்ள எந்த வீதியின் பக்கத்திலாவது மேலாவது வளர்ந்து படர்ந்திருக்கும் இலைகள், கொப்புகள், வேர்கள், முதலியவைகளையும் வெட்டியெடுத்து அந்நிலங்களில் போடவும், அந்நிலங்களில் வேறு தடைகள் வைக்கவும், மேற்படி நோக்கமாக மேற்படி நிலங்களில் பிரவேசித்தலும், அம்மரங்கள், செடிகள், பற்றைகள், இலைகள், கொப்புகள், வேர்கள் முதலியவைகளை வெட்டித்தரிக்க, அகற்றவேண்டிய ஆட்கள், மிருகங்கள், கருவிகள் முதலியவைகளைக் கொண்டுபோகவும் மேற்படி அதிகாரம் பெற்றவர்களுக்குத் தத்துவம் உண்டு.

*வேலிபோடல்.*

5. மேற்படி அதிகாரம்பெற்ற எவருக்காவது அவசரமென்று தோற்றும்போது ஒரு தெருவின் பக்கத்தில் வேலிகள், குழிகள், வாய்க்கால்கள், வரம்புகள், முதலியவற்றை உண்டுபண்ணுதல் அவருக்கு நியாயமுண்டு. மேலும் அப்படிப் போட்டப்பட்ட வேலிகள் முதலியவற்றை நல்ல நிலையிலிருக்கும்படி செய்தல் அவைகளுக்கருகாமையிலிருக்கும் நிலங்களுக்குச் சொந்தக்காரராயிருப்பவரது கடமை.

*வெட்டப்பட்ட அகழ் முதலியவற்றைப் பாதுகாத்தலும் பாலம் போடுதலும்.*

6. நகரசங்கத்தலைவரிடம் எழுத்திலதிகாரம்பெற்றிருக்கு மெவராவது சகல குழிகள், பீலிகள், வாய்க்கால்கள், நீரோட்டங்களையும் முண்டுபண்ணவும் அள்ளிவெளியாக்கவும், சுத்தப்படுத்தவும், திறந்துவைக்கவும் யாதாமொரு வீதி றோட்டு வாய்க்கால் முதலியவையைப் பாதுகாப்பதற்காவது பழுதுவராமலிருக்கச்செய்வதற்காவது திருத்துவதற்காவது பழுதுபார்ப்பதற்காவது கட்டுவதற்காவது அவசரமென்று காணப்படும் பலகைகள், பாலங்கள், குளாய்கள், இரும்பு கிராதிகள் முதலியவைகளை மேற்படி வீதி றோட்டு வழிகளுக்கு அல்லது புதிதாய்த் திறக்கப்போகிற வீதி றோட்டு வாய்க்கால் முதலியவற்றிற்குக் கிட்டவிருக்கும் அந்நிலங்களுக்குக் கூடாகவும் வைக்கவும் உண்டுபண்ணவும் அதிகாரமுண்டு.

*றோட்டில் கல் முதலியவை போடல்.*

7. எந்த றோட்டிலாவது வீதியிலாவது எவ்விதப்பட்ட கல்லுக்கும்பி, கிறேவல், மரக்குத்தி, அல்லது வேறெந்தச் சாமானாவது வைக்கவும் மேற்படி வீதி றோட்டுகள் பழுதுபார்த்துமுடியுங் காலம்வரையும் அங்கேயே அச்சாமான்களை வைத்திருக்கவிடவும், பழுதுபார்த்தல் வேலை துவங்க முன்னும் அவ்வேலைமுடிந்த பின்னும் அப்படிப் பழுதுபார்த்தும், வேலையை இலகுவில் முடிக்கவாவது அப்படிப் புதிதாய்ப் பழுதுபார்க்கப்பட்ட றோட்டு முதலியவைகளுக்குச் சேதம்வராமல் தடுக்கவாவது வேண்டியிருக்கும் காலம்வரையும் மேற்படி அவ்விடத்தில் அச்சாமான்களைவிட்டு வைத்திருக்கவும் மேற்படி அதிகாரம்பெற்ற எவர்களுக்கும் தத்துவமுண்டு. ஆனால் அப்படி அதிகாரம்பெற்றவர்கள் அவ்றோட்டில் போக்குவரவுசெய்யுஞ் ஜனங்களுக்கு அபாயந் தீங்கு நேரிடாதபடி வேண்டிய எச்சரிப்புகளெல்லாஞ் செய்தல் வேண்டும்.

*றோட்டு முதலியவைகளில் வேலை நடக்கும்போது வைக்கப்பட்டிருக்கும் மரங்கள் வேலிகள் எடுத்தல் திருடல் கூடாது.*

8. றோட்டுகளில் பழுதுபார்த்தல் வேலைநடக்கும்போது, அல்லது நகரசங்கத்தவர் வேறு வேலைகள் நடத்திவிக்கும்போது அந்த றோட்டுகளில் போக்குவரவுசெய்யுஞ் ஜனங்களுக்குத் தீங்கு வராதபடிக்கும் அவ்வீதிகளில் கரத்தை, மாடு, குதிரை, முதலியவைகள் செல்லாமல் தடுப்பதற்காகவும் வைக்கப்பட்டிருக்கும் வேலி, குறுக்குமரம், சங்கிலி, குத்தி, முதலியவைகளை எடுத்துப்போதலும், மாற்றிவைத்தலும், தள்ளிவிழுத்திவிடுதலும், அல்லது அவ்விடத்தில் வைக்கப்பட்டிருக்கும் விளக்குகளை அவித்தலும் அகற்றிக்கொண்டுபோதலுமாகிய செய்கைகள் எவரும் செய்யாதிருத்தல் வேண்டும்.

*நஷ்டங்கொடுத்தல்.*

9. இவ்வதிகாரத்தின் கீழ்ப்பிரமாணங்களின்படி நகரசங்கத்தலைவரிடமிருந்து அதிகாரம் பெற்றவராவது மேற்பிரமாணங்களிற் சொல்லப்பட்டிருக்கும் எதையும் செய்யும்போது ஆருக்காவது நஷ்டம்வருவித்தால், அந்நஷ்டத்துக்கு பதில்பணம் நகரசங்கமானது இறுத்தல்வேண்டும். ஆனால் அந்நஷ்டம் வாங்கவிரும்புபவர் அந்நஷ்டத்தை வருவித்த செய்கைகள் செய்யப்பட்ட மூன்று மாசத்துள் தமக்கு அந்நஷ்டத்தைக் கேட்க எப்படி உருத்துவந்ததென்றும், மற்றும் நகரசங்கத்தலைவர் வேண்டுமென்று சொல்லுகிற விபரங்களை காட்டியும் ஓர் விண்ணப்பம் நகரசங்கத்தலைவருக்குச் செய்தல் வேண்டும். மேற்படி குறித்த காலத்துள் விண்ணப்பஞ் செய்யாதவருக்கு அந்நஷ்டத்தை தரும்படி கேட்க யாதொரு உருத்துமில்லாமல் போய்விடும். 1871 ம் ஆண்டின் 21 ம் இலக்க கட்டளைச்சட்டத்திற் சொல்லியிருக்கும் எப்பிரிவாகுதல் இதைத் காக்க மாட்டாது. நஷ்டம் இவ்வளவு கொடுப்பதென்பது இணங்கிக்கொள்ளக்கூடாதிருந்தால், மத்திறசக்காரர் தீர்த்தல் வேண்டும். மத்திறசக்காரர் இருவர் இருத்தல் வேண்டும். ஒருவரை நகரசங்கத்தலைவரும் மற்றவரை நஷ்டமடைந்தவரும் தெரிவுசெய்தல் வேண்டும். அம்மத்திறசக்காரர் மேற்படி நஷ்டத்தைப் பேசுமுன் அவர்களிருவருடைய கருத்தையும் கேட்டு தீர்ப்புச் செய்ய அவர்கள் ஒரு நடுவனை நியமித்தல் வேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட மத்திறசக்காரர் அல்லது நடுவன் தீர்த்த தீர்ப்பே கடைசி தீர்ப்பாகும்.

---

## 22 ம் அதிகாரம்.

### வாய்க்கால் கட்டடங்கள் கட்டுதல்.

*வீடுடையவர் றோட்டுகளின் பக்கத்திலுள்ள வாய்க்கால்களுக்கு மேல்பாலங் கட்டல்.*

1. எவ்வீதியின் பக்கத்திலுள்ள வீடு நிலங்களில் வசிப்பவராவது அல்லது அவைகளின் சொந்தக்காரனாவது அவ்வீதிக்குப் பக்கத்திலோவார் அழுக்கு நீர்வாய்க்காலுண்டுபண்ணப்பட்டிருக்குமேயாகில், அவ்வாய்க்காலுக்குமேல் பாலம் மேடை முதலிய எக்கட்டடத்தையாவது நகரசங்கத்தலைவரது உத்தரவு எழுத்தில் பெறுதபடி கட்டுதல் கூடாது. அப்படி உத்தரவுபெற்று கட்டும்போது நகரசங்கத்தலைவர் அவ்வுத்தரவு கொடுக்கும்போது கற்பித்த சங்கேதங்களுக்கு மாறுபாடில்லாமல் கட்டல் வேண்டும். மேற்படி வசிப்பவனாவது சொந்தக்காரனாவது அப்பாலம் மேடை முதலிய கட்டடங்கள் நகரசங்கத்தலைவர் போதுமானதென்று சொல்லக்கூடிய நல்ல நிலையில் எப்போதும் வைத்திருத்தல் வேண்டும். மேலும் மேற்சொல்லிய விதமாய் அழுக்கு நீர் வாய்க்காலுக் கருகில் இருக்கும் வீட்டுக்கு அல்லது நிலத்துக்கு மேற்சொல்லிய விபரமுடைய பாலம் மேடை முதலியவை யின்றி, அல்லது மேற்சொல்லிய பிரகாரம் கட்டுப்படாத பாலம் மேடை முதலியவை மூலமாய்ப் போக்குவரவுச்செய்வதாக நகரசங்கத்தலைவர் அறியவந்தால், உடனே அவற்றை (அப்பாலம் முதலியவற்றைக்) கட்டும்படி அல்லது போடும்படி அல்லது மாற்றும்படி அவ்வீடு நிலம் முதலியவையின் சொந்தக்காரனுக்கு அல்லது வசிப்பவருக்கு அறிவித்தல் கொடுத்தலும், அல்லது அப்பாலம் முதலியவற்றை நல்ல நிலையில் வைத்திருக்கத்தவறினால், வசிப்பவனுக்கு அல்லது சொந்தக்காரனுக்கு அவைகளைப் பழுதுபார்க்கும்படி அறிவித்தல் கொடுத்தலும் நகரசங்கத்தலைவர் செய்வது நியாயமாயிருக்கும். மேலும் மேற்சொல்லிய விதமாய் அறிவித்தல் கொடுக்கப்பட்ட முப்பது நாளைக்குள் அல்லது அவசரமானால் பதிநாலு நாற்களுக்குள் அவ்வறிவித்தலிற் சொல்லியவைகளைச்செய்ய அச்சொந்தக்காரனாவது அல்லது அவ்வீடு நிலமிவைகளில் வசிப்பவனாவது தவறினால், அவர்களை குற்றத்திற்குச் சாட்டப்பட்டு நகரசங்கத்தலைவர் அவ்வேலையைச் செய்விக்கலாம், அப்படிச் செய்விப்பதால் வரும் செலவு முதலியவைகள் அச்சொந்தக்காரனால் அல்லது வசிப்பவனால் இறுபடவேண்டும்.

*வீட்டுக் கொல்லை வழி முதலியவற்றிற்கு வாய்க்கால் வைக்கும்படி நகரசங்கத்தலைவர் கற்பித்தல்.*

2. அவசரமென்று காணும்பொழுது ஒரு கட்டடத்திற் கருகாமையிலுள்ள நிலம் கொல்லை முதலியவற்றின் அல்லது கட்டடங்களுக்கு அல்லது நிறையான கட்டடங்களுக்கிடையிலுள்ள முடுக்கு வீதி பாதை முதலியவற்றின் சொந்தக்காரனுக்கு அக்கொல்லை, நிலம், முடுக்கு, வீதி, பாதை, முதலியவற்றிற்குத் தாம் கற்பிக்கும் பிரகாரம் கட்டடங்களிலிருந்து 15 அடிக்குமேற்படாமல தலைவிசைபோடும்படிக்கும் அதுவுமல்லாமல் அவைகளினின்றும் தண்ணீர் ஓடிப்போய்விடும்

படி அவைகளுக்கு அதிகம் சமீபத்திலிருக்கும் நகரசங்க வாய்க்கால் மதவோடு சேர்ந்த வாய்க்கால் குளாய் முதலியவற்றை உண்டுபண்ணும்படிக்கும் எழுத்திலறிவித்தல் கொடுப்பது நகரசங்கத்தலைவருக்கு நியாயமாகும். மேலும் அப்படி உண்டுபண்ணப்படவேண்டிய வாய்க்கால்கள் அல்லது குளாய்கள் நகரசங்கத்தலைவர் கற்பித்த சாமான்களாற் செய்யப்பட்டவையாயும், அவர் கற்பித்த அளவுள்ளவையாயும், மட்டமுள்ளவையாயும், தண்ணீர் வீழுகையுள்ளவையாயும், மேலும் அவரால் குறிக்கப்பட்ட விடத்தில் நகரசங்க வாய்க்காலோடு சேருகிறவையாயுமிருத்தல் வேண்டும். ஆனால் அக்கொல்லை, நிலம், முடுக்கு, இவைகளின் சொந்தக்காரன் கேட்கும்போது அவ்வாய்க்கால் குளாய் முதலியவை போடுதற்கு வேண்டிய சாமான்களை அவனுக்கு வாங்கிய விலைக்குக்கொடுத்தல நகரசங்கத்தலைவர் கடமை, குறிக்கப்பட்ட நேரத்துள் அவ்வறிவித்தலிற் கேட்டுக்கொண்டதைச்செய்ய சொந்தக்காரன் தவறினால், நகரசங்கத்தலைவராவது அவரால் அதிகாரம்பெற்ற உத்தியோகஸ்தர் வேலைக்காரராவது அப்படிப்பட்ட விடங்களிற் பிரவேசித்து செய்யவேண்டியவைகளைச் செய்விக்கலாம். அவ்வேலைகளால் வருஞ்செலவு சொந்தக்காரனால் இறுக்கப்படவேண்டும். ஆனால் அருகாமையிலுள்ள நகரசங்க வாய்க்கால் மதவு மேற்சொல்லப்பட்ட கொல்லை, நிலம், முடுக்கு, இவைகளிலிருந்து நூறு அடிக்கு மேலுள்ளதாயிருந்தால் சங்கத்தின் விருப்பமில்லாமல் மேற்சொல்லப்பட்ட அறிவித்தல் கொடுக்கப்படமாட்டாது.

பிரசித்தமற்ற மதவுகளுக்குட் காற்று போகவரவிடுதல்.

3. பிரசித்த மற்றவாய்க்கால் மதவு முதலியவைகளின் சொந்தக்காரனுக்கு எழுத்துமூலமாயறிவித்தல் கொடுத்து அம்மதவு வாய்க்கால் முதலியவைகளுக்குள் காற்று இலகுவிற் போய்வர வசதியாய் நகரசங்கத்தலைவர் தேவையென்று நினைக்கிற குளாய் முதலியவற்றை அவர் நியாயமாய் கொடுக்கப்படும் காலத்துக்குள் போடும்படி கேட்டல் அந்நகரசங்கத்தலைவருக்கு நியாயமாகும், அப்படிப் போடப்படும் காற்றுக்குளாய்கள் நகரசங்கத்தலைவர் கற்பிக்கிற அளவுடையதும் சாமான்களால் செய்யப்பட்டதும் மேற்படி சங்கத்தலைவர் கற்பித்த அளவு உயரத்துக்குக் கொண்டுபோய் விடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும் குறிக்கப்பட்ட நேரத்துக்குள் அவ்வறிவித்தலில் சொல்லப்பட்டவைகளை மேற்சொல்லிய சொந்தக்காரன் செய்யத்தவறினால், அவனை குற்றவாளியென்று சாட்டப்பட்டு நகரசங்கத்தலைவராவது அல்லது அவரால் தத்துவம் கொடுபட்ட ஓர் உத்தியோகஸ்தர் அல்லது வேலைக்காரன் மேற்சொல்லிய இடத்துக்குப்போய்த் தேவையான வேலைகளைச் செய்விக்கலாம். சொந்தக்காரனே அதனால் வரும் செலவுகளை இறுத்தல் வேண்டும்.

அழுக்குநீர் போகும் பிரசித்த வாய்க்காலுக்கும், நீரோட்டப்பண்ணவேண்டிய நிலத்துக்குமிடையிலுள்ள நிலத்தில் கான் முதலியவை கட்டுதல்.

4. 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கச் சட்டத்தின் 195 ம் பிரிவின்படி யாதாமொரு கானாவது, குளாயாவது, வேறொரு கானோடு தொடுத்து மூடிக் கட்டவேண்டியது அவசரமென்று கண்டாலும், அப்படிக் கட்டவேண்டிய கான் இடையிலுள்ள வேறு கட்டடம் நிலங்களுக்கூடாகப் போகவேண்டியிருந்தாலும், நகரசங்கத்தலைவராவது அல்லது அவரிடமிருந்து இதுக்கென்று எழுத்திலதிகாரம்பெற்ற நகரசங்க உத்தியோகஸ்தராவது மேற்படி இடையிலுள்ள நிலங்கள் வீடுகளின் சொந்தக்காரருக்கு அல்லது வசிப்பவர்களுக்கு இரண்டு நாளைக்குமுன் அறிவித்தல் கொடுத்து மேற்படி நிலம் வீடுகளிற் பிரவேசிக்கவும், கான் முதலியவை கட்டவும் அதிகாரமுண்டு. ஆனால் மேற்சொல்லிய கான் குளாய் முதலியவைகளை நகரசங்கத்தலைவர் எழுத்தினால் தன் விருப்பத்தை கொடாதபடி எந்தச் சொந்தக்காரன் அல்லது குடியிருப்பவன் திருத்தவும் அதை யெடுத்துப்போடவும் அல்லது அதைத் திரும்பக் கட்டவும் கூடாது.

5. 1887 ம், 1890 ம், 1896 ம் ஆண்டுகளின் நகரசங்கக் கட்டளைச்சட்டத்தின் 195 ம் பிரிவின் பிரகாரம் யாதாமொரு வாய்க்காலாவது குளாயாவது வேறொரு வாய்க்காலோடு தொடுத்து மூடிக் கட்டும்படி அறிவித்தல் பெற்றவர்கள் அப்படிக்கட்டவேண்டிய வாய்க்கால் இடையிலுள்ள வேறு கட்டடம் நிலங்களுக்கூடாகப் போகவேண்டியிருக்கிறபடியால், அவர்கள் நிட்சயப்பத்திரம் கொடுக்கும்படி நகரசங்கத்தலைவருக்கு யெழுதிக் கேட்கலாம் அந் நகரசங்கத்தலைவர் அப்படிச்செய்ய தகுமென்று கண்டால், அப்படிக் கேட்பவருக்கு அவர் யெழுத்தினால் நிட்சயப்பத்திரங் கொடுப்பார், அப்படி நிட்சயப்பத்திரம் பெற்றவுடன் இடையிலுள்ள நிலம் கட்டடங்களின் சொந்தக்காரருக்கு நியாயமான கூலியைக் கொடுத்து மேற்படி குளாய் அல்லது வாய்க்கால் கட்டுகிறதற்குத் தேவையான கூலியாட்கள், வேலைக்காரர், வண்டிகள், மிருகங்கள் மற்றும் தேவையானவைகளுடன் உட்சென்று மேற்படி வேலையைச் செய்து முடிக்க நிட்சயப்பத்திரம் பெற்றவருக்குத் தத்துவமுண்டு. ஆனால் அவ்வேலை செய்கிறதற்கு இரண்டு நாளைக்குமுன் அச்சொந்தக்காரனுக்கு அறிவித்தல் செய்யவேண்டியது. மேற்படி அச்சொந்தக்காரனுக்குக் கொடுக்கவேண்டிய பணத்தில் ஏதாகிலும் தர்க்கமுண்டுபடுமாகில், அதை இரண்டு மத்தியஸ்தர்களால் தீர்க்கப்படல் வேண்டும். அவ்விருவரில் ஒருவரை மேற்சொல்லப்பட்டவரும், மற்றவரை அந்நிலத்தின் சொந்தக்காரனும் தெரிவுசெய்தல் வேண்டும், அம்மத்தியஸ்தர்கள் மேற்படி சங்கதியைப் பேசுமுன் அவர்களிருவருடைய கருத்தையும் கேட்டுத் தீர்ப்புச்செய்ய ஒரு நடுவனை நியமித்தல் வேண்டும். அப்படி நியமிக்கப்பட்ட நடுவன் தீர்க்கிற தீர்ப்பே கடைசித்தீர்ப்பாகும். மேற்படி அறிவித்தல்பெற்ற பத்து நாளைக்குள் மேற்படி நிலத்தின் சொந்தக்காரர் மத்தியஸ்தரைத் தெரிவுசெய்யத்தவறினால் மேற்சொல்லப்பட்டவரால் தெரிவுசெய்யப்பட்ட மத்தியஸ்தர் தீர்க்கிற தீர்ப்பின் பிரகாரமே மேற்படி கூலி கொடுக்கப்படும்.

புதுவீடு கட்டுபவர் கட்டிமுடிந்தவுடன் அறிவித்தல் கொடுத்தல்.

6. எவராவது எக்கட்டடத்தையும் கட்டும்போதாவது, மாற்றிக் கட்டும்போதாவது, பெரிப்பித்துக் கட்டும்போதாவது, புதுப்பிக்கும்போதாவது, பழுதுபார்க்கும்போதாவது, அல்லது அக்கட்டடத்தின் முட்பக்கத்தை வேறு விதமாய்க் கட்டும்போதாவது, அல்லது எவராவது யாதாமொரு வாய்க்கால், பாலம், மேடை, கக்கூஸ் குழி முதலியவை கட்டும்போதாவது அல்லது எவராவது நகரசங்கத்தலைவர் நியாயப்பிரமாணம் தமக் கதிகாரம் கொடுக்கும்போது அவ்வதிகாரத்தைக்கொண்டு யாதாமொரு கட்டடம், வாய்க்கால், கக்கூஸ் குழி முதலியவைகளைக் கட்டும்படி கட்டளைச்செய்ய அக்கட்டளைக் கமைந்து மேற்படி வாய்க்கால் முதலியவைகளைக் கட்டும்போதாவது, மாற்றும்போதாவது, பழுதுபார்க்கும்போதாவது, மேற்படி வேலைகள் முடிந்த பதினாலு நாளைக்குள் நகரசங்கத்தலைவருக்கு அவ்வேலைகள் முடிந்தனவென்று எழுத்தில் அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்.

வீடுகள் கட்டவேண்டிய மாதிரி.

7. பின்வரும் மாதிரியாயல்லாமல் வேறு மாதிரியாக எவராவது மனுஷர் வசிக்கும் நோக்கமாய் வீடு குடிசைகளைக் கட்டுதலும், அவ்வேறு விதமாய்க் கட்டப்பட்ட வீடு குடிசைகளை மனுஷர் வசிக்க இடங்கொடுத்தலும் ஆகாவாம்.

மேற்படி மாதிரிகளாவன :—

சுவருக்குப் பதிலாகக் கிடுகுத்தட்டி ஒருபோதும் வையாதிருத்தல் வேண்டும். சுவர்களெல்லாம் களிமண் தடிகள் முதலிய தகுந்த சாமான்கள் போட்டுச் சாந்துபூசி வெள்ளையடிக்கத்தக்க மாதிரியாய்க் கட்டல் வேண்டும்.

மனுஷர் வாசஞ்செய்யும் நோக்கமாக வைத்திருக்கப்படும் ஒவ்வொரு அறைக்கும் குறைந்த பட்சம் 6 அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஓர் கதவும், 3 அடி நீளமும் 2 அடி அகலமுமுள்ள ஒரு சன்னலு மிருத்தல் வேண்டும்.

நிலத்திலிருந்து ஒவ்வொரு வீட்டின் தளமும் ஒரு அடிக்குக் குறையாத உயரமுள்ளதா யெப்போது மிருத்தல்வேண்டும். ஆனால் சிலவிடங்களில் அவ்வுயரத்துக்கு மேற்பட தளங்க ளுயர்ந்திருக்கவேண்டுமென்று நகரசங்கமானது நினைத்தால், அப்படி உயர்த்திக் கட்டும்படி கட்டளை செய்தல் வேண்டும். இரண்டு நிரைவீடுகள் அல்லது குடிசைகளிருந்தால். அந்நிலைகளுக்கிடையில் குறைந்த பட்சம் 15 அடி அகலமாவதுள்ள இடம் விட்டிருத்தல் வேண்டும்.

இப்பிரமாணத்துக்கு மாறாகக் கட்டப்படும் எவ்வீட்டையாவது குடிசையாவது இடிக்கும்படி ஒரு மாசத்துக்கு எழுத்தி லறிவித்தல் கொடுத்தபின் சொந்தக்காரன் அப்படிச் செய்யத் தவறினால், நகரசங்கமானது அப்படிச் செய்து சொந்தக்காரனிடம் செலவறவிடலாம்.

எவராவது நகரசங்கத்தலைவரின் அனுமதியில்லாமல் எந்தக் கட்டடத்தையாவது அல்லது அதின் பாகத்தையாவது ஓலை, இலை, வைக்கோல், புல், பலகை அல்லது எளிதில் நெருப்புப்பற்றக் கூடிய எந்த வஸ்துக்களாலாவது கட்டினால் அல்லது புதிப்பித்தால் அல்லது கட்டுவித்தால் அவர்களைக் குற்றவாளியென்று சாட்டப்படும்.

மனுஷர் வசிக்கத் தகாத கட்டடங்கள்.

8. (1) எந்த நியாயத்தினாலாவது மனுஷர் வசிப்பதற்கென்றிருக்கிற அல்லது வசிக்கிற எந்த வீடாவது அப்படி மனுஷர் வசிப்பதற்குத் தகாததென்று நகரசங்கத்தலைவருக்குத் தோற்றும்போது, அவர் அவ்வீட்டை அப்படி மனுஷர் வசிப்பதற்காகப் பாவிக்கவேண்டாமென்று தடைபண்ணும்பொருட்டு நகரசங்க நீதவானுக்கு அறிவிக்கும்படி யாதாமொரு நகரசங்க உத்தியோகஸ்தருக்குக் கட்டளையிடவேண்டும். மேற்சொல்லிய நீதவான் சரியெனத் தமக்குத் தோற்றும் விசாரணை செய்தபின், மேற்சொல்லிய பிரகாரம் எழுத்தில் (அவ்வீட்டை அப்படிப் பாவிப்பதைத்) தடைபண்ணிக் கட்டளையிடலாம். அல்லது தமக்கு நீதியெனத் தோற்றுகிற எந்தக் கட்டளையையுஞ் செய்யலாம்.

(2) அப்படித் தடைபண்ணிக் கட்டளையுண்டுபண்ணப்பட்டிருக்கும்போது அவ்வீட்டின் சொந்தக்காரனாவது அல்லது அங்கு வசிப்பவனாவது நகரசங்கத்தலைவர் அவ்வீடு பாவிக்கப்படாமலிருப்பதற்கிருந்த நியாயங்கள் நீக்கி இப்போ வசிப்பதற்குத் தகுந்த இடமென்று சொல்லும் பரியந்தம், அல்லது நகரசங்க நீதவான் எழுத்து மூலமாய்க் கட்டளைபண்ணி அந்தடைபண்ணிய கட்டளையை நீக்கும்பரியந்தம் அவ்வீட்டை மனுஷர் சீவிப்பதற்காகப் பாவிக்க அல்லது அப்படிப் பாவிக்கவிடக் கூடாது.

அசௌக்கியமுள்ள குடிசை முதலியவைகள்.

9. மனுஷர் வசிப்பதற்காக அல்லது வாயமாக அல்லது வேறு முகாந்தரமாகப் பாவிக்கப்படும் கட்டடம் அல்லது நிரையான கட்டடங்கள் போதியளவு உயரமில்லாததால், அல்லது சரியான வாய்க்கால் முதலியவை யில்லாமையால், அல்லது பெருக்கிக்கொள்ள முடியாமையால், அல்லது அக்கட்டடமும் அவைபோன்ற குடிசைகளும் அதிகமாய் நெருங்கியிருந்தால், அங்கே வசிப்பவருக்கு அல்லது அதன் புறத்தில் வசிப்பவருக்கு நோய்கள்வர ஏதுவாய் யிருக்குமென்று, அல்லது பொதுவாய்ச் சகலரதும் சுகத்துக்கு அல்லது சீவனுக்கு மோசம்வரக்கூடியதாயிருக்கிறதென்று நகரசங்கத்தலைவர் கண்டால், அவர் தாம் தேள்வையென்று நினைக்கிற திருத்தங்களை அக்கட்டடங்களுக்குச் செய்யும்படி அல்லது அவைகளை யகற்றும்படி அல்லது மாற்றும்படி அவைகளின் சொந்தக்காரருக்காவது வசிப்பவருக்காவது அல்லது அவைகள் இருக்கும் நிலத்தின் சொந்தக்காரருக்காவது எழுத்தில் அறிவித்தல் கொடுத்துக் கட்டாயப்படுத்தலாம். மேற்படி அறிவித்தல் அவ்வீட்டின் அல்லது குடிசையின் நல்லாய்த் தெரியக்கூடிய ஓரிடத்தில் வைக்கப்படவேண்டும்.

---

## 23 ம் அதிகாரம்.

### சுவர் முதலியவை யெழுப்புதலும் நிலங்கூட்டிக் கட்டுதலும்.

சிலநேரங்களில் உறுதிகளைக் காட்டும்படி நகரசங்கத்தலைவர் சொந்தக்காரரைக் கேட்கலாம்.

1. நகரசங்க எல்லைக்குள் வீதியிலாவது பாழ் நிலங்கள் இடங்களிலாவது யாதாமொரு கட்டடம் அடைப்பு சுவர் முதலியவை யெழுப்பப்பட்டாவது, அல்லது அந்நிலங்கள் வீடுகளில் சேர்க்கப்பட்டுக் கட்டப்பட்டாவது இருப்பதாகவும், அல்லது யாதொரு றோட்டின் எல்லை கட்டடங்களினெல்லையோடு பொருந்துமிடமாவது உத்தரவின்றி வேறுபடுத்தப்பட்டிருப்பதாகவும் நகரசங்கத்தலைவர் அறியவரும்போதெல்லாம் மேற்படி கட்டடம் அடைப்பு முதலியவை கட்டப்பட்டிருக்கும் நிலம் கட்டடங்களுக்காவது அல்லது மேற்படி றோட்டி னெல்லை மாற்றப்பட்டிருக்கும் நிலத்துக்காவது சொந்தக்காரரென்று வரு மெவரையும் மேற்படி நிலம் கட்டடம் முதலியவைக்காதாரமாயுள்ள உறுதிகள் சாதனங்கள் படம் முதலிய சகலத்தையும் கொண்டுவந்து காட்டும்படி நகரசங்கத்தலைவர் கேட்கலாம். மேற்படி வீடு நிலங்களில் வசிப்பவர் சொந்தக்காரரா யிருந்திருந்தால், அச்சொந்தக்காரனுடைய பெயர் வசிப்பிடங்களைக் குறித்து நகரசங்கத்தலைவர் கேட்கும்போது அவருக்கு வேண்டிய சமாச்சாரங்களெல்லாம் மேற்படி வசிப்பவன் பத்து நாளைக்குள் சொல்லுவது கடமை. மேற்படி சொந்தக்காரனென்று வருபவன் அப்படிக் கேட்ட பத்து நாளைக்குள் மேற்படி நிலம் முதலியவைகளில் அவனுக்கிருக்கும் உரித்துக் காதாரமாயுள்ள உறுதி சாதனம் படம் முதலியவைகளைக் கொண்டுவந்து காட்டல் வேண்டும். அவ்வுறுதி சாதனம் படம் முதலியவை தன்வசமில்லாது பிறர்வசமிருந்தால் அவை யார்வசமிருக்கின்றன வென்று நகரசங்கத்தலைவருக் கறிவித்தல் கொடுத்தல் வேண்டும். மேற்படி உறுதிசாதனம் படம் முதலியவை வைத்திருக்கு மொவ்வொருவரும் கொண்டுவந்து காட்டும்படி எழுத்து மூலமாய் நகரசங்கத்தலைவர் கேட்ட பத்து நாளைக்குள் அப்படிச்செய்தல் வேண்டும்.

மேற்படி கொண்டுவந்த உறுதி முதலியவைகளைச் சோதனைப்பண்ணல்.

2. மேற்படி பிரிவில் சொல்லப்பட்ட உறுதி சாதனம் படம் முதலியவை எவ்வெவ் கட்டடங்களைக் குறித்துப் பேசுமோ, அவ்வக் கட்டடங்களிருக்குமிடத்திலாவது, நகரசங்கத்தலைவர் கற்பிக்குமிடத்திலாவது, மேற்படி உறுதி முதலியவைகளைக் கொண்டுபோய்க் காட்டல் வேண்டும். மேற்படி உறுதி முதலியவைகளைக் கொண்டுவந்து காட்டும்படி கேட்க நகரசங்கத்தலைவருக் கிருக்கு மதிகாரத்துக்குள் மேற்படி உறுதி முதலியவைகளைச் சோதனைபண்ணு மதிகாரமும் அவைகளின் நகலெடுக்கு மதிகாரமுமடங்கும். மேற்படி உறுதி சாதன முதலியவைகளை வைத்திருக்கு மொவ்வொருவரும் அவைகளைச் சோதனைப்பண்ணவும் அவைகளின் நகலெடுக்கவும் நகரசங்கத் தலைவரைத் தடைபண்ணாது விடுத்தல் வேண்டும். அந் நகலெடுக்க எவ்வளவுகாலம் செல்லுமோ அவ்வளவு காலத்துக்கும் நகரசங்கத்தலைவர் அவ்வுறுதி சாதனம் படம் முதலியவைகளை நிறுத்திவைக்கலாம்.

படமெழுதும்படி நகரசங்கத்தலைவர் அதிகாரம் கொடுத்தல்.

3. நகரசங்கத்தலைவராவது அல்லது அவரிட மதிகாரம்பெற்ற வேறெவராவது மேற்படி கட்டடம் அடைப்பு சேர்த்தல் முதலிய வேலைகள் செய்யப்பட்ட அல்லது இச்சட்டத்தின் முதலாம் பிரிவில் சொல்லப்பட்டிருக்கிறபடி றோட்டு வீதியின் எல்லை வேறுபடுத்தப்பட்டிருக்கும் நிலம், வீடு, கட்டடம் முதலியவைகளில் வசிப்பவருக்குப் போதிய அறிவித்தல் கொடுத்து, மேற்படி நிலம் கட்டடம் முதலியவைகளிலும் வேறும் நகரசங்கத்தலைவர் வேண்டுமென்று நினைக்கிற வேறு நிலங் கட்டடங்களிலும் பிரவேசிக்கவும், அப்படிப் பிரவேசித்தபின் அவ்விடங்களைப் பார்த்துப் படங்கீறவும், மேற்படி சொல்லப்பட்ட நிலம் வீடு முதலியவைகளில் ஏதாவது நகரசங்கத்தைச்சேர்ந்த நிலங்கள் வீதிகள் இடங்களில் எப்பாகமாவது சேர்க்கப்பட்டிருக்கின்றதோ வென்பதை நிட்சயம்பண்ணுவதற்கும் அல்லது றோட்டு வீதிகளி னெல்லை வேறுபடுத்தப்பட்டிருக்கிறதோ வென்று அறியும்படிக்கும் வேண்டிய சோதனை அளவை முதலியவை செய்ய அதிகாரமுண்டு.

தத்துவமுள்ள உத்தியோகஸ்தரால எக்கப்பட்ட அளவு சரியான சாட்சி யென்று எண்ணப்படும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதி ஒவ்வொன்றுக்குமாக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதி தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலிஸ் இன்ஸ்பெக்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதி கிடைத்ததோ என்று விசாரித்து அது தவறிவிட்டால் இணைப்பிரதியொன்று கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைக்கு நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஒரு பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்னவகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல்வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுடையவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கில் அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடை பார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனல்லாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த

மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டிறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து தொந்தில் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையிலுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைகாரனது பெயரை நீக்கிவிடும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தே இந்த உத்தரவுபத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "சில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்றலேயல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திற்றனே கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது

20. நாலு டிறும் நிறைக்கு அதிகமான அபினை விற்றபோதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப் பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையுந் தேதியையும் காட்டி, இதற்கென்று வைக்கப்பட்ட ஒரு புத்தகத்தில் எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டந் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ் ஒரு ருத்தல், இரண்டு ருத்தல், நாலு ருத்தல், ஏழு ருத்தல் ஆகிய அவாடுபோர்ச் சாமானிய தராசு நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப் புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னுற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல்வேண்டும் :—

சில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாத்திரிப் பக்கம் :—

| தேதி. | | ரு. அ. டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 8 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 8 2 | | |
| மொத்தம் | ... | 28 0 6 | ... இலக்கம் 1 மொத்த விலையாளன் சுவான்பிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 7 9 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 26 8 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 26 8 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 15 5 | | |
| கணக்குமுடித்து பாக்கி | ... | 25 9 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | |
| மொத்தம் | ... | 25 9 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 7 1 | | |

கையிருப்புத்தொகை புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்தினுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலீஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதிமூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

அவாட்போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறும் | = | அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | ருத்தல் |
| 28 ருத்தல் | = | குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | தொன் |

குறிப்பு.—180 கிறேயின் 6·582 அவாட்போய் டிறும்களுக்குச்சரி ; அதாவது 7 டிறும்களுக்குக் குறைய.

---

[Sale of Opium Licenses, Seven Korales and Chilaw District.]

இதனால் சகலருக்கும் அறிவிப்பது யாதெனில், "1899 ம் ஆண்டு துவக்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின்" ஏற்பாடுகளின்படி, 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் திகதி துவங்கும் வருஷத்திற்கு குருநாக்கல் டிஸ்திறிக் ஏழுகோறளைகளுக்கும் சலாப டிஸ்திறிக்கிற்கும் சில்லறையில் அபின் விற்பதற்கு ஒன்பது உத்தரவுப் பத்திரங்கள் கொடுக்கப்படும், அஃதாவது :—

ஏழு கோறளை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தண்டகாமம் ... | ... | 1 | கட்டுப்பொத்தை | ... | 1 |
| நாறம்மலை ... | ... | 1 | கிரியுல்லகடை ... | ... | 1 |
| வாரியப்பொலை | ... | 1 | | | |

சலாபம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாதம்பை ... | ... | 1 | தங்கொட்டுவா .. | ... | 1 |
| நாத்தாண்டி ... | ... | 1 | வென்னப்புவா... | ... | 1 |

2. மேற்சொல்லிய உத்தரவுப்பத்திரங்களுடைய விற்பனவிற்காக 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 14 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணி வரைக்கும் குருநாக்கல் கச்சேரியில் வடமேல் மாகாணம் அரசாட்சி யேசண்டவர்களால் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

3. 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 14 ந் தேதியிலன்று பிற்பகல் 1 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் கேள்விக்காரன் தானாயாவது, முறைமையாக எழுத்தில் அதிகாரம்பெற்ற அவனது காரியஸ்தனாவது வந்து சமுகமாயிருந்து தனது கேள்வித்தொகையில் மூன்றிலொரு பங்கு கட்ட ஆயித்தமாயிருந்தாலொழிய, யாதொரு கேள்விப்பத்திரமும் கவனிக்கப்படமாட்டாது.

4. கேள்விப்பத்திரங்கள் திருப்திகரமாயில்லாவிட்டால், வடமேல் மாகாண அரசாட்சி யேசண்டர் தன்னுடைய இஷ்டப்படி புதுக்கேள்விப்பத்திரங்கள் தரும்படி கேட்கலாம், அல்லது 2 மணிக்கு ஏலத்தில் விற்கலாம், அல்லது "1899 ம் ஆண்டு துவக்கி 1905 ம் ஆண்டு வரைக்கும் இயற்றப்பட்ட அபின் கட்டளைச்சட்டங்களின்" ஏற்பாடுகளின்படி அந்தக் குத்தகையை வேறுவிதமாய் முடிவாக்கலாம்.

எஸ். எ. ட. படூறேஸ்,
வடமேல்மாகாண அரசாட்சி ஏசண்டு.

குருநாக்கல் கச்சேரி,
1905 ம் ஆண்டு அற்பசிமீ 11 ந உ.

சில்லறையில் அபினை விற்க உத்தரவுப்பத்திரங்கள் கொடுப்பதற்கு ஏற்படுத்திய கட்டுப்பாடுகள்.

1. சில்லறையில் அபின் விற்க உத்தரவுவாங்கினவன் ஆனவன், தக்க அதிகாரமுடையவராலே வாங்கினவன் அவன் என்று வெளிப்படுத்திய உடனே, தனது கேள்வித்தொகையில் மூன்றிலொருபங்கை ரொக்கமாகக் கட்டிவிடுதல் வேண்டும். தக்க அதிகாரமுடையார் அந்தத் தொகையைப் பிணையாக வைத்துக்கொள்ளல் வேண்டும்; கடைசி நாலு மாதத்துத் தவணைப்பணத்துக்கல்லாமல் கேள்வித்தொகையின் தவணைப்பணமாக அதை உபயோகிக்கக்கூடாது. கேள்வித்தொகையைப் பன்னிரண்டு மாசத்துக்குஞ் சமமான தொகைப்பாகமாய்ப் பிரித்து குத்தகை யிருக்கும் வரையும் மாசந்தோறும் கடைசித் தேதி நாளில் கொடுத்துவிடல் வேண்டும். முதலாம் தவணைப் பணத்தை ஜனவரி (தை)மீ 31 ந் தேதியில் கொடுத்துவிடல் வேண்டும். ஒரு தவணைப்பணம் நிலுவையாம்போது நாள் ஒன்றுக்கு நூற்றுக்கு வருஷ ந்த ஒன்பது வீதவட்டி கொடுத்தல் வேண்டும். உத்தரவு வாங்கினவனது வேண்டுகோளின்படி பிணைப் பணத்தொகையை அவனுக்குப் பிரியமான ஒரு வங்கியிலே நிலையாய் (டிப்செட்) போட்டுவைக்கலாம்; அதில் ஏதும் நஷ்டம் நேரிட்டால் அது அவன் பாரமாகும். குறித்த தவணைத் தேதியிலே பணங் கொடுக்கத் தவறினால் நஷ்டம் அவனது பாரமாக, தக்க அதிகாரமுடையவர் உத்தரவை மறுபடி விற்கவாம் அல்லது செல்லாமல் நிற்கும் அத்தனை காலமளவு பாகத்தை விற்கலாம்.

2. இதனால் உத்தரவுப்பத்திரம் பெற்றுக்கொண்ட பண்டசாலை அல்லது இடமானது இந்த உத்தரவுப்பத்திரத்துப் பக்கத்திலே பூரணமாக விவரித்துக் காட்டியிருக்க வேண்டியது; அப்படி விவரித்துக்காட்டிய இடத்திற்கேயல்லாமல் மற்றொன்றுக்கு இந்த உத்தரவுப்பத்திரம் பொருந்துவதன்று.

3. இதனால் உத்தரவுபெற்ற இடமானது வேறும் எந்தக் கட்டடங்களோடாயினும் இடங்களோடாயினும் உட்புறமாகப் போக்குவரவு செய்யத்தக்கதாக இருக்க ஒண்ணாது.

4. இதனால் உத்தரவுபெற்ற இடத்தைத் துப்பரவாகவும் சுகவளமுடையதாகவும் வைத்திருக்கல் வேண்டும்.

5. தக்க அதிகாரமுடையவரால் எழுத்து மூலமாக இன்ஸ்பெட்டர் பரிசோதகராக நியோகிக்கப்பட்ட எவரொருவராயினும், இன்ஸ்பெட்டர் நிலைமைக்குக் கீழ்ப்படாத பொலீஸ் உத்தியோகஸ்தர் எவரொருவராயினும் கேட்கும்போது, இதனால் உத்தரவுப்பெற்ற இடத்தைப் பரிசோதனைக்காகத் திறந்து காட்டுதல் அவ்விடத்தைப் பொறுப்பாக உடையவனது கடமையாம். மேலும் அவன் தன் வசத்துள்ள அபினினது வரவு செலவுக் கணக்கைப் பற்றிய சகல புத்தகங்களையும் காகிதபத்திரங்களையும், கணக்குத்தொகைகளையும் காட்டவும் கடமைப்பட்டவனுவன்; மேலும், அப்படிச் செய்யும்படி விசேஷமாகக் கேட்கப்பட்டால், பரிசோதனைக் காலத்திலே கையிருப்பில் அல்லது அவ்விடத்தில் உள்ள அபினையெல்லாம் இன்ஸ்பெட்டர் அல்லது பொலீஸ் உத்தியோகஸ்தர் முன்னிலையிலே நிறுக்கவுங் கடமைப்பட்டவனுவன்; மேலும் அவன் கையிருப்பில் உள்ள அளவிற்கும், பரிசோதனைக் காலத்திலே புத்தகக் கணக்கின்படி கையிருப்பில் இருக்கவேண்டிய அளவிற்கும் உள்ள யாதேனும் ஓர் வித்தியாசத்தைத் தன்னால் கூடியமட்டும் விளங்கப்படுத்திக் காட்டவும் வேண்டும்.

6. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் சாப்பிடுதல் ஒண்ணாது.

7. இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் உள்ள யாதும் அபினைக் கலந்து கெடுத்தலாவது எவ்விதத்தும் பழுதுபடுத்தலாவது செய்ய ஒண்ணாது.

8. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதுங் குழப்பமான நடக்கைகளுக்கு இடங்கொடுக்க ஒண்ணாது.

9. குடியினால் வெறித்திருக்கும் அல்லது அபினால் மயறித்திருக்கும் எவ்வொருவனுக்காவது, தோற்றத்தளவில் பதினைந்து வயசுக்குட்பட்ட எவனொருவனுக்காவது, இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் கொடுக்க ஒண்ணாது.

10. மாலையில் எட்டு மணிக்கும் காலையில் ஆறு மணிக்கும் இடையிலுள்ள நேரங்களில், இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே யாதும் அபின் ஒப்பிக்கவும் ஒண்ணாது, கொடுக்கவும் ஒண்ணாது, வாங்கிவைக்கவும் ஒண்ணாது.

11. இலக்கமிட்ட பக்கங்களுடையதாயக் கட்டப்பெற்ற ஒரு கையிருப்புப் புத்தகம் ஆகிய ஸ்தொக் புத்தகம் ஒன்று, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்துக்காக அப்படியான புத்தகப்பிரதியொன்று தக்க அதிகாரமுடையவர் உத்தரவுப்பத்திர மெடுப்பவனுக்கு அப்போது விலையில்லாமல் சும்மா கொடுப்பார். புது புத்தகம் ஒன்று வேண்டுமானால், அதை உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே விலைகொடுத்து வாங்கிக்கொள்ள வேண்டியது. அவரிடமே முந்தின புத்தகத்தை ஒப்பித்துவிடல் வேண்டும்.

12. கொடுக்கல் வாங்கல் நடைபெற்றவுடனே அபின் பெற்றதொகையும் செலவான தொகையுமெல்லாம் கையிருப்புப் புத்தகத்திலே கிரமமாக எழுதிவைத்திருக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாம்; புத்தகத்தின் பந்திக்கோலங்களெல்லாம் சரவர எழுதி நிரப்பியிருக்கவேண்டும், அன்றைத்தினத்து முதலிலும் முடிவிலும் கையிருப்பிலுள்ள தொகையைத் தெளிவுபெறக் காட்டியிருக்கவேண்டும்.

13. ஒவ்வொர் மாசத்து இரண்டாந் தேதியிலாவது அதற்கு முன்னேயாவது கையிருப்புப் புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், 20 ம் கொறதின்படி வைத்திருக்கவேண்டிய புத்தகத்தின் சரியான பிரதியொன்றையும், பொலீஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரைக்கு அனுப்பிவைப்பதும் உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

14. தாம் பெற்றுக்கொள்ளும் அப்படிப்பட்ட சரியான பிரதிகளுக்காக உத்தரவுபெற்றவனுக்குப் பற்றுச்சீட்டுக் கொடுப்பது பொலீஸ் இன்ஸ்பெட்டர்பெரியதுரையது கடமையாகும். உத்தரவுபெற்றவன் தான் சரியான பிரதிகளைத் தபாலில் அனுப்பிய ஒரு கிழமையினுள்ளே அந்தப் பற்றுச்சீட்டுத் தனக்குக் கிடைக்கப்பெறவில்லையென்றால், பொலீஸ் இன்ஸ்பெட்டர் பெரியதுரைக்கு எழுதி அந்தச் சரியான பிரதிகள் கிடைத்தனவோ என்று விசாரித்து அவை தவறிவிட்டால் நகற்பிரதிகள் கொடுப்பது அந்த உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

15. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே தான் வேலைபார்க்க நியமிக்கப்போகிறவர் இன்னார் இன்னார் என்று காட்டி ஓர் பேர்வழி டாப்பை உத்தரவுபெற்றவன் உத்தரவுபெறுதற்கு முன்னே தக்க அதிகாரமுடையவரிடத்தே ஒப்பிப்பது அவனது கடமையாகும். ஒவ்வொரு பணிவிடைக்காரன் முழுப்பெயரும் விவரமும் அவன் பார்ப்பது இன்ன வகையான பணிவிடையென்றும் அந்த டாப்பிலே விதந்து காட்டியிருத்தல் வேண்டும். அப்படிப்பட்டவர்கள் யாவரும் இருபத்தொரு வயசு சென்றவர்களாயிருத்தல் வேண்டும். அவர்கள் நல்ல நடக்கையுள்ளவர்களெனத் தக்க அதிகாரமுடையவர் திருப்திப்பட்டுக்கொள்ளவும் வேண்டும். தக்க அதிகாரமுடையவராலே இந்த உத்தரவுப்பத்திரத்தில் மாட்டறைந்த பேர்வழிகாரனல்லாத மற்றெவனொருவனும் தன் கணக்கிலே அபினைப் பொறுப்பெடுக்கவாவது, பெற்றுக்கொள்ளவாவது, விலைப்படுத்தவாவது, உத்தரவுபெற்றவன் பணிவிடைபார்ப்பிக்க ஒண்ணாது; அப்படியே மாட்டறைவுபெற்ற பேர்வழிகாரனலலாத எவனொருவனையும் மேற்கண்ட கடமைகளுள் யாதொன்றையுஞ் செய்யவிட ஒண்ணாது.

16. பணிவிடைபார்க்கும் பேர்வழிகாரரது டாப்பிலே வேண்டியனவான மாற்றங்களைச் செய்தற்காக, உத்தரவுபெற்றவன் தக்க அதிகாரமுடையவரிடத்தே காலத்துக்குக்காலம் கேட்டுக்கொள்ளலாம்; அந்த மாற்றங்கள் இந்த உத்தரவுப்பத்திரத்திலே மாட்டறைந்திருத்தல் வேண்டும். இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடைபார்க்கும் எவனொருவனையும் நீக்கிவிடும்படியாகத் தக்க அதிகாரமுடையவரிடத்தேயிருந்து நொத்திஸ் அறிவித்தல் கிடைக்கப்பெற்ற

உத்தரவுபெற்றவன், அந்த அறிவித்தல் கிடைத்த ஒரு கிழமையினுள்ளே, இந்த உத்தரவுப்பத்திரத்திலிருந்து அப்பணிவிடைக்காரனது பெயரை நீக்குவிக்கும்படியாக, தக்க அதிகாரமுடையவரிடத்தில் இந்த உத்தரவுப்பத்திரத்தைக் கொண்டுபோய்க் காட்டவேண்டும். அதன்பின் அப்படிப்பட்டவன் அந்த உத்தரவுபெற்ற இடத்திலே பணிவிடை பார்ப்பதற்கு யோக்கியனாகமாட்டான்.

17. இந்த உத்தரவுப்பத்திரத்தின் இலக்கமும் உத்தரவுபெற்ற தனது பெயரும் "கில்லறையில் அபின் விற்க உத்தரவுபெற்றது" என்ற வாக்கியமும் தெளிவாய் எழுதின தொரு பலகையை, இதனால் உத்தரவுபெற்ற இடத்தில் எல்லார்க்கும் நன்றாய்த் தெரியக்கூடிய இடத்திலே பதித்துவைக்கச்செய்வது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

18. இதனால் உத்தரவுபெற்ற இடத்திலே அபின் அல்லது சுருட்டு விற்பனையல்லாமல் வேறொரு வியாபாரமாவது தொழிலாவது நடப்பித்தல் ஒண்ணாது.

19. அவ்விடத்திலிருந்து கொடுத்த காசு ரொக்கத்துக்கல்லாமல் யாதொரு அபினும் விற்க ஒண்ணாது.

20. நாலு டிறாம் நிறைக்கு அதிகமான அபினை விற்கும்போதெல்லாம், அதை வாங்கினவனுடைய முழுப் பெயரையும் மேல்விலாசத்தையும் விற்ற அளவையும் விற்ற தேதியையும் காட்டி, கையிருப்புப் புத்தகத்திலே "குறிப்பு" பத்தியிலே எழுதிவைப்பது உத்தரவுபெற்றவனது கடமையாகும்.

21. உத்தரவுபெற்ற இடத்திலே எந்த நேரங்களிலும் உபயோகிக்கிறதற்காக ஒரு கூட்டம் தராசுபடிகளும், கால் அவுன்ஸ், அரை அவுன்ஸ், ஒரு அவுன்ஸ், இரண்டு அவுன்ஸ், நாலு அவுன்ஸ், எட்டு அவுன்ஸ், ஒரு றுத்தல், இரண்டு றுத்தல் நாலு றுத்தல், ஏழு றுத்தல் ஆகிய அவாடுபோர்ச் சமானிய தரத்து நிறைகளையும் வைத்திருத்தல் வேண்டும்.

22. கணக்குப்புத்தகம் வைப்பதற்காக, உத்தரவுபெற்றவன் இதன் பின்னாற் சொல்லப்பட்ட விதிகளை அனுசரித்து நடத்தல் வேண்டும் :—

கில்லறை அபின் வியாபாரிகள் வைத்திருக்கவேண்டிய கையிருப்புப் புத்தகத்து மாதிரிப் பக்கம் :—

| தேதி | | ரு. | அ. | டி. | யாரிடமிருந்து பெற்றுக்கொண்டது. | குறிப்பு. |
|---|---|---|---|---|---|---|
| ஆனி 1.—கையிருப்பு அபின் பாக்கி | ... | 17 | 8 | 4 | | |
| பெற்றுக்கொண்டது | ... | 10 | 8 | 2 | | |
| மொத்தம் | ... | 28 | 0 | 6 | ... இலக்கம் 1 மொத்த விலையாளன் சுவாமிபிள்ளை | |
| கொடுத்தது ... | ... | 1 | 7 | 9 | | |
| கணக்குமுடித்த பாக்கி | ... | 26 | 8 | 13 | | |
| ஆனி 2.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | ... | 26 | 8 | 13 | | |
| கொடுத்தது ... | ... | 0 | 15 | 5 | | |
| கணக்குமுடித்த பாக்கி | ... | 25 | 9 | 8 | | |
| ஆனி 3.—பெற்றுக்கொண்டது | ... | இல்லை | | | | |
| மொத்தம் | ... | 25 | 9 | 8 | | |
| கொடுத்தது ... | ... | 2 | 7 | 1 | | |

கையிருப்பு ஸ்தொக் புத்தகம் வைத்திருப்பதற்கான விதிகள்.

புத்தகத்திலுள்ளே முதலட்டையை அடுத்து இங்கிலிஷிலுந் தமிழிலுஞ் சிங்களத்திலும் இவ்விதிகளின் ஒவ்வோர் பிரதியாக மூன்றும், மற்றை இறுதியட்டையை அடுத்து அப்படியே பிரதி மூன்றுமாக, ஆறு பிரதிகளை வைத்துப் பெலமாகக் கட்டிவைத்திருத்தல் வேண்டும்.

---

அவா. போய் நிறை.

| | | |
|---|---|---|
| 16 டிறாம் | = | 1 அவுன்ஸ் |
| 16 அவுன்ஸ் | = | 1 றுத்தல் |
| 28 றுத்தல் | = | 1 குவாட்டர் |
| 4 குவாட்டர் | = | 1 கண்டிறற்வேற் |
| 20 கண்டிறற்வேற் | = | 1 தொன் |

குறிப்பு.—180 கிறெய்ன் 6·582 அவாட்போய் டிறாம்களுக்குச்சரி ; அதாவது 7 டிறாம்களுக்குக் குறைய.

---

[Tender for Repairing Salt Stores in Southern Depot, Puttalam.]

"புத்தளம் தென்புறத்து டிப்போவிலிருக்கும் 6 உப்புக்குதங்களைப் பழுதுபார்க்க" வென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களால் 1905 ஆண்டு கார்த்திகைமாதம் 16 ந் தேதி காலை 11 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

17, 18, 19, 20, 21 உம் 22 ம் உப்புகுதங்களைப் பழுது பார்க்கும் விபரமாவது :—

(1) செரித்த எல்லா மரங்களை எடுத்துப்போட்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய புதியவைகள் பாவிக்கவேண்டும்.

(2) சுவர்களின் சரிவுகளை நீக்கவேண்டும், கிடுகால் கட்டிய வேலிகளை நிமிர்த்தி நேராக்கவேண்டும். தேவையான இடங்களில் தரையை உயர்த்தி நன்றாயடித்து மட்டப்படுத்தவேண்டியது.

(3) கூரைகளுக்கும் சுவர்களுக்கும் புதிய கிடுகு பாவிக்கவேண்டும்.

(4) சேதப்பட்டிருக்கும் கதவுகளுடைய சரணில்களையும், தாப்பால்களையும், கொண்டியல்களையும், எடுத்துப்போட்டு புதிதானதுகளைப் போடவேண்டியது.

(5) வாசல்களுக்கு கம்புபோடவேண்டியது.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

(a) கேள்விக்காரர் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாசம் 15 ந் தேதிக்கு முன்பதாக புத்தளம் கச்சேரியில் ரூபாய் 10 கட்டவேண்டும். நியமிக்கும் நியாயமான நாளைக்குள் பொருந்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கொவற்மெந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபொருந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும், அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொந்திராத்து அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பேரையும் தாங்களிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தையும் கொடுக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விசாரித்தறிந்துகொள்ளலாம்.

எவ். போஸ்,
உதவி ஏசன்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 18 ந் உ.

[Tender for Building Houses, at Northern and Southern Depots, Puttalam.]

புத்தளம் "உப்பு டிப்பார்மெந்துக்குச்சேர்ந்த வடபகுதியிலும், தென் பகுதியிலுமிருக்கும் இரண்டாம் கிளாஸ் கொன்தாப்பலமோர்களுக்கு இரண்டு புதிய வீடுகள் கட்ட" வென்று மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி கொவற்மெந்து ஏசன்றுத்துரையவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 22 ந் தேதி வரைக்கும் காலை 10 மணியளவில் ஏற்றுக்கொள்ளப்படும் விபரமாவது :—

இரண்டு வீடுகள், ஒன்று புத்தளம் வடபகுதி டிப்போவிலும், மற்றது தென்பகுதி டிப்போவிலும். சுவர்களுக்கு மரத்தடி வர்ச்சி பிடித்து களிமண் சுவர்வைத்தும், கூரைகளுக்கு ஓடு வைத்து வேயப்படவேண்டும். ஒவ்வொரு வீட்டுக்கும் குசினியும் கட்டப்படவேண்டும், கக்கூசும் கட்டப்படவும் வேண்டும், வீடுகளுக்கு 14 அடி × 12 அடியுள்ள இருக்கிற அறையும் 12 அடி × 12 அடியுள்ள படுக்கை அறையும் 6 அடி அகலமுள்ள விறாந்தையும் சுற்றிவரக் கட்டப்படவேண்டும். சுவர்கள் 9 அடி உயரமும், பிலா, முதிரை, பாலை, அல்லது பெருங் வெடுக்காறி மரங்களால் 3 கதவுகளும் 2 சன்னல்களும் போடப்படவேண்டும்.

வீட்டு தரைகளுக்கு கெறவல்போட்டு நல்லாகத்தட்டி மட்டப்படுத்தி சாணம் பூசப்படவேண்டும்.

6 அடி × 3 அடி கதவுகளும் 3 அடி × 3 அடி சன்னல்களும்செய்து பச்சை நிறத்தை பூசப்படவேண்டும்.

சுவர் ஓரங்களுக்கு 6 இஞ்சி உயரத்து தார்பூசப்படவேண்டும். வீட்டுதரையும் குசினியும் 10 அடி × 10 அடிகளாக கட்டப்படவேண்டும், கக்கூஸ் 6 அடி × 6 அடிகளாகவும் கட்டப்படவேண்டும்.

கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

(a) கேள்விக்காரர் 1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 22 ந் தேதிக்குமுன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் 20 கட்டவேண்டும். நியமிக்கும் ஞாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்த கட்டின பணம் கொவற்மெந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

(b) கேள்விப் பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியை புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரர் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(c) கொரதிகை அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கும் இடத்தையும் புத்தளத்தில் மேல்விலாசத்தை கொடுக்கவேண்டியது.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிக விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விசுவி அறிந்துகொள்ளலாம்.

எப். போஸ்,
புத்தளம் கச்சேரி, உதவி ஏசன்றுத்துரை.
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 20 ந் உ.

---

[Tender for Transporting Salt into Government Stores, Puttalam.]

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவர்ண்மேந்தின் குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உறையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவற்மெந்து ஏசன்றுத்துரை அவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 16 ந் தேதி மதியம் 12 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அதாவது :—

புத்தளம், பலாவி, பச்சகட்டி, முந்தல், மேல்கரை, கீழ்கரை உப்பளங்களில் 1905 ம் ஆண்டு பெரும்போகத்தில் சேர்க்கப்பட்டிருக்கும் ஏறக்குறைய 300 000 அந்தர் உப்பை புத்தளத்திலிருக்கும் உப்பு களஞ்சியங்களுக்கு ஏற்றுமதிபண்ணி நிறுத்து குவிக்கும் பணிவிடைக்காக.

கேள்விக்காரர்கள் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. கேள்விக்காரர்கள் கொம்பிமுனை, தில்லையடி, பச்சகட்டி, முந்தல், பலாவியிலிருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்து குவிக்கவும்; (2) கீழ்கரை, மேல்கரை ஆலங்களில் இருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கவும்; (3) மறுபடி மேற்சொல்லிய இரண்டு பகுதியில் அதாவது கொம்பிமுனை, தில்லையடி, பச்சகட்டி, முந்தல், பலாவியையும், கீழ்கரை மேல்கரை ஆலங்களிலிருக்கும் உப்பை ஏற்றுமதிபண்ணி நிறுத்துக் குவிக்கவும், பிறம்புபிறம்பான கேள்விப் பத்திரங்கள் கேட்கவேண்டியது.

2. சாக்குகளுக்கு வாய்க்கட்டி ஏற்றுமதிபண்ணிக் கொண்டுவந்து குதத்தில் நிறுத்து நிறைத்துக் கொடுக்கிறதற்கு 1,000 அந்தருக்கு என்ன வீதமென்றும் விபரித்துக் காட்டியிருக்கவேண்டியது.

3. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,500 அந்தர் உப்புக் கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்கவேண்டியது.

4. மேற்குறித்த வேலை 1906 ம் ஆண்டு தைமாதம் 15 ந் தேதி அல்லது அத்தேதி முடிந்தவுடனே துவக்கப்படல் வேண்டும்.

5. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்க முதல் கச்சேரியில் ரூபாய் 50 ஒடுக்கவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறாத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 1,000 ரூபாய்கொண்ட ஈடு திப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவற்மெந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

6. கொரதிகை அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப்பதிலாய்ப் புத்தளத்தில் ஓர் பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

7. இந்தக் கொந்திறாத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டுபோதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசம் எழுதப்பட்ட ஒரு கடிதமும் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அனைத்திருக்கவேண்டியது.

8. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்திலே கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்கவேண்டும்.

9. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபோர்ந்த கணக்கதிகாரித்தலைவர் அவர்களுக்கும் அதின மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரைக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

10. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்ளுவதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டியது.

11. பிணைஉடன்படிக்கை கடுதாசிகள் சரிபிழை பார்க்கும் முடியின் தானியின் செலவுகள் அனுகூலப்படும் கொந்திறாத்துக்காரனால் கொடுக்கப்படவேண்டும்.

எவ். போஸ்,
புத்தளம் கச்சேரி, உதவி அரசாட்சி ஏசன்று.
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 23 ந் உ.

[Tender for Transporting Salt into Nachchikali Stores.]

"உப்பு ஏற்றுமதிபண்ணிக் கொவர்ணமேந்தின் நாச்சிக்களி குதங்களில் நிறுத்துக்கொடுக்கிறதற்கென்று" மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவர்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22 ந் தேதி மத்தியானம்வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

நாச்சிக்களி உப்பளங்களில் 1905 ம் ஆண்டு பெரும்போகம் உப்பு செய்கைபண்ணிச் சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் எல்லா உப்பையும் ஏற்றுமதிபண்ணி நாச்சிக்களியிலிருக்கும் உப்புக்குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளை கவனிக்கக்கடவர்கள் :—

1. ஏற்றுமதிபண்ணிக் கொண்டுவந்த குதங்களில் நிறுத்து நிரப்புக் கொடுக்கிறதற்கு 1,000 அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று விபரித்துக் காட்டியிருக்கவேண்டியது.

2. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,000 அந்தர் உப்பு கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்க ஆயித்தமாயிருக்க வேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்விகேட்கமுதல் கச்சேரியில் ரூபாய் 25 ஒடுக்கவேண்டும். அவ்விதம் காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய்க்கொண்ட மதிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காக பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்கு திரும்பக் கொடுக்கப்படும்.

4 கொந்திறு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப் பதிலாக புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்த கொந்திறுத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆட்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்கவேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்க வேண்டியது.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபொருந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி கொவர்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினம் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

11. பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரியிலை பார்க்கும் முடியின் தரணியின் செலவுகள் அனுகூலப்படும் கொந்திறுத்துக்காரனால் கொடுக்கப்படவேண்டும்.

எம். போஸ்,
உதவி அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ஆ ஐப்பசிமீ 20 ந் உ.

[Tender for Transporting Salt into Kalpitiya Stores.]

"உப்பு ஏற்றுமதிபண்ணி கொவர்ணமேந்தின் கற்பிட்டி குதங்களில் நிறுத்துக் கொடுக்கிறதற்கென்று" மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவிக் கொவர்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 22 ந் தேதி மத்தியானம்வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும், அஃதாவது :—

கரைத்தீவு உப்பளங்களில் 1905 ம் ஆண்டு பெரும்போகம் உப்பு செய்கைபண்ணிச் சேர்த்துவைக்கப்பட்டிருக்கும் எல்லா உப்பையும் அவ்விடத்திலிருந்து ஏற்றுமதிபண்ணி கற்பிட்டி உப்புக்குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்கும் பணிவிடை.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கக்கடவர்கள் :—

1. கரைத்தீவில் நின்று உப்பை சாக்குகளில் நிறைத்து அவைகளின் வாயை நன்றாய் நெருக்கிக் கட்டி கற்பிட்டி குதங்களுக்குக் கொண்டுவந்து நிறுத்துக் குதங்களில் போட்டுக்கொடுக்க 1,000 அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று விபரித்துக் காட்டியிருக்கவேண்டியது.

2. கேள்விக்காரர் நாள் ஒன்றுக்கு 1,000 அந்தர் உப்புக் கொண்டுவந்து நிறுத்து ஒப்புக்கொடுக்க ஆயித்தமாயிருக்கவேண்டும்.

3. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்கமுதல் கச்சேரியில் ரூபாய் 20 ஒடுக்கவேண்டும். அவ்விதம் காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கொந்திறுத்தைச் சரியாக நடப்பிக்கிறதற்கு 500 ரூபாய் கொண்ட மதிப்புப்பெற்ற பிணைகொடுக்க அல்லது பொருத்த உடன்படிக்கை பண்ணிக்கொள்ளத் தவறினால், இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும். பறிமுதலாக்கப்படாத கட்டின பணம் கேள்விக்காரருக்குத் திரும்பக் கொடுக்கப்படும்.

4. கொந்திறு அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்விக்காரன் தனக்குப் பதிலாக புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

5. இந்தக் கொந்திறுத்துச் சரியாக நடைபெறுகிறதற்காகப் பிணைக்கு ஏற்படுகிறதாகிய இரண்டு போதிய ஆள்களால் கையொப்பமிடப்பட்டு அவர்களின் மேல்விலாசமும் எழுதப்பட்ட கடிதம் ஒவ்வொரு கேள்விப்பத்திரத்துடனும் அணைத்திருக்கவேண்டியது.

6. கேள்வியின் வீதங்களையிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாளமிடப்பட்டிருக்க வேண்டியது.

7. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதியொன்று கொழும்பிலிருக்கும் சங்கைபொருந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி கொவர்ணமேந்து ஏசன்றுத்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

8. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினம் அன்று ஏதும் தேவையான கருமங்களையிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

9. பிணை உடன்படிக்கை கடுதாசிகள் சரியிலை பார்க்கும் முடியின் தரணியின் செலவுகள் அனுகூலப்படும் கொந்திறுத்துக்காரனால் கொடுக்கப்படவேண்டும்.

எம். போஸ்,
உதவி அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ஆ ஐப்பசிமீ 20 ந் உ.

[Tender for Loading &c., Salt issued from Kalpitiya Stores.]

"உப்பு விலைக்கு வாங்குவோர்க்கு கற்பிட்டிக் குதங்களால் கொடுக்கப்படும் உப்பை 1906 ம் ஆண்டு தைமாதம் 1 ந் தேதி தொடக்கம் 1906 ம் ஆண்டு மார்கழிமாதம் 31 ந் தேதிவரைக்கும் நிறுத்துப் பாதைகளுக்கும், கரத்தைகளுக்கும் ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க" வென்று மேல் உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏஜன்றுத்துரை அவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 15 ந் தேதி 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளை கவனிக்கவேண்டியது:—

(a) பாதைகளுக்கும் கரத்தைகளுக்கும் உப்பு நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க (100) நூறு அந்தர் உப்புக்கு என்ன வீதமென்று காட்டியிருக்கவேண்டும்.

(b) நாளொன்றுக்கு கூடியளவு 1,200 அந்தர் உப்புக்குக் குறைவுபடாமல நிறுத்து ஏற்றுமதிபண்ணிக்கொடுக்க கேள்விக்காரர் ஆயத்தமாயிருக்கவேண்டியது.

(c) கேள்விக்காரர் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 15 ந் தேதிக்குமுன்னே புத்தளம் கச்சேரியில் ரூபாய் (10) பத்து ரூபாய் கட்டவேண்டும். நியமிக்கும் நியாயமான நாளைக்குள் பொருத்த உடன்படிக்கைபண்ணிக்கொள்ளத் தவறினால் இந்தக் கட்டின பணம் கவர்ணமேந்துக்காக பறிமுதலாக்கப்படும்.

(d) கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சுங்கைபோர்ந்த கணக்குக் காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரை அவர்களுக்கும் அனுப்பும் சமயம் கேள்விக்காரர் தவால் வழியாக அனுப்பவேண்டும்.

(e) கொந்திறீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளுவதற்காக கேள்விக்காரர் புத்தளத்தில் தங்களுடைய பெயரையும் தாங்களிருக்கு மிடத்தையும்பற்றி மேல்விலாசத்தைக்கொடுக்கவேண்டும்.

இவைகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விளம்பரங்களை உப்புத்துரையவர்களிடம் விளவி அறிந்துகொள்ளலாம்.

எவ் போஸ்,
உதவி ஏசன்றுத்துரை.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 18 ந் வ.

[Tender to Collect Forest Products in the Eastern Province.]

கிழக்கு மாகாணம் மட்டுக்களப்பு டிஸ்திறிக்கின் பலபற்றுகளிலுமுள்ள முடிக்குரிய காடுகளில் சேகரிக்கக்கூடியதாகவிருக்கும் பின் சொல்லப்படும் காட்டுப் புரோசனங்களை 1906 ம் ஆண்டுக்கு சேகரிக்கும் உரித்தை வாங்க விரும்புவோரின் முத்திரைவைக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 1905 ம் ஆண்டு கார்த்திகைமாசம் 13 ந் தேதி மதியம்வரைக்கும் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசண்டு அவர்கள் ஏற்றுக்கொள்ளுவார். உயர்ந்த கேள்வியையாவது வேறெந்தக் கேள்வியையாவது தள்ள அரசாட்சி ஏசண்டுக்குத் தத்துவமுண்டு. கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டால் அவர் அவ்வுரித்துகளை 1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 20 ந் வ, பிற்பகல் 1 மணியளவில் மட்டுக்களப்பு கச்சேரியில் பிரசித்த ஏலத்தில் கூறி விற்பார் :—

| | |
|---|---|
| 1. கடுக்காய் | 7. கோடைக்கிழங்கு |
| 2. காஞ்சுரங்கொட்டை | 8. உணவுக்காகிய குருவிக்கூடு |
| 3. மருப்பாசி | 9. உதிர்ந்த புள்ளிமான் கொம்பு மரைக்கொம்புகள் |
| 4. கண்டல்பட்டை | |
| 5. பொன்னுவரம்பட்டை | |
| 6. வெம்பாடம்பட்டை | |

ஒவ்வொரு பற்றிலும் காட்டுப் புரோசனங்கள் சேகரிக்கும் உரித்துப் பிரிம்பு பிரிம்பாகவேனும் அல்லது மட்டுக்களப்பு டிஸ்திறிக் முழுதுக்குமாகவேனும் விற்கப்படும்.

ஒவ்வொரு காட்டுப் புரோசனத்தையுஞ் சேகரிக்கும் உரித்துத் தனித்தனியாகவேனும் விற்கப்படும்.

கேள்வியை ஏற்றுக்கொண்டால் அக்கேள்விக்காரன் 50 ரூபாய்க்கு மேலதிகமான கேள்வியானால், கேட்ட தொகையில் நூற்றுக்கு 25 வீதம் காசு உடனே கட்டி மிகுதிப்பணத்தை பத்து நாட்களுக்குள் கட்டவேண்டும். 50 ரூபாய்க்குக் குறைந்த கேள்வியானால் முழுத்தொகையையும் உடனே கட்டவேண்டும்.

இவற்றைப்பற்றிய கொந்திசுகளும் வேறுவிளம்பரங்களும் மட்டுக்களப்புக் கச்சேரியில் கிழக்கு மாகாண அரசாட்சி ஏசண்டுவிடம் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

எச். இ. பெவன் (?),
கிழக்குமாகாண அரசாட்சி ஏசண்டுக்காக.

மட்டுக்களப்பு கச்சேரி,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 20 ந் வ.

[Tender for Toll Rents, Puttalam District.]

"புத்தளம் டிஸ்திறிக்கின் 1906 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் தேதி முடிவாகும் ஆயக்குத்தகைகளை விலைக்கு வாங்க" வென்று மேல்உரையில் எழுதி முத்திரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை உடன்படிக்கைபண்ணிக்கொள்ள விருப்பமுள்ளவர்களிடமிருந்து புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களால் 1905 ம் ஆண்டு கார்த்திகைமாதம் 15 ந் தேதி சாயந்தரம் 1 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படுமென் றிதனால் அறிவிக்கப்படுகின்றது.

கேள்விக்காரர் இதன் பின்னால் சொல்லப்படும் ஏற்பாடுகளைக் கவனிக்கவேண்டியது :—

1. கேள்விக்காரர் இதன்பின்னால் சொல்லப்படும் ஆயக்குத்தகைகளை வெவ்வேறுயக் கேள்விப்பத்திரங்கள் எழுதிக் கேட்கவேண்டும் :—

பாலக்குத்தகை.

1. கொட்டுக்கச்சிய.

பாலாவி கற்பிட்டி ரோட்டுக் குத்தகை.

2. (a) பாலாவியிலிருந்து கற்பிட்டிக்குப்போகும் பிரசித்த ரோட்டு 1-ம் கட்டைக்கிடை.

(b) பாலாவியிலிருந்து கற்பிட்டிக்குப்போகும் பிரசித்த ரோட்டு 6 ம் 7 ம் கட்டைக்கிடையில்.

ஒருத்துறையில் மாத்திரம் பணம் அறவிடப்படும்.

ஆற்றுக்குத்தகை.

3. பாலாவி.

2. ஒவ்வொரு கேள்விக்காரரும் கேள்வி கேட்க முதல் 1 ம், 2 ம், 3 ம் ஆயக்குத்தகைகள் ஒவ்வொரு ஆயக்குத்தகைக்கும் கச்சேரியில் ரூபாய் 50 வீதம் கட்டவேண்டும். அவ்விதமே காசு கட்டாத ஒரு கேள்வியாவது ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கேள்விக்காரனுடைய கேள்வியை ஏற்றுக்கொண்டால விற்பனவிலன்று கொள்விலையின் பத்திலொரு பங்கு ரொக்கம் கட்டத்தவறினாலும், மேலும் தேசாதிபதியவர்கள் அக்கேள்வியை ஏற்றுக்கொண்டால அச்சம்மதியை அறியக்கொடுத்த முப்பது நாளைக்குள்ளாக சரியான பிணைகொடுக்கத் தவறினாலும் இந்தக் கட்டின பணம் கொவர்ணமேந்துக்காகப் பறிமுதலாக்கப்படும்.

3. கொந்திறீஸ் அல்லது கடிதங்களைப் பெற்றுக்கொள்வதற்காகக் கேள்விக்காரன் தனக்குப் பதிலாகப் புத்தளத்தில் ஒரு பெயர்வழியின் மேல்விலாசத்தைக் கொடுக்கவேண்டியது.

4. கேள்வியின் வீதங்களைபிட்டு ஏதும் மாற்றுதல் அல்லது திருத்தங்கள்பண்ணினால் அந்த இடத்தில் கேள்விக்காரனின் கையொப்ப அடையாள மிடப்பட்டிருக்கவேண்டியது.

5. கேள்விப்பத்திரத்தின் இணைப்பிரதி யொன்று கொழும்பிலிருக்கும் சுங்கைபோர்ந்த கணக்குக்காரியத்தலைவர் அவர்களுக்கும் அதின் மூலப்பிரதியைப் புத்தளம் உதவி ஏசன்றுத்துரையவர்களுக்கு அனுப்பும் சமயம் கேள்விக்காரன் தவால்வழியாக அனுப்பவேண்டும்.

6. கேள்விக்கடதாசிகள் திறக்கப்படும் தினமன்று ஏதும் தேவையான கருமங்களைபிட்டுப் பேசிக்கொள்வதற்காகக் கேள்விக்காரர் கச்சேரியில் சமுகமாயிருக்கவேண்டும்.

7. பிணைக்காகக் கட்டும் சீட்டுகளைப் பரிசோதிக்க முடிமந்திராலோசனைச் சங்கத்தின் செலவுகள் அனுகூலப்படும் கேள்விக்காரனால் கட்டவேண்டும்.

எஸ். எம். பறேரா (?),
அரசாட்சி ஏசன்று.

புத்தளம் கச்சேரி,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 20 ந் வ.

[Re-sale of Arrack Rents, Batticaloa.]

இத்தால் சகலருமறிவீர்களாக, கார்த்திகைமீ 11 ந் தேதிக் கிடையில் கிழக்கு மாகாணத்துச் சாராயக் குத்தகையை யெடுத்தவர்கள், தங்களாற் போமதியான நிலுவைத்தொகையைக் கட்டத்தவறின், கார்த்திகைமீ 11 ந் தேதியாகிய சனிக்கிழமை சாயந்தரம் 2 மணியளவில் மட்டுக்களப்புக் கச்சேரியில், முன் குத்தகையாக வெடுத்தவர்களின் நட்டத்துக்குத் திருப்பி விற்பனவுக்குப் போடப்படும்.

திரும்பி விற்கும்பொழுது வாங்குகிறவன் விற்பனவு நாளன்று பத்திலொன்றைக் கட்டவேண்டியது.

சாராயக் கள்ளுக் குத்தகைகள்.

மட்டுக்களப்பு—1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 11 ந் தேதி தொடக்கம் 1906 ம் ஆண்டு மார்கழிமீ 31 ந் தேதி வரைக்கும்.

திரிகோணமலை—1905 ம் ஆண்டு கார்த்திகைமீ 11 ந் தேதி தொடக்கம் 1906 ம் ஆண்டு மார்கழிமீ 31 ந் தேதி வரைக்கும்.

எச். ஈ. பெவன் (?),
அரசாட்சி ஏசன்றுக்காக.

மட்டுக்களப்புக் கச்சேரி,
1906 ம் ஆண்டு ஐப்பசிமீ 11 ந் வ.

[Destruction of Valueless Records, Court of Requests, Colombo.]

1876 ம் ஆண்டு ஆனிமீ 1 ந் தேதியைக்கொண்ட 1 ம் இலக்க முதலாய 1877 ம் ஆண்டு கார்த்திகைமீ 8 ந் தேதியைக்கொண்ட 8,100 ம் இலக்கம் வரையிலுமுள்ள கொழும்பு றெக்குவெஸ்கோட்டின் பழைய பெறுமதியுள்ள வழக்குப் புத்தகங்தன்யாவும் 1894 ம் ஆண்டின் 12 ம் இலக்கக் கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் இதற்குத் துவக்கம் மூன்று மாதத்திற்குப்பிற்பாடு அழித்துப்போடப்படுமென்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எந்த வழக்குகளிலேனும் உடந்தைப்பட்டவர்கள் எவர்களாவது நேராகவாகுதல் தரணிமார்கள் மூலமாயாகுதல் போதிய காரணங்காட்டி அவ்விதமான வழக்குப்புத்தகங்கள் அழிக்கப்படாதென்று உருத்துப்பேசலாம்.

ஜே. எஸ். டிறீபோர்க்,
கொம்மிஷனர்.

கொழும்பு றெக்குவெஸ்கோடு,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 23 ந் உ.

[Election of Unofficial Members, Local Board, Matara.]

சுதேச சவுக்கிய தேர்ச்சி சங்கத்தைப்பற்றிய 1898 ம் ஆண்டின் 13 ம் கட்டளைச்சட்டத்தின் 11 ம் 12 ம் பிரிவின் வரைவுப்பாட்டின் பிரகாரம் மாத்துறைப் பட்டணத்தின் சவுக்கிய தேர்ச்சி சங்கத்து அரசாட்சியாரின் பணிவிடையில்லாத அங்கத்தவர்களின் மூன்று பேர்களை தெரிந்து அவர்கள் 1906 ம் ஆண்டு ஜனவரிமாதம் 1 ந் திகதி துவக்கம் 1907 ம் ஆண்டின் டிசம்பர்மாதம் 31 ந் தேதியாகிய இரண்டு வருட காலத்துக்குப் பணிவிடைசெய்ய நியமனப்படுத்தும்பொருட்டு மாத்துறைக் கச்சேரியில் வருகிற 1905 ம் ஆண்டின் டிசம்பர்மாதம் 11 ந் திகதி திங்கட்கிழமை 2 மணிக்கு ஓர் சபை கூடப்படுமென்று இத்தால் அறிவிக்கிறேன்.

யெச். எல். கிரேபெட்,
அரசாட்சி ஏசண்டு.

காலி கச்சேரி,
1905 ம் ஞு ஒக்டோபர்மீ 18 ந் உ.

[Election of Unofficial Members, Local Board, Kurunegala.]

இத்தால் தெரிவிக்கிறதென்னவானால், 1905 ம் ஆண்டு மார்கழிமாசம் 2 ந் திகதி சனிக்கிழமை காலமே 9 மணிக்கு குருநாக்கல் கச்சேரியில் 1898 ம் ஆண்டின் 13 ம் இலக்கச் சுகாதாரக் கட்டளைச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி 1906 ம் 1907 ம் ஆண்டுகளுக்கு குருநாக்கல் சுகாதார சங்கத்திற்கு மூன்று உத்தியோகஸ்தர் (கவண்மேந்து அல்லாத) அங்கத்தவர்களைத் தெரிவுசெய்கிறதற்கு ஒரு கூட்டம் வைக்கப்படும்.

எஸ். எம். பரேரஸ்,
சங்கத்தலைவர்.

சுகாதாரச்சங்கக் கந்தோர்,
குருநாக்கல், 1905 ம் ஆ. ஐப்பசிமீ 23 ந் உ.

## UNOFFICIAL ANNOUNCEMENTS.

மொரட்டுவிலிருக்கிற மோதரகே வஸ்தியன் வாஸ் ஆகிய நான் இன்று துவக்கம் மூன்று மாசத்துக்குப்பின் 1877 ம் 2 ம் இலக்கச்சட்டத்தின் 8 ம் பிரிவின்படி சிலாவ டிஸ்திறிக்கில் சிங்கள பாஷையில் பிரசித்த நொத்தாரிசுவாக பணிவிடை நடத்திவர அதியுத்தம தேசாதிபதியவர்களிடம் கேட்க போகிறேனென்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

மொ. வ. வாஸ்.
M. B. Waas.

1905 ம் ஆண்டு ஆடிமீ 10 ந் உ.

யாழ்ப்பாணம் சாவகச்சேரி அப்பாக்குட்டி கந்தையா ஆகிய நான் 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 ம் பிரிவின்படி மூன்று மாதங்களின்பின் யாழ்ப்பாண டிஸ்திறிக்கில் பிரசித்த நொத்தாரிசுவாகத் தமிழ்ப் பாஷையில் பணிவிடைநடத்திவர என்னை ஏற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களிடம் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

அ. கந்தையா.

யாழ்ப்பாணம், சாவகச்சேரி,
1905 ம் ஆண்டு ஆனிமீ 24 ந் உ.

கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆறசியப்பத்து உடகம்பளை அக்குறணையிலிருக்கும் எம். எல். அபீபு முகம்மது லெவ்வை ஆலிம் சாகிபுவாகிய நான் என்னை அக்குறணையிலும் ஆறசியப்பத்து முற்றிலும் தமிழ் பாஷையில் வேலை பார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின் அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டு 2 ம் இலக்கச் சட்டத்தில் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

எம். எல். அபீபு முகம்மது லெவ்வை ஆலிம்சாகிபு.

அக்குறணையில்,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 17 ந் உ.

கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆறசியப்பத்து உடகம்பளை அக்குறணையிலிருக்கும் எம். ஏ. முகம்மது காசிம்லெவ்வை மரைக்காராகிய நான் என்னை அக்குறணையிலும் ஆறசியப்பத்து முற்றிலும் தமிழ்ப்பாஷையில் வேலைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின்னால் விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச் சட்டத்தின் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

M. A. Mohamado Casim Lebbe Marikar.
எம். ஏ. முகம்மது காசிமலெவ்வை மரைக்கார்.

அக்குறணையில்,
1905 ம் ஆ. ஐப்பசிமீ 21 ந் உ.

கண்டி டிஸ்திறிக்கைச்சேர்ந்த ஆறசியப்பத்து உடகம்பளை அக்குறணையிலிருக்கும் எம். எல். சாகுல் அமீது லெவ்வை கதீபுவாகிய நான் என்னை அக்குறணையிலும் ஆறசியப்பத்து முற்றிலும் தமிழ்ப் பாஷையில் வேலைபார்க்கும் பிரசித்த நொத்தாரிசாக ஏற்றுக்கொள்ளும்படி இன்று துவக்கம் மூன்று மாதங்களுக்குப்பின் அதியுத்தம தேசாதிபதியவர்களுக்கு விண்ணப்பஞ்செய்ய எண்ணியிருக்கிறேனென்பதை 1877 ம் ஆண்டின் 2 ம் இலக்கச்சட்டத்தில் 8 வது பிரிவின் பிரகாரம் இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

M. L. Sahul Hameedo Lebbe Catiboo.
எம். எல். சாகுல அமீதுலெவ்வை கதீபு.

அக்குறணையில்,
1905 ம் ஆண்டு ஐப்பசிமீ 25 ந் உ.

GEORGE J. A. SKEEN, GOVERNMENT PRINTER, COLOMBO, CEYLON.